பக்கங்கள்: பதினெட்டு

# உதயன்

விலை ரூபா 15.00

www.uthayan.com

சுடர் 24 வள்ளுவர் ஆண்டு 2040 ஆடி 08 வெள்ளிக்கிழமை (24.07.2009) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 240

# இலங்கைக்கு நாணய நிதியம் வழங்கும் கடன்

# மோசமான நடத்தைக்கு கிடைக்கும் வெகுமதி

## மனித உரிமை கண்காணிப்பகம் விசனம்

கொழும்பு, ஜூலை 24

இலங்கை அரசுக்கு சர்வதேச நாணய நிதியம் கடனுதவியை வழங்க முன்வந்துள்ளமை, மோசமான நடத்தைகளுக்குக் கிடைத்த வெகுமதியாகும் என்று சர்வதேச மனித உரிமைக் கண்காணிப்பகம் விசனம் தெரிவித்துள்ளது. நாணய நிதியம் தனது அணுகுமுறையை மாற்ற வேண்டும் என்றும் கடன் வழங்கும் முடிவை மறுபரிசீலனை செய்யவேண்டும் என்றும் அது வலியுறுத்தியிருக்கின்றது.

இலங்கையில் மனித உரிமை விடயங்களில் ஏற்படும் முன்னேற்றத்தை அடிப்படையாக வைத்தே ஒவ்வொரு தொகுதி கடனுதவியும் வழங்கப்படவேண்டுமென தெரிவித்துள்ள மனித உரிமை கண்காணிப்பகம் இது குறித்து தெரிவித்துள்ளவை வருமாறு :-

இலங்கைக்கான இடைக்கால கடனுதவியின் ஒரு பகுதியாக, இலங்கை அரசை மோதலுக்கு பிந்திய மனித உரிமை மீறல்களுக்குத் தீர்வுகாண வேண்டும்என நாணய நிதியம் வலியுறுத்த வேண்டும்.

சர்வதேச நாணய நிதியத்தின் சபை இன்று இலங்கைக்கான கடனுதவி குறித்து வாக்களிக்கவுள்ளது.

இலங்கை அரசு சர்வதேச மனிதாபிமான மற்றும் மனித உரிமைகள் சட்டங்களை

(18 ஆம் பக்கம் பார்க்க)

## வேலணையிலும் சடலம் கரை ஒதுங்கியது

யாழ்ப்பாணம், ஜூலை 24

வேலணை செட்டிப்புலம் கடற்கரைப் பகுதியில் நேற்றுமுன்தினம் புதன்கிழமை கரையொதுங்கிய சுமார் 30 வயது மதிக் கத்தக்க ஆண் ஒருவரின் சடலம் நேற்று போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

ஊர்காவற்றுறை மாவட்ட நீதிபதி திருமதி ஜோய் மகாதேவன் சடலம் கரையொதுங்கிய இடத்தில் விசாரணையை மேற்கொண்டார்.

மேற்குறித்த சடலத்துடன் இதுவரை தீவுப்பகுதியில் கரையொதுங்கிய சடலங்களின் எண்ணிக்கை 6 ஆக உயர்ந்துள்ளது. குறித்த கடற்கரைப்பிரதேசத்தில் இந்திய

(18 ஆம் பக்கம் பார்க்க)

## நாணய நிதியத்தின் கடன் தொடர்பாக அடுத்த மாதம் சபையில் அறிக்கை

### பிரதி நிதி அமைச்சர் தகவல்

கொழும்பு, ஜூலை 24

சர்வதேச நாணய நிதியத்திடமிருந்து இலங்கை அரசுக்குக் கிடைக்கவுள்ள நிதி உதவி தொடர்பாக அடுத்த மாதம் 6ஆம் திகதி நாடாளுமன்றில் அரசு அறிக்கை ஒன்றை வெளியிடும் என்று பிரதி நிதி அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய நேற்று நாடாளுமன்றில் கூறினார்.

இந்த நிதி உதவி தொடர்பாக அரசு நாடாளுமன்றிற்கு விளக்கமளிக்க வேண்டும் என்று எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க நேற்று நாடாளுமன்றில் விடுத்த வேண்டுகோளுக்கு பதிலளித்த போதே பிரதி நிதி அமைச்சர் இவ்வாறு கூறினார்.

இது தொடர்பாக ரணில் கூறியவை வருமாறு:-

சர்வதேச நாணய நிதியத்திடமிருந்து பெறப்படவுள்ள நிதி உதவி தொடர்பாக இந்த நாடாளுமன்ற அமர்வுக்குள் விளக்கமளிக்கப்படும் என்றுபிரதி நிதி அமைச்சர் கூறியிருந்தார். ஆனால், இன்றுடன் (நேற்று) அமர்வு முடிகின்றது.

அடுத்த அமர்வு அடுத்த மாதம் 6 ஆம் திகதி மட்டில் நடைபெறும். அன்றைய தினம் இது தொடர்பான விளக்கத்தை நாம் எதிர்பார்க்கின்றோம். அப்படி இல்லாது போனால், நிதி உதவி கோரி நாணய நிதியத்திடம் அனுப்பிய கடிதத்தையாவது அரசு சபையில் சமர்ப்பிக்க வேண்டும் - என்றார்.இதற்குப் பதிலளித்த பிரதி நிதி அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய அடுத்த மாதம் 6ஆம் திகதி இது தொடர்பான விளக்கத்தை நாம் சபையில் முன் வைப்போம் - என்றார். (அ-சி)

கல்விச்சுடர்

உள்ளே

ஆசிரியர் பொன்.சக்திவேல் தொகுத்து வழங்கும் இலகுவழி ஆங்கிலம்

## அகதிகளைத் தடுத்து வைத்திருப்பதை ஆட்சேபித்து உயர் நீதிமன்றில் மனு

கொழும்பு, ஜூலை 24

வன்னி இடம்பெயர்ந்தோர் முகாமில் ஒரு பாடசாலை அதிபரான பெண்மணியையும் அவரது நோயாளிக் கணவனையும், இரண்டு பிள்ளைகளையும் வெளியேற விடாமல் தடுத்துவைத்திருப்பது சட்டத்துக்கு முரணானது எனத் தெரிவித்து, அவர்களின் சார்பில் அந்தப் பெண்மணியின் தந்தையார் கொழும்பில் உயர்நீதிமன்றில் நேற்று அடிப்படை உரிமை மீறல் மனுவொன்றைத் தாக்கல் செய்திருக்கின்றார்.

நாச்சிக்குடா அரச தமிழ்க்கலவன் பாடசாலையில் அதிபராக இருந்த நிர்மலராஜ் இராஜேந்தினி, அவரது கணவர் ஜேசுதாஸ் நிர்மலராஜ், அவர்களின் பிள்ளைகளான ஜேசுதாஸ் நிரஞ்சினி, ஜேசுதாஸ் புகழினி ஆகியோரை விடுவிக்குமாறு உத்தரவிடவும், அவர்களை இதுவரைகாலமும் சட்டவிரோதமாகத் தடுத்து வைத்திருந்தமைக்காக இருபது லட்சம் ரூபா நஷ்டஈடு வழங்குமாறும் உத்தரவிடக்கோரி வவுனியாவில் தற்போது தங்கியுள்ள கணபதிப்பிள்ளை ஏகாம்பரம் என்பவர் இந்த மனுவைத்தாக்கல் செய்துள்ளார்.

நாச்சிக்குடாவில் இருந்து குடும்பத்துடன் இடம்பெயர்ந்து வந்த தங்களில் எழுபது

(18 ஆம் பக்கம் பார்க்க)

## மடு உற்சவத்துக்குச் செல்வோரின் பதிவை கணனி மயப்படுத்த படைத்தரப்பு ஏற்பாடு

கொழும்பு, ஜூலை 24

மன்னார் மடு திருத்தல உற்சவம் ஒகஸ்ட் ஆறாம் திகதி ஆரம்பமாகவுள்ள நிலையில், அங்கு செல்லவிருக்கும் பக்தர்களுக்கான பாதுகாப்பு ஏற்பாடுகளுக்கான நடவடிக்கைகளை படைத் தரப்பினர் மேற்கொண்டு வருகின்றனர் - என்று பொலிஸ் தலைமையகம் தெரிவித்தது.

இதன் பிரகாரம் மடு உற்சவத்துக்குச் செல்லும் பக்தர்கள் படைத் தரப்பினரால் பதிவுக்கு உட்படுத்தப்படுவர். அந்தப் பதிவினைக் கணனி மயப்படுத்த ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன என்றும் தலைமையகம் அறிவித்துள்ளது. (18 ஆம் பக்கம் பார்க்க)

## அமெரிக்க உதவிச் செயலர் நாளை இலங்கை விஜயம்

கொழும்பு, ஜூலை 24

அமெரிக்க இராஜாங்க அமைச்சின் குடிப்பரம்பல், அகதிகள் மற்றும் குடிப்பெயர்வு ஆகிய துறைகளுக்குப் பொறுப்பான புதிய உதவிச் செயலாளராக நியமிக்கப்பட்டிருக்கும் எரிக் பி சுவாட்ஸ் நாளை சனிக்கிழமை இலங்கைக்கு விஜயம் செய்கின்றார்.

தமது இலங்கை விஜயத்தின்போது வடபகுதியில் இடம்பெயர்ந்தோரின் முகாம்களுக்கு விஜயம் செய்து நிலைமைகளை நேரில் கண்டறியும் அவர், அரச அதிகாரிகளையும் சிவில் சமூகப் பிரதிநிதிகளையும் சந்தித்து உரையாடுவார் என்றும்

(18 ஆம் பக்கம் பார்க்க)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# யாழ்ப்பாணம் நல்லூர் பிரதேச செயலர் பிரிவுகளுக்கு உட்பட்ட அரச அலுவலர் கூட்டம்

யாழ்ப்பாணம், ஜூலை 24

யாழ். மாவட்டத்தில் மாவட்ட சிவில் பாதுகாப்புக் குழுக்களை அமைப்பது தொடர்பிலான கூட்டம் மின்வலு அமைச்சரும் மாவட்ட சிவில் பாதுகாப்புக் குழுவின் இணைப்பாளருமான மஹிந்தானந்த அளுத்கமகேயினால் நாளை சனிக்கிழமை மு.ப. 11 மணிக்கு யாழ். மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது.

இதன்படி யாழ்ப்பாணம், நல்லூர் பிரதேச செயலாளர்கள் குறித்த இரு பிரிவுகளையும் சார்ந்த கிராம அலுவலர்கள், சமுர்த்தி அபிவிருத்தி அலுவலர்கள் மற்றும் விவசாய ஆராய்ச்சி அலுவலர்கள் பெரும்பாக அலுவலர்கள், யாழ்ப்பாணம், நல்லூர் பிரிவுக்குட்பட்ட வலயக்கல்விப் பணிப்பாளர்கள், பாடசாலை அதிபர்கள், அரச தனியார்துறை தலைவர்கள், வீதி அபிவிருத்தி திணைக்கள அலுவலர்கள், இலங்கை மின்சார சபை, இலங்கை போக்கு வரத் துச் சபை அலுவலர்கள், யாழ். போதனா வைத்திய சாலை பணிப்பாளர்கள், பிராந்திய சுகாதார வைத்திய அதிகாரி, யாழ்ப்பாணம், நல்லூர் பிரிவுக்குட்பட்ட பொதுச் சுகாதாரபரிசோதகர்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு யாழ். அரச அதிபர் கேட்டுள்ளார். (அ-07)


கோப்பாய் மத்தி நாவலடி
திருவருள் மிகு ஸ்ரீ மகா முத்துமாரி அம்பாள் தேவஸ்தானம்

**இரதோற்சவம்**

(24.07.2009 - வெள்ளிக்கிழமை)



மேற்படி உற்சவம் வெள்ளிக்கிழமை காலை 7 மணிக்கு கிரியைகளுடன் ஆரம்பமாகி காலை 9 மணிக்கு வசந்த மண்டப பூசை நடைபெற்று மு.ப. 10.30 மணிக்கு நடைபெறும்.

மஹோற்சவ பிரதம குரு
வேதாகம சங்கிரகர் வேதஞானசுரபி
சிவஸ்ரீ கிருஷ்ண சோதீஸ்வரக் குருக்கள் (ஊரெழு)
தேவஸ்தான பிரதம குரு
பிரம்ம ஸ்ரீ சி.சிவசரவணபவ சிவமோகனசர்மா (கோப்பாய்)
மங்கள வாத்தியம் :- சுதன் குழுவினர் (இருபாலை)
ஒலிஒளி அமைப்பு :- எஸ்.நிரோஜன் (பழையவீதி, கோப்பாய்)
அலங்காரம் :- கு.யோகன் (இணுவில்)

இரதோற்சவ விழா சிறப்புற வாழ்த்தும்
**மாஸ்டர் வீடியோ அன் போட்டோ**
உரிமையாளர் லோ.கிரேதாகரன், கோப்பாய் மத்தி
மாரியம்மன் வீதி, நாவலடி,
கோப்பாய் மத்தி, கோப்பாய்.



**ARRUL COM**

இன்று முதல் ......
அதிவேக இன்ரநெற் BROAD BAND இணைப்பின் மூலம் உங்கள் இணைய தேவைகளை நிறைவேற்றிட...........
வெளிநாடுகளுக்கான தொலைபேசி அழைப்புக்கள் 3/=
உங்கள் எதிரில் அழைப்பில் இருப்பவரை பார்த்துக்கதைப்பதற்கு நிமிடத்திற்கு 3/=
இல-: 01,பிறவுண் வீதி, நாவலர் வீதி சந்தி யாழ்ப்பாணம்
தொலைபேசி -: 2226113


## 31 ஆம் நாள் நினைவஞ்சலி




# அவுஸ்திரேலிய குடியுரிமைக்கான விதிமுறைகளில் பெரும் மாற்றம்

மெல்போர்ன், ஜூலை 24

அவுஸ்திரேலிய அரசு அந்நாட்டு குடியுரிமை பெறுவதற்கான சட்டவிதிமுறை களை கடுமையாக்கி உள்ளது. ஆங்கில தேர்ச்சியற்றவர்களுக்கு புதிய விதிகளின் படி, குடியுரிமை பெறுவதற்கான வாய்ப்பு நிராகரிக்கப் பட்டுவிடும்.

அவுஸ்திரேலியாவில் வசிப்பதற்கும், வேலை செய்வதற்கும் விரும்பும் மாணவர்கள் புதிய விதிகளின்படி ஆங்கில தேர்ச்சி குறித்து தேர்வு எழுதவேண்டும். இது கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

அவுஸ்திரேலியாவில் தங்கியுள்ள பிற நாடுகளைச் சேர்ந்த வர்த்தகர்கள் ஆஸ்திரேலியாவில் நிரந்தரமாக தங்கவேண்டுமானால், இம்மாதம் முதல் ஆங்கிலத் திறமையை வளர்த்துக் கொள்ளவேண்டும் என்றும் விதிமுறைகள் திருத்தி அமைக்கப்பட்டுள்ளன.

கடந்த காலத்திலும் ஆங்கிலத் தேர்ச்சி அவசியமாக இருந் தது. எனினும், ஆங்கிலத்தில் பெரிய அளவிலான திறமை எதிர் பார்க்கப் படவில்லை. குறைந்த பட்ச திறமை இருந்தால் மட்டும் போதும்; டிப்ளோமா படிப்பு படித்தால் கூட போதும் என்ற நிலைப் பாடுகளே இருந்தன.

இந்த நிலைப்பாடுகளை இறுக்கமான சட்டவிதிகள் தற் போது மாற்றிவிட்டன. மாணவர்கள் ஆங்கிலத் தேர்ச்சியை தேர்வு மூலம் வெளிப் படுத்தவேண்டும் என்ற நியதி கட்டாயப்படுத் தப்பட்டுவிட்டது.(சி)

# வேலணையில் 2 நாள்கள் நுளம்பு ஒழிப்பு சிரமதானம்

வேலணை, ஜூலை24

தீவுப் பகுதி தெற்கு (வேலணை) பிரதேச செயலகத்திறகுட்பட்ட 30 கிராம உத்தியோகத்தர் பிரிவுகளிலும் டெங்கு நுளம்பு பரவும் இடங்களை பாரிய சிரமதானப் பணி மூலம் அழிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுமாறு கிராம உத்தியோகத்தர்கள் பணிக்கப்பட்டுள்ளனர்.

இத்திட்டத்திற்குப் பொது நிறுவனங்கள் மற்றும் இளைஞர் அணிகளை ஒன்று திரட்டி நாளை சனிக்கிழமையும் ஞாயிற்றுக்கிழமையும் திட்டம் வெற்றிபெற ஒத்துழைப்பு வழங்குமாறு வேலணைப் பிரதேச செயலாளர் கேட்டுள்ளார். (அ-167)


**விற்பனைக்கு**

நல்ல நிலையிலுள்ள TVS Victor GL வெடிப்பு மொடல் NP HB XXXX தொடரிலக்கம் உடைய மோட்டார் சைக்கிள் விற்பனைக்குண்டு.
தொடர்பு - 060 221 7172, 0776557498.


**தவறிவிட்டது**

67/2, சீனிவாசகம் வீதி, கொட்டடி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியுடைய நா.தனேந்திரன் என்பவரின் மோட்டார் சைக்கிள் சம்பந்தமான சகல முக்கிய ஆவணங்களும், திறப்பும் (18.07.2009) சனிக்கிழமை யாழ். மத்திய கல்லூரியில் நடை பெற்ற நடமாடும் சேவையின் போது தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் மேற்குறிப்பிட்ட முகவரியுடன் தொடர்பு கொள்ளவும். சன்மானம் வழங்கப்படும்.


**A/L மாணவர்களுக்கான மாபெரும் கருத்தரங்கு**

Arts Acadamy உம் தான்சன் கல்வி நிலையமும் இணைந்து நடத்தும்
ஆரம்பம்: சனி, ஞாயிறு 8.00
Logic: திரு.சயந்தன், ஜெயந்தன்
Drama: திரு.மங்களேஸ்
Christianity: வே.சுனிதா
Political Science: தற்போதைய பிரபல ஆசான்
Agriculture: திரு.விக்கி

பிரதம பரீட்சையில் மதிப்பீட்டாளர்கள் மதிப்பீட்டாளர்களின் எதிர்பார்ப்பு வினா விடைகள்

தனிப்பாட அனுமதி 200/=
தமிழ் பிரிவு II தமிழ்ந்திரன்
**தான்சன் கல்வி நிலையம்**
ஸ்ரான்லி வீதி, (மக்கள் வங்கி அருகே)


## கைதடி அ.த.க. பாடசாலையில் தமிழ்த்தின விழா நாளை

யாழ்ப்பாணம், ஜூலை 24

கைதடி, நாவற்குழி அ.த.க. பாடசாலையில் தமிழ்த்தின விழா நாளை சனிக்கிழமை மு.ப. 9.30 மணிக்கு பாடசாலை அதிபர் சி. சோமசுந்தரம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக தென்மராட்சி வலய ஆரம்பக்கல்வி உதவிக்கல்விப் பணிப்பாளர் த. ஸ்ரீஸ்கந்தராசா கலந்து கொள்வார். சிறப்புரையை நாவற்குழி மகாவித் தியாலய அதிபர் திருமதி வசந்தா மேகலிங்கம், யாழ். கல் வியியற் கல்லூரி விரிவுரையாளர் இ.கம[illegible] ஆகியோர் நிகழ்த்துவர்.

# அளவெட்டி முத்துமாரி அம்மன் பெருந்திருவிழா

அளவெட்டி தெற்கு,வெளிவயல் திருவருள்மிகு ஸ்ரீ முத்துமாரி அம்பாள் தேவஸ்தான வருடாந்தப் பெருவிழா நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 7 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி 7 ஆம் திகதி வெள்ளிக்கிழமை வரை 13 தினங்கள் நடைபெற உள்ளது.

ஒகஸ்ட் மூன்றாம் திகதி திங்கட்கிழமை சப்பறத் திருவிழாவும் 4 ஆம் திகதி தேர்த்திருவிழாவும் நடைபெறும்.

தினமும் காலை 8.30 மணி தொடக்கம் பகல் திருவிழாவும் மாலை 3.30 மணியிலிருந்து இரவுத் திருவிழாவும் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (160)

**வாழ்த்துகின்றோம்**



நல்லூர் கல்விக் கோட்டத்தின் கோட்டக்கல்வி அதிகாரியாக பொறுப்பேற்றிருக்கும்
**சி. மாணிக்கராஜா**
(SLPS-1, B.A. (Hons), Dip.in ed., M.ed., SPLS - Canada)
அவர்களை வாழ்த்துவதில் பெருமகிழ்வடைகின்றோம்.

செ.சிவசோதி குடும்பம்
(வயரிங், பைப் பொருத்துநர்)
அரசடி வீதி, 4ஆம் ஒழுங்கை, கந்தர்மடம், நல்லூர்.

**கண்ணீர் அஞ்சலி**

இராமநாதன் நுண்கலைக் கழகத்தில் பணிபுரியும் ஊழியரான இரவிக்குமாரின் தந்தையார்
**சி.வல்லி**

கடந்த (23.07.2009) புதன்கிழமை சிவபதமடைந்தார் . அவரது பிரிவால் துயருற்றிருக்கும் அன்னாரது குடும்பத் தவர்களுக்கும் உறவினர்களுக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்து எமது கண்ணீரைக் காணிக்கையாக்குகின்றோம்.

இராமநாதன் நுண்கலைக் கழக,
கல்விசார், கல்விசாரா ஊழியர்கள்.


**மனோதத்துவ வைத்தியம் (GENERAL PSYCHOTHERAPHY)**

பிரபல மனோதத்துவ நிபுணர் Dr.P.ஆறுமுகம்
*மீண்டும் 24.07.2009 - 31.07.2009 வரை யாழில்*

மருந்துகள் குறிப்பிட்டளவே கொண்டுவர முடியும் என்பதால் சம்பந்தப்பட்ட நோயாளர்கள் தங்களுடைய பாதிப்புகளை உடனே தொலை பேசியில் (0719315664, 0777569205, 0652224019) தொடர்பு கொண் டால் அவர்களுக் கேற்றவாறு மருந்துகளை கொண்டுவருவார்.

ஆரம்ப நிலை மனநோய் விரைவில் சுகமாக்கலாம். நீரிழிவு நோய்க்குத் திறமான மூலிகை மருந்து உண்டு. ஆஸ்துமா, மாதவிடாய்க் கோளாறுகள், வெள்ளைபோகுதல், குழந்தைப் பேறின்மை, வாதநோய், தலையிடி, பல் முரசு கரைதல் போன்ற நோய்களுக்கு வைத்தியம் உண்டு.

இளைஞர்கள் ஞாபகத்திறன் குறைவு, கல்வியில் நாட்டம் குன்றிப் பயம், நடுக்கம், நரம்புத்தளர்ச்சி உண்டாகி ஆளுமை குறைந்து தாழ்வு மனப்பான்மை உண்டாகக் காரணமான இளமையில் ஏற்படும் தவிர்க்க முடியாத தவறுகளைத் திருத்தி வாழ்வில் வெற்றிபெற பிரபல மனோதத்துவ நிபுணர் Dr.P. ஆறுமுகம் அவர்களைச் சந்தியுங்கள்.

**Sexuel Disorders** (ஆண்மை சக்தி குறைவு)
(பிறவியில் ஆண்மையற்றவர்களைத் தவிர) எந்தவித மோசமான தாம்பத்திய கோளாறுகளையும் மனோதத்துவ ரீதியிலும் திறமான மூலிமை மருந்துகளாலும் 45 நாள்களில் சுகமாகலாம். பலர் சுகமாகியுள்ளனர்.

இல. 12, சிவகுருநாதர் லேன் [Expo முன் ஒழுங்கை], யாழ்ப்பாணம். தொ.பே.: 0719315664


**மரண அறிவித்தல்**

*ஞானப்பிரகாசம் மனுவேற்பிள்ளை*

பருத்தித்துறை புனித அந்தோனியார் பதியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட ஞானப்பிரகாசம் மனுவேற்பிள்ளை(21.07.2009) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஞானப் பிரகாசம் - அன்னம்மா தம்பதியினரின் அன்பு மகனும், திருச்செல்வநாயகியின் பாசமிகு கணவரும், மேரி புஸ்பவதி (கொழும்பு), மேரிமெற்றில்டா (நோர்வே), ஜெயசீலி (ஆசிரியை, யா/தும்பளை சிவப்பிரகாச மகாவித்தியாலயம், பருத்தித்துறை), கிளின்ரன் பாபுஜி (சுவிஸ்), வசந்த நிலோஜினி (சுவிஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையும், காலஞ்சென்ற முத்துராசா மற்றும் றொகாசியன், அன்ரனி தேவராஜா, விஜி, லீனஸ் ஜெயா ஆகியோரின் மாமனும், அன்ரனியூட், வினித்தா, பெமினா, தர்சினி, றொசானி, டில்சாந், டில்சியா, திவ்யா, ஜென்சி, ஜெனிபர், நிசான், நிலோஜன், நிமித்தி, நீலு, நீனு ஆகியோரின் பேரனும் செபினா, சோபியா, சுகன்யா ஆகியோரின் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் அவரது இல்லத்தில் இருந்து கடந்த (21.07.2009) செவ்வாய்க்கிழமை அன்று பி.ப 3 மணிக்கு கலட்டி புனித அந்தோனியர் ஆலயத்திற்கு எடுத்துச் செல்லப் பட்டு இரங்கல் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்ட பின்னர் கோரியடி சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
அன்ரனி தேவராசா (ஜெபா)
(மருமகன்).
4ம் குறுக்குத் தெரு,
பருத்தித்துறை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

## கறுப்பு ஜூலைக் கொடூரத்தின் நினைவழியா நாள்கள் இவை...!

இலங்கைத் தமிழர்களின் தேசிய ஆன்மாவையே ஓர் உலுப்பு உலுப்பி, அதில் ஆழமான வடுவை ஏற்படுத்திய கறுப்பு ஜூலைக் கலவரத்தின் 'நினைவழியா நாள்கள்' இவை.

சுமார் மூவாயிரம் அப்பாவித் தமிழர்களின் உயிர்களைக் காவு கொண்டு, தமிழர்களின் சுமார் பத்தாயிரம் வீடுகளையும், பல நூற்றுக்கணக்கான வர்த்தக நிலையங்களையும் தீக்கு இரையாக்கி சாம்பல் மேடாக்கி, கணக்கு வழக்கில்லா சொத்துக்களை நாசமாக்கி, பெரும் பூகம்பமாய் தென்னிலங்கையில் வெடித்து அடங்கிய இனக் கலவரத்தின் 26 ஆம் ஆண்டுப் பூர்த்தி வேளையில் தமிழினம் இன்று நிற்கின்றது.

சிங்கள ஆட்சிப் பீடத்தின் பின்புல ஆதரவோடு திட்டமிடப்பட்டு, தென்னிலங்கைத் தமிழர்களைக் குறிவைத்துத் தாக்கி அழிக்கும் விதத்தில் கட்டவிழ்த்து, ஏவி விடப்பட்ட இந்தக் கொடூரமே இலங்கைத் தீவில் தமிழர் - சிங்களவர் ஆகிய இரு தரப்பினரிடையேயும் நிரந்தர விரிசலுக்கு - நித்திய முரண்பாட்டுக்கு - உரமுள்ள அத்திவாரமாயிற்று.

ஐக்கிய இலங்கைக்குள் தமிழர்களும், சிங்களவர்களும் ஒருவருக்கொருவர் விட்டுக்கொடுத்துப் புரிந்துணர்வோடு, பரஸ்பர இணக்கத்தோடு சகோதரர்களாக வாழலாம் என்ற நம்பிக்கை நிரந்தரமாக மரணித்துப்போய் அதை ஆழப் புதைக்கும் சவப்பெட்டியின் இறுதி ஆணியாகக் கறுப்பு ஜூலைக் கலவரம் தைக்கப்பட்டது.

தங்களின் நீதி, நியாயமான அபிலாஷைகளை - அவாவை - விருப்பை ஜனநாயக அரசியல் செயற்பாடுகள் மூலமோ அல்லது நாடாளுமன்ற நடவடிக்கைகள் மூலமோ வென்றெடுக்க முடியாது என்ற கசப்பான உண்மையைத் தமிழர் நெஞ்சங்கள் எங்கும் ஆழப் பதித்து, அவர்களின் உரிமைக்கான போராட்டப் பாதையை ஆயுத வழிக்கு நெட்டித் தள்ளியதே இந்தக் கறுப்பு ஜூலைக் கொடூரம்தான் என்றால் அது மிகையாகாது.

அன்று 1983 ஜூலை மூன்றாம் வாரத்தின் முடிவில் - இலக்கு வைத்துத் தாக்கிக் கொன்றொழிக்கப்பட்ட தமிழர்களின் இரத்தத்தோடு இலங்கையில் ஓடத் தொடங்கிய குருதி ஆறு, கடந்த இருபத்தியாறு ஆண்டுகளாகப் பெரும் பிரளயமாக இத்தீவை அதில் மூழ்கவைத்து இப்போதுதான் சற்று ஓய்வுக்கு வந்திருக்கின்றது எனக்கொள்ளலாம்.

ஆனால் தமிழர்களைப் பொறுத்தவரை அவர்களின் அடிப்படைப் பிரச்சினைகளுக்கு முடிவோ, நியாயமான அபிலாஷைகளுக்கு நீதியான தீர்வோ, அடக்குமுறையிலிருந்து விடுதலையோ இன்னும் கிட்டியபாடாகவில்லை.

இன்னும் விரிவாகச் சொல்வதானால், அன்று சட்டியில் இருந்தபடி அடக்குமுறைத் தீயில் வெந்தவர்கள் இன்று நேரடியாக அடுப்புக்குள் வீழ்ந்து கருகிக்கொண்டிருக்கின்றார்கள் என்பதுதான் தமிழர்களின் கதையாக - கதியாக - உள்ளது.

ஜனநாயக - மிதவாத அரசியலிலும் தோற்றுப்போய், ஆயுதப் போராட்டத்திலும் பின்னடைவு கண்டு, அநாதரவான நிலையில் தவித்துப் போய் நிற்கின்றது தமிழினம். இந்த நிர்க்கதி நிலையின் வெப்பியாரம் ஒவ்வொரு தமிழனினதும் மனதையும் நெருப்பாகச் சுட்டு உள்ளே தீயாகக் கனல்கின்ற போதும் அதை வெளிப்படுத்திப் பிரதிபலிப்பைக் காட்டக்கூட வக்கின்றி வாடும் அவலத்தில் அவர்கள்.

1983 ஜூலையில் எரிமலையாய் வெடித்து, சூறாவளியாய் அனர்த்தங்களை விளைவித்து அடங்கிப்போன இன வன்முறைகளை அடுத்துத் தமிழினம் எப்படி வேதனையில் துவண்டு கிடந்ததோ, அதே நிலைமைதான் அந்த இனத்துக்கு இன்றும். வன்னியில் பெருங் கொடூரமாக - பிரளயமாக - வெடித்து அடங்கிய கோர யுத்தத்தின் இறுதியில் அப்படித்தான் உருக்குலைந்து, வாடி வதங்கிக் கிடக்கின்றது தமிழினம்.

அன்று தென்னிலங்கையில் உறவுகளை, உடைமைகளை, உயிர்களைத் தொலைத்துத் தமிழர் தாயகத்துக்கு ஏதிலியாக வந்த தமிழர்கள் இன்று தமிழர்களின் தாயகப் பூமியிலேயே அகதிகளாக - முள் வேலிகளுக்குப் பின்னால் - லட்சக் கணக்கில் முடக்கப்பட்டுக்கிடக்கும் பேரவலம்.

1983 ஆடிக் கலவரத்துக்குப் பின்னர் பத்து லட்சம் தமிழர்கள் வெளிநாடுகளுக்குப் புலம் பெயர்ந்து விட்டனர். நாட்டுக்குள்ளேயே சுமார் ஐந்து லட்சத்துக்கும் அதிகமான தமிழர்கள் இடம்பெயர வைக்கப்பட்டு அகதிகளாக்கப்பட்டுள்ளனர். ஒரு லட்சத்துக்கும் அதிகமானோரின் உயிர்கள் காவு கொள்ளப்பட்டுவிட்டன. பல்லாயிரக் கணக்கானோர் அவயவங்களை இழந்து அங்கவீனர்களாக்கப்பட்டுள்ளனர். சொத்து, உடைமை அழிவோ கணக்கில் அடங்காதது; எண்ணிப் பார்க்க இயலாதது. கல்வி, பாரம்பரியம், விழுமியம் என்ற உயர் பண்பியல்புகளில் ஏற்பட்டுள்ள இழப்புகள் தலை முறை, தலைமுறையாக - சந்ததி, சந்ததியாக - பெரும் பின்னடைவையும் பாதிப்புகளையும் தமிழனுக்குத் தந்து நிற்கின்றன.

மேற்படி கறுப்பு ஜூலைக் கலவரம் இலங்கை இனப்பிரச்சினை விடயத்தில் இந்தியாவின் நேரடியான தலையீட்டுக்கான இடைவெளியையும், பொருத்தமான புறநிலையையும், தகுந்த நியாயப்பாட்டையும் அச்சமயத்தில் தந்து நின்றது.

ஆனால் அதைக் கையாள்வதில் தனது புவியியல் நலன் சார் விடயங்களை மட்டும் முன்னிறுத்திய புதுடில்லியின் போக்கு தன்கையைத் தானே சுட்டுக்கொள்ளும் மோசமான அனுபவத்தை - பட்டறிவை - அதற்குக் கொடுத்தது.

அந்த வரலாற்றுத் தவறு காரணமாக, கறுப்பு ஜூலைக் கலவரத்துடன் ஆரம்பமான இலங்கை மீதான இந்தியாவின் நேரடித் தலையீடு, 1990 மார்ச் மாதம் இலங்கையில் தமிழ் பகுதியை அதுவரை ஆக்கிரமித்திருந்த இந்தியப் படைகளின் விலகலோடு அப்போதைக்கு முடிவுக்கு வந்தது.

அதன் பின்னர் அண்மைக்காலத்தில் புலிகளுக்கு எதிரான இலங்கை அரசின் யுத்தத்தில் மறைமுகமாகப் பங்கு கொண்டதன் மூலம் மீளவும் தீவிரமடையத் தொடங்கிய - இலங்கை மீதான இந்திய ஈடுபாடு - இப்போது, வன்னியில் சிக்குண்டுள்ள மூன்று லட்சம் தமிழ் அகதிகள் விடயம், இலங்கைத் தமிழர்களுக்கு அதிகாரங்களைப் பகிர்ந்தளிக்க வேண்டிய கொழும்பின் பொறுப்பில் புதுடில்லியின் கடப்பாடு ஆகியவை காரணமாக மீண்டும் உச்சக்கட்டத்தை எட்டும் சூழல் ஏற்பட்டிருக்கின்றது.

கறுப்பு ஜூலைக் கலவரத்தை அடுத்து கட்டவிழ்ந்த விடயங்களில் தவறிழைத்து வாங்கிக் கட்டிக் கொண்ட புதுடில்லி, இனியாவது - இப்போது கிடைத்துள்ள இந்தச் சந்தர்ப்பத்திலாவது - நேர்மையாகவும், நீதியாகவும் செயற்பட்டுத் தமிழர்களுக்கு நியாயம் கிட்ட வழி செய்யுமா.....?

## வன்னி முகாம்களில்

# இம்மாத முதல் இருவாரத்தில் 160 அகதி மக்கள் உயிரிழப்பு!

### தவிர்க்கமுடியாது என்கிறார் அமைச்சர் மஹிந்த சமரசிங்க

கொழும்பு, ஜூலை 24

வன்னியிலிருந்து இடம் பெயர்ந்து அகதி முகாம்களில் வாழும் மக்களில் இம்மாதம் முதல் இரண்டு வாரங்களில் 160 பேர் உயிரிழந்தனர். இத்தகைய நெருக்கடியான முகாம்களில் நாளாந்தம் ஆறு அல்லது 7 பேர் உயிரிழப்பர். அதைத் தவிர்க்க முடியாது.

-இவ்வாறு அனர்த்த முகாமைத்துவம் மற்றும் மனித உரிமைகள் அமைச்சர் மஹிந்த சமரசிங்க நேற்று முன்தினம் நாடாளுமன்றத்தில் தெரிவித்தார்.

நாடாளுமன்ற ஒத்திவைப்பு சமயத்தில் மக்கள் விடுதலை முன்னணியின் குருநாகல் மாவட்ட உறுப்பினர் அநுரகுமார் திசாநாயக்க, வடபகுதியில் மக்களை மீளக் குடியேற்றும் நடவடிக்கைகள் பற்றி எழுப்பிய கேள்வி ஒன்றுக்குப் பதிலளிக்கையிலேயே அமைச்சர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் கூறியவை வருமாறு :-

அகதி முகாம்களில் தங்கியுள்ளவர்களில் புலி உறுப்பினர்களை இனங்கண்டுகொள்ளும்வரை முகாம்களில் உள்ளவர்கள் வெளியேறுவதற்குக் கட்டுப்பாடு விதிக்கப்பட்டுள்ளது.

அகதி முகாம்களில் தங்கியுள்ள புலி உறுப்பினர்களை இனம்கண்டு கொள்ளும் நடவடிக்கை ஏற்கனவே மேற்கொள்ளப்பட்டுள்ளது எனத் தெரிவித்த அமைச்சர் இம் முகாம்களில் இருந்த கர்ப்பிணிகள், முதியோர்கள் மற்றும் சிறுவர்கள் உள்ளிட்ட ஒன்பதாயிரம் பேர் ஏற்கனவே விடுவிக்கப்பட்டுள்ளனர்.

இம்மாதம் முதல் இரண்டு வாரங்களில் முகாம்களில் இருந்தவர்களுள் 160 பேர் மரணமடைந்துள்ளனர். இத்தகைய நெருக்கடியான முகாம்களில் நாளாந்தம் ஆறு அல்லது ஏழுபேர் மரணமடைவதைத் தவிர்க்க முடியாது.

அதேசமயம், யுத்தத்தால் சிதறிப் போன 5 ஆயிரம் குடும்பங்கள் இப்போது நிவாரண முகாம்களில் ஒன்றிணைக்கப்பட்டுள்ளனர். அகதிகளாக்கப்பட்ட மக்களுக்கு அளிக்க வேண்டிய சகல நிவாரணங்களையும் அரசு சிரத்தையாகச் செய்துவருகின்றது என்பதில் எனக்கு எவ்விதமான சந்தேகமும் இல்லை. அம்மக்கள் பெற வேண்டிய சகல வசதிகளும் பெற்றுக் கொடுக் கப்படுகிறது - என்றார்.

(சி)

## டி.எஸ்.ஐ.நிறுவனம் நடத்தும் பாடசாலைகளுக்கிடையிலான கரப்பந்தாட்டப் போட்டி

யாழ்ப்பாணம், ஜூலை 24

யாழ்.மாவட்ட பாடசாலைகளுக்கிடையிலான கரப்பந்தாட்டச் சுற்றுப் போட்டி ஒன்று டி.எஸ்.ஐ.நிறுவனத்தினரால் நடத்தப்படவுள்ளது.

பன்னிரண்டு வயதுப் பிரிவுக்குட்பட்ட ஆண், பெண் இருபாலாரும் இப்போட்டியில் பங்குபற்றலாம். பங்குபற்ற விரும்பும் பாடசாலைகளின் பொறுப்பாசிரியர்களை இன்று வெள்ளிக்கிழமை மு.ப. 10 மணிக்கு யாழ். மத்திய கல்லூரிக்கு வருகை தருமாறு இணைப்பாளர் கேட்டுள்ளார்.(அ-7)

## புகைப்படக் கண்காட்சியும் நாடகவியற் கருத்தரங்கும்

மருதனார்மடம், ஜூலை 24

உள்ளூராட்சி வாரத்தையொட்டி வலி.தெற்கு பிரதேச சபையினால் பிரதேச புகைப்படக் கண்காட்சியும் நாடகவியல் கருத்தரங்கும் நடத்தப்பட உள்ளன.

இன்று வெள்ளிக்கிழமை காலை 9 மணி முதல் சுன்னாகம் பொது நூலகத்தில் இடம்பெறும் இந்நிகழ்விற்கு வலி.தெற்கு பிரதேச சபைச் செயலாளர் திருமதி சுலோச்சனா முருகநேசன் தலைமை வகிப்பார்.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக கிழக்குப் பல்கலைக்கழக மொழித்துறைச் சிரேஷ்ட விரிவுரையாளர் சி. ஜெயசங்கரும் சிறப்பு விருந்தினராக வலி.வடக்குப் பிரதேச செயலக கலாசார அலுவலர் மா.அருள்சந்திரனும் கலந்து கொள்வர்.

காலை 9 மணிக்கு புகைப்படக் கண்காட்சி திறந்து வைக்கப்படுவதுடன் 9.30 மணிக்கு நாடகமும் அரங்கியலும் கருத்தரங்கும் ஆரம்பமாகும். இக்கருத்தரங்கிலே தொடக்கவுரையை பிரதம விருந்தினர் சி.ஜெயசங்கர் ஆற்றுவார். கருத்தரங்கின் வளவாளர்களாக மா.அருள்சந்திரன், பி.கணேசராசா, எஸ். ரி.குமரன், எஸ்.ரி.அருள்குமரன், எஸ்.சிவரூபன், கு.மங்களேஸ்வரன் ஆகியோர் கலந்து கொள்வார்கள். கருத்தரங்கில் பங்குபற்ற விரும்பும் மாணவர்கள் சுன்னாகம் பொது நூலகத்தில் முன்கூட்டியே பதிவு செய்யுமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளனர்.

புகைப்படக் கண்காட்சி நாளை சனிக்கிழமை இடம்பெறும்.

(அ-55)

## விடுதலைப்புலிகளின் தலைவர் கே.பி.

கொழும்பு, ஜூலை 24

தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவராக கே.பி. என்று அழைக்கப்படும் செல்வராஜா பத்மநாதன் நியமிக்கப்பட்டுள்ளார் என இணையத்தளங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இது தொடர்பாக கடந்த செவ்வாய்க்கிழமை வெளியிடப்பட்டுள்ள அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது :-

வரலாற்றின் தேவை கருதி - பிறந்திருக்கும் புதிய சூழலுக்கு ஏற்ப - புதிய வழிமுறைகளுக்கு ஊடாகப் போராட்டத்தை முன்னெடுத்துச் செல்லும் நோக்கத்துடன் - எமது இயக்கத்தின் நிர்வாகக் கட்டமைப்பு மீள் - ஒழுங்கமைப்புச் செய்யப்பட்டுள்ளது. நீண்ட - விரிவான - ஆழமான கருத்துப் பரிமாற்றங்களின் இறுதியாக எமது நிர்வாகச் செயற்குழுவால் எடுக்கப்பட்ட கூட்டு முடிவுக்கு அமைய எமது இயக்கத்தின் அனைத்துலக உறவுகளுக்கான பொறுப்பாளரான செல்வராஜா பத்மநாதன் - இனிவரும் காலத்தில் தேசியத் தலைவர் அவர்களின் சிந்தனைகளுக்கு அமைவாகப் போராட்ட நகர்வுகளை வழிநடத்திச் செல்வார் என்பதை எமது அன்புக்குரிய மக்களுக்கும், இந்த உலக சமூகத்திற்கும் அதிகாரபூர்வமாக அறியத்தருகின்றோம் என தமிழீழ விடுதலைப்புலிகளின் தலைமைச் செயலகத்தில் இருந்து வெளியிடப்பட்டுள்ள அதிகாரபூர்வ அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது என அந்த இணையத் தளங்கள் தெரிவித்தன. எனினும் இந்த அறிக்கை எந்த நாட்டிலிருந்து வெளியிடப்பட்டது என்பது குறித்த விவரம் எதுவும் இல்லை.

(க-10)

# மீளக்குடியமர்வை இலங்கை அரசு தாமதித்தால் சர்வதேசத்திடம் இருந்து நிதி உதவி பெறுவது கடினம்

### ஐ.நா.வதிவிடப் பிரதிநிதி சொல்கிறார்

கொழும்பு, ஜூலை 24

மோதல்கள் காரணமாக இடம் பெயர்ந்த மக்கள் தொடர்ந்தும் வருடக்கணக்கில் முகாம்களில் தங்க வைக்கப்படும் பட்சத்தில் அவர்களுடைய நலன்புரி நடவடிக்கைகளுக்கு சர்வதேச சமூகம் நிதி வழங்க முன்வருவது கடினமாக இருக்கும் என இலங்கைக்கான ஐ.நாவின் வதிவிடப் பிரதிநிதி நீல் புஹ்னே ஐ.ஆர்.ஐ.என். செய்திச்சேவைக்குத் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, இலங்கையில் மனிதாபிமானப் பணிகளை முன்னெடுப்பதற்கு அவசியமான நிதியுதவியில் 36 வீதம் மாத்திரமே தந்போதைக்குக் கிடைத்துள்ளது என ஐ.நாவின் மனிதாபிமான அலுவலகத்தின் செய்திச் சேவையான ஐ.ஆர்.ஐ.என். குறிப்பிட்டுள்ளது.

இது குறித்து அச்செய்திச்சேவை மேலும் தெரிவித்துள்ளவை வருமாறு:-

மோதல்கள் காரணமாக இடம்பெயர்ந்த 3 லட்சத்துக்கும் அதிகமானவர்களை மீள் குடியமர்த்துவதற்கான தெளிவான திட்டம், சர்வதேச சமூகத்தின் நிதியுதவி தொடர்ந்தும் கிடைப்பதற்கு அவசியமானது என ஐ.நா. தெரிவிக்கின்றது.

மக்கள் தமது பகுதிகளில் மீளக் குடியேறுவதற்கான தெளிவான திட்டமும், கால எல்லையும் மிகவும் முக்கியமானவை என இலங்கைக்கான ஐ.நாவின் வதிவிடப் பிரதிநிதி நீல் புஹ்னே தெரிவித்தார்.

இடம்பெயர்ந்த 3 லட்சம் மக்களும் வருடக்கணக்கில் முகாம்களில் தங்கவைக்கப்படும் பட்சத்தில் நீண்ட காலத்திற்கு நிவாரண நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்கான நிதியுதவி கிடைப்பது கடினமாக அமையலாம் என அவர் தெரிவித்தார்.

இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ நவம்பர் மாதத்திற்குள் இடம்பெயர்ந்தவர்களில் 60 வீதமானவர்களை மீளக் குடியமர்த்துவதாகத் தெரிவித்துள்ளனர். இது வாக்குறுதியல்ல, இலக்கு மட்டுமே என அவர் தெரிவித்துள்ளார்.

எனினும், முகாமில் அமைக்கப்படும் சில கட்டடங்கள் நிரந்தரமானவையாக தென்படுகின்றன என்று மனிதாபிமானப் பணியாளர்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

இலங்கைக்கான பொது மனிதாபிமானத் திட்டத்திற்கான நிதி முன்னர் மதிப்பிடப்பட்ட 155 மில்லியன் அமெரிக்க டொலரை விட அதிகமாக 270 மில்லியன் டொலராக அதிகரித்துள்ளது.

எனினும் கடந்த 21ஆம் திகதி வெளியிடப்பட்ட ஆண்டின் நடுப்பகுதிக்கான ஆய்வில், இலங்கையின் அபிவிருத்திக்குத் தேவையான அளவில் 36 வீதம் மாத்திரமே கிடைத்துள்ளது என தெரிவிக்கப்பட்டுள்ளது.

தற்போது அதிகளவு முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. குறிப்பாக இடம் பெயர்ந்த மக்களுக்கு விநியோகங்களை கொண்டு செல்ல முடிகின்றது என நீல் புஹ்னே தெரிவித்தார்.' (அ-சி)

### நாளை


| | |
|---|---|
| ஆடி 09 | 25.07.2009 |
| | சனிக்கிழமை |
| திதி: | சதுர்த்தி |
| | பி.இ. 12.31 வரை |
| நட்சத்திரம்: | பூரம் |
| | பி.இ. 12.31 வரை |

சதுர்த்தி விரதம், ஆடிப்பூரம்
[illegible]: 09.02 - 10.32
[illegible]: 09.02 - 10.32

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 31ஆம் நாள் நினைவஞ்சலி

மலர்வு 11 ★ 02 ★ 1942



உதிர்வு 24 ★ 06 ★ 2009

### அமரர் தம்பு வைத்தியநாதன்

24.06.2009 அன்று சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவரின் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் இன்று (24.07.2009) வெள்ளிக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும்.


இந்த நிகழ்விலும் தொடர்ந்து நடைபெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளும் வண்ணம் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்பு டன் அழைக்கின்றோம்.

*மாரியம்மன் வீதி,*
*திருநெல்வேலி.*

**மனைவி, பிள்ளைகள்,**
**மருமகள், பேரன்.**

## 31ஆம் நாள் நினைவஞ்சலி

தோற்றம் 24 ★ 11 ★ 1953



மறைவு 24 ★ 06 ★ 2009

### அமரர்
### சின்னத்துரை இரவீந்திரன்

யாழ்ப்பாணம் திருமகள் வீதி, அரியாலையைப் பிறப்பிடமாகவும் வவுனியா, றம்பைக்குளத்தை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்துரை இரவீந்திரன் அவர்கள் கடந்த (24.06.2009) புதன்கிழமை அன்று இறைபதம் அடைந்தார்.

எமது குடும்ப மூத்த தலைவரான அன்னாரின் 31ஆம் நாளான இன்று அவரின் ஆத்ம சாந்திக்காக இறைவனை பிரார்த்திக்கின்றோம்.

*சின்னத்துரை இரவீந்திரன்,*
*109, திருமகள் வீதி,*
*அரியாலை, யாழ்ப்பாணம்.*

சகோதரர்கள், மச்சான்மார்,
மருமக்கள்.
*தகவல்:*
(86962) சி.இரகுநாதன் (சகோதரன்)

## மரண அறிவித்தல்

### *மாரிமுத்து இராசதுரை*



அராலி தெற்கைப் பிறப்பிடமாகவும் சுழிபுரம் கிழக்கை வசிப்பிடமாகவும் கொண்ட மாரிமுத்து இராசதுரை (உரிமையாளர், (S.M.R) சுருட்டுத் தொழிலகம்) நேற்று (23.07.2009) வியாழக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான மாரிமுத்து - முத்துப்பிள்ளை தம்பதியரின் இளைய மகனும் தங்கச்சிப்பிள்ளையின் அன்புக் கணவரும் சின்னப்பு - செல்லத்தின் மருமகனும் இராசேஸ்வரி (பிரான்ஸ்), இராஜேஸ்வரன், (S.M.R சுருட்டுத் தொழிலகம்), இராசகேசினி, ரமணி ஆகியோரின் அன்புத் தந்தையும் செல்வராசா (பிரான்ஸ்), மகாலட்சுமி, மகேஸ்வரன், சிவனொளி ஆகியோரின் அன்பு மாமனும் நோமன் - புஸ்பலதா (பிரான்ஸ்), காத்தியாயினி, நித்தியாயினி, ராகுலன், சிந்துஜன், அஜித்தா, அஜந்தன், அனுசியா, அனுசன், ராதிகா, ரதீபன் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆகாசின் (பிரான்ஸ்) அன்புப் பூட்டனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (24.07.2009) வெள்ளிக்கிழமை மு.ப 11 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் நண்பகல் 12 மணிக்கு திருவடி நிலை இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*வீரபத்திரர் கோயிலடி,*
*சுழிபுரம் கிழக்கு.*
T.P: 0217900753

*தகவல்:*
**இ.இராஜேஸ்வரன் (மகன்)**
**S.M.R சுருட்டுத் தொழிலகம்.**

## தவறிவிட்டது

இல 6, செட்டித்தெரு, நல்லூர், யாழ்ப்பாணம் என்னும் முகவரியைச் சேர்ந்த துரைசிங்கம் பாக்கிய நந்தினி என்பவரது தே.அ.அட்டை (646992028V) கடந்த (20.07.2009) அன்று யாழ்ப்பாணத்திற்கும் நல்லூருக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் நாவலர் வீதி சந்தியிலுள்ள பாப்பையா கடையில் ஒப்படைத்துதவவும். சன்மானம் வழங்கப்படும்.

## இரண்டாம் ஆண்டு நினைவுகளில்



தோற்றம் 04 ★ 08 ★ 1956

மறைவு 15 ★ 08 ★ 2007

### அமரர் சிவகுரு செல்வநேசன்

திதி: திருதியை

இரண்டாண்டுகள்
இன்றோடு கடந்தன
உங்கள் கனவுகள்
நிஜமாகியுள்ள
இந்தக் கணங்களில்
காலனவன் சடுதியாய்
அழைத்துச் சென்றான்
அப்பா!

உருண்டோடும்
காலச்சக்கரத்தில்- எம்
உயரிய பயணமதில்
உங்கள் நாமம் என்றும்
நிலைத்திருக்கும்
நித்திய நினைவுக்குள்
நீங்காதிருப்பீர்கள்
எம்மோடு.....

கல்வளை வீதி,
சண்டிலிப்பாய்.

நித்திய நினைவுகளில்...
**குடும்பத்தினர்.**

## கரப்பந்தாட்டச்சுற்றுப் போட்டி பிற்போடப்பட்டுள்ளது

யாழ்ப்பாணம், ஜூலை 24

ஆவரங்கால் நடராசா இராமலிங்க வித்தியாலயத்தில் நாளைமறுதினம் ஞாயிற்றுக்கிழமை நடைபெறவிருந்த கரப்பந்தாட்ட சுற்றுப்போட்டி தவிர்க்க முடியாத காரணத்தால் பிற்போடப்பட்டுள்ளது.

மேற்படி போட்டி ஓகஸ்ட் முதலாம் திகதி காலை 8 மணிக்கு மேற்படி வித்தியாலயத்தில் நடைபெறும் என யாழ். மாவட்ட கரப்பந்தாட்ட சங்க செயலாளர் அறிவித்துள்ளார்.

(அ-7)

## கைக்குண்டுவீச்சில்; இருவர் காயம்

கொழும்பு, ஜூலை 24

மட்டக்களப்பு, அக்கரைப்பற்றுப் பகுதியிலுள்ள மதுபானக் கடை ஒன்றின் மீது நேற்று முன்தினம் இரவு மேற்கொள்ளப்பட்ட கைக்குண்டுத் தாக்குதலில் இருவர் காயமடைந்தனர் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

காயமடைந்தவர்கள் கல்முனை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர்.

மோட்டார் சைக்கிளில் வந்த இனந்தெரியாத நபர்களால் இத்தாக்குதல் நடத்தப்பட்டது எனத் தெரிவிக்கப்பட்டது.

மதுபானசாலையின் அனுமதிப்பத்திரம் தொடர்பாக இடம்பெற்ற தகராறு காரணமாகவே இத்தாக்குதல் இடம்பெற்றிருக்கலாம் எனப் பொலிஸார் சந்தேகம் வெளியிட்டுள்ளனர்.

எனினும், இச்சம்பவம் தொடர்பாக எவரும் இது வரை கைது செய்யப்படவில்லை.

## 31 ஆம் நாள் நினைவலைகள்



### திருமதி
### தங்கரத்தினம் செல்லத்துரை

*தோற்றம்:* *04★08★1931* *மறைவு:* *24★06★2009*

எமது பாடசாலையில் ஆசிரியராகக் கடமையாற்றும் திருமதி கமலாவதி கணேசமூர்த்தி அவர்களின் அன்புத் தாயார் திருமதி தங்கரத்தினம் செல்லத்துரை அவர்களின் ஆத்மா சாந்தி அடைய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

யாழ் புனித ஜோன் போஸ்கோ
வித்தியாலயம்.

அதிபர், ஆசிரியர்கள்,
மாணவர்கள்,
பாடசாலை அபிவிருத்திச் சங்கம்.

## இரண்டாம் ஆண்டு ஆறாத நினைவுகள்



### அமரர் சின்னர் சின்னத்தம்பி

(ஓய்வூதியர், நகரசபை மின் ஊழியர், சாவகச்சேரி)

*திதி: திருதியை (24.07.2009)*

*உதயம்:* *30★08★1934* *அஸ்தமனம்:* *15★08★2007*

"தோன்றில் புகழொடு தோன்றுக,
இன்றேல் தோன்றாமை நன்று"

ஆண்டிரண்டு சென்றதையா
ஆறவில்லை எம் மனது!
மங்கல நாண் பூட்டி - எனை
மகிழ்வுடனே வாழ வைத்தாய்!
மக்கட் செல்வமெம்மை
மாண்பு கொண்டு வாழ
வழி காட்டி நின்றாய்!
மருமக்கள் மனம்மகிழ
கருமங்கள் செய்து நின்றாய்!
ஆறாத வாஞ்சையோடு
பேரர் எமை சிறகணைத்தாய்!
இறையவனின் திருப்பாதம்
இணைந்தே அமைதி கொள்வீர்
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

*துணாவில் மேற்கு,*
*சாவகச்சேரி.*

*என்றும் உங்கள் நினைவுகளுடன்:*
பாசமிகு மனைவி, மக்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

## மரண அறிவித்தல்

### மரியநாயகம் காணிக்கைமுத்து (நல்லபிள்ளை)



மாதகலைப் பிறப்பிடமாகக் கொண்ட மரியநாயகம் காணிக்கைமுத்து (நல்லபிள்ளை) 20.07.2009 திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற மரியநாயகத்தின் (விஸ்வலிங்கம்) அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான அலேசுப்பிள்ளை - ஞானசவுந்தரி தம்பதியினரின் அன்பு மகளும் வேலாயுதம்பிள்ளை - லட்சுமிப்பிள்ளை தம்பதியினரின் மருமகளும் காலஞ்சென்ற யோசப்பின் அன்புச் சகோதரியும் காலஞ்சென்ற நல்லம்மாவின் மைத்துனியும் காலஞ்சென்ற அன்ரன் மற்றும் விமலாதேவி (இந்தியா), வைலற், ராணி, திருச்செல்வம் (லண்டன்), ஜஸ்ரின் (கனடா), காலஞ்சென்ற குலசிங்கம் மற்றும் அருள்நாயகம் (பிரான்ஸ்), ஜெகநாதன் (உரிமையாளர், சிவராதா, நியூசிவராதா, நியூலிற்றில் இந்தியன்) ஆகியோரின் பாசமிகு தாயும் இருதயம் (இந்தியா), திருநாவுக்கரசு (இந்தியா), சந்திரன், இராசநாயகம், சாந்தி (லண்டன்), சுகுணா (கனடா), ஜெயந்தி (கொழும்பு), ஐடா ஆகியோரின் மாமியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் நாளை (25.07.2009) சனிக்கிழமை பி.ப. 3 மணியளவில் புனித தோமையார் ஆலயத்தில் இரங்கல் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு, புனித தோமையார் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.


*செபஸ்தியார் கோவிலடி,*
*பிரதான வீதி, மாதகல்.*

**தகவல்:**
**ஜெகநாதன் (மகன்)**
**(சிவராதா உரிமையாளர்).**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்.மாநகர சபைக்கான தேர்தலை கூட்டமைப்பு எவ்வாறு நோக்குகின்றது

## விளக்குகிறார் சுரேஷ் பிரேமச்சந்திரன் எம்.பி.



மக்களின் கைகளில் ஆட்சி அதிகாரத்தை ஒப்படைக்கும் ஜனநாயக பூர்வமான தேர்தல் வழிமுறைகள் எப்பொழுதும் ஏற்றுக்கொள்ளக் கூடியதும் விரும்பக்கூடியதுமே. ஆனால் நடக்க இருப்பது ஜனநாயக பூர்வமான தேர்தல்தானா என்பது பெரியதொரு கேள்விக்குறி. வன்னி மண்ணில் 50 ஆயிரத்துக்கும் மேற்பட்ட தமிழ் மக்களைப் பலி எடுத்து இன்னும் அவர்களது அந்தியேட்டிக்கிரியைகளே முடியாத நிலைகளிலும், ஏறத்தாள மூன்று லட்சம் மக்கள் அகதிகளாகி குடிதண்ணீர் இன்றி, மருத்துவமின்றி, உணவின்றி, இருப்பிடமின்றி, பதினைந்தாகவும் இருபதாகவும் அன்றாடம் செத்துக்கொண்டிருக்கையிலும், 350க்கு மேற்பட்ட சிறார்கள் தாயின்றி தந்தையின்றி அநாதைகளாக்கப்பட்ட சூழ்நிலையிலும், 3500 மேற்பட்ட சிறார்கள் மந்தப்போசாக்கால் பாதிக்கப்பட்ட சூழ்நிலையிலும், 10000 மேற்பட்ட மக்கள் அம்மை நோயினால் பாதிக்கப்பட்ட சூழ்நிலையிலும், கழிப் பிடம் செல்லவும், குளிக்கவும், சாப்பிடவும் பலமணி நேரம் வரிசையில் காத்திருக்க வேண்டிய சூழ்நிலையிலும் மாநகர, நகரசபைத் தேர்தல்கள் இன்று முக்கியமானதா என்றால் நிச்சயமாக இல்லை.

அரசாங்கத்தின் கொடூர யுத்தத்தால் அகதிகளாக்கப்பட்ட மக்களைப் பராமரித்தும் அவர்களுக்கான மருத்துவ உதவிகளைச் செய்தும் அவர்களை அவர்களது சொந்த இடங்களில் குடியமர்த்துவதுமே அரசின் இன்றைய உடனடிப் பணியாக இருக்க முடியும். ஆனால் அரசாங்கத்தைப் பொறுத்தவரை மூன்று லட்சம் மக்களின் அடிப்படை மனிதாபிமானப் பிரச்சினைகளிலும் விட இராணுவத்தின் வெற்றி விழாக்களும் தேர்தல்களுமே முக்கியமானவையாக உள்ளன.

இலங்கையின் ஒரு பகுதி மக்கள் கணவனை இழந்து, மனைவியை இழந்து, பிள்ளைகளை இழந்து இன்னும் பல ஆயிரம் இரத்த உறவுகள் இருக்கின்றனரா இல்லையா என்று தத்தளிக்கும் போது, அரசாங்கத்துக்கு இராணுவத்தின் வெற்றி விழாக்களும், மாநகர, நகரசபைத் தேர்தல் களுமே முக்கியமானதாக உள்ளன.




மிகவும் நெருக்கடியான துன்பம் தோய்ந்த இச்சூழ்நிலையில் இவ்வாறான தேர்தல்கள் அவசியமில்லை என்பதை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வலியுறுத்தியது. ஆனால் அரசாங்கம் எமது கருத்துக்களைக் கேட்கத் தயாராக இருக்கவில்லை. எனவேதான் தமிழ் மக்கள் மிகப் பாரதூர மான இன்னல்களை அனுபவிக்கும் இந்நேரத்திலும் நாம் இத்தேர்தலில் போட்டியிட்டு அரச தரப்பினரைத் தோற்கடிப்பதன் மூலம் தமிழ் மக்களின் மன உணர்வுகளை வெளியுலகத்திற்கு தெரியப்படுத்துவது மாத்திரமல்லாமல் அரசாங்கத்தின் மனித. உரிமை மீறல்களையும் கொலைக் கலா சாரங்களையும் அரைவேக்காட்டுத்தனமான தீர்வுகளையும் தமிழ் மக்கள் ஏற்றுக்கொள்ள வில்லை என நாம் அழுத்தி உரைக்கலாம்.

இந்த நாட்டின் ஒரு தேசிய இனமாக தமிழ் மக்களுடன் பேசித்தீர்க்க வேண்டிய ஒரு பிரச் சினையை பாரிய யுத்தமாக மாற்றிய பெருமை சிங்கள பௌத்த அரசாங்கங்களையே சாரும். இன் றும் கூட தமிழ் மக்களின் நியாயமான உரிமைகளைக் கொடுத்து இப் பிரச்சினையைத் தீர்க்க இலங்கை அரசாங்கம் தயாராக இல்லை. தமிழ் மக்களை இனப்படுகொலை செய்து; அவர்களை அகதிகளாக்கி அவர்களது இடங்களை கபளீகரம் செய்து யுத்தத்தில் வென்றுவிட்டால் தமிழ் மக்க ளின் உரிமைகள் எதுவும் கொடுக்கத் தேவையில்லை என்றே சிங்கள அரசியல் தலைமைகள் நம்பு கின்றன. எனவே விடுதலைப் புலிகளுடனான யுத்தத்தை சிங்கள அரசாங்கம் வென்றுள்ள இன் றைய சூழ்நிலையில் தமிழ் மக்களின் நியாயமான கோரிக்கைகள் யாவும் நிராகரிக்கப்படும் என்பதே யதார்த்தமான உண்மை.

தமிழ் மக்களைக் கொலை செய்து குவித்து, அகதிகளாக்கி, அவர்களை சொந்த மண்ணில் இருந்து விரட்டி, அச்சுறுத்தி, நாடற்றவர்களாக்கி, அடி மைகளாக வைத்துக்கொள்ள விரும்புகின்ற அரசாங்கத்தின் சகதிக்குள் மாண்டு போகப்போகிறோமா அல்லது எமது மண்ணில் நாம் தலைநிமிர்ந்து வாழப் போகின் றோமா என்பதை முடிவு செய்யவேண்டிய காலட்டம் இது.

நாம் இந்த நாட்டில் சிறுபான்மையினராக இருக்கலாம் ஆனால் மிக நீண்ட வரலாற்றுப் பாரம்பரியத்தையும் கலைகலாசார பண்பாட்டு பாரம்பரியத் தையும் மிகவும் செழுமையானதும் தொன்மையானதுமான தமிழ்மொழியை யும் கொண்டு வாழ்ந்தவர்கள்.

சிங்கள மக்கள் இம் மண்ணில் வந்து குடியேறுவதற்கு முன்பாக தமிழ் மக்கள் இந்த மண்ணில் வாழ்ந்ததாக வரலாற்று ஆவணங்கள் வெளிப்படுத் துகின்றன. அவ்வாறான பாரம்பரியங்களைக் கொண்ட எமது மண், எமது மொழி, எமது கலைகலாசாரம், பண்பாடு ஆகியவை பாதுகாக்கப்பட வேண்டும். எமது தனித்துவம், எமது வாழ்வுரிமை பாதுகாக்கப்பட வேண்டும். சிங்கள மக்கள் எண்ணிக் கையில் பெரும்பான்மையினர் என்பதற்காக தமிழர்களது நிலங்களை கபளீகரம் செய்யவும் எமது மொழி, கலை, கலாசாரம், பண்பாடுகளை அழித்தொழிக்கவும் நாம் இடமளிக்க முடியாது. அதே போன்று எமது பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாக இருக்கும் சிங்கள அரசாங்கத்திடம் எமது பாதுகாப்பை ஒப்படைக்கவும் முடியாது.

தமிழ் மக்களும் சிங்கள மக்களும் கூட்டாகவும் ஒற்றுமையாகவும் இந்த நாட்டில் வாழ வேண்டுமென இலங்கை அரசாங்கம் விரும்புகின்ற பட்சத்தில் தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமையை ஏற்றுக்கொண்டு அவர்கள் வரலாற்றுப் பூர்வமாக, பாரம்பரியமாக வாழ்கின்ற பூமியில் தமது மொழி, கலாசாரம், பண்பாடு, பொருளாதாரம், பாதுகாப்பு மற்றும் தமிழ்ச் சமூகத்தின் வளர்ச்சி நோக்கிய சகல அதிகாரங்களையும் உள்ளடக்கிய மாநிலசுயாட்சி ஒன்று உரு வாக்கப்படவேண்டும். இதற்கு தமிழ்மக்கள் உறுதியாக நிற்கின்றார்கள் என்பதை வெளிப் படுத்துவதற்கு இந்த மாநகரசபைத் தேர்தல்கள் தமிழ்மக்களால் பயன்படுத்தப்பட வேண் டும் என்பதே தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் நிலைப்பாடாகும்.

தமிழ் மக்கள் இனப்படுகொலைக்கு உள்ளாகி இருப்பதால் சிறிலங்கா அரசாங்கம் சர்வதேச சமூகத்திடம் இருந்து அந்நியப்பட்டிருக்கின்றது. சர்வதேச சமூகத்தின் முன் குற்றவாளிக் கூண்டில் நிறுத்தப்பட்டிருக்கின்றது. தமிழினப் படுகொலை தொடர்பாக சர்வதேச சமூகத்தின் கேள்விகளுக்கு பதில் சொல்ல நிர்ப்பந்திக்கப்பட்டிருக்கின்றது. அது மட்டுமல்லாமல் தமிழ் மக்களின் நியாயமான கோரிக்கைகள் சர்வதேச சமூகத்தால் புரிந்து கொள்ளப்பட்டும் இருக்கின்றது. இந்நிலையில் நாம் துணிவுடன் ஒன்றுதிரண்டாலே சர்வதேச சமூகமும் எமது கோரிக்கைகளை ஆதரிக்கும்.

அது மாத்திரமல்ல தமிழ்மக்கள் மத்தியில் இருந்து சிங்கள அரசு தனிமைப்படுத்தப் பட வேண்டும். அதன்மூலம் சிங்கள அரசு தமிழர்களின் உரிமைகளைக் கொடுக்கும் வண் ணம் அழுத்தங்கள் அதிகரிக்கப்பட வேண்டும். மேற்கண்ட அடிப்படையில் தமிழ் தேசியக் கூட்டமைப்பானது அரசுடன் செயற்பட்டு வரும் கட்சிகளையும் குழுக்களையும் இணைத்து ஒரு பரந்துபட்ட தமிழ் கூட்டமைப்பை உருவாக்க முயற்சி செய்து அப்படியான கட்சிகளுடன் பேச்சுவார்த்தையும் நடத்தியது. ஆனால் துரதிஷ்டவசமாக அரசின் சலுகைகளை விட்டுவர இவர்கள் யாரும் தயாராக இருக்கவில்லை. ஆனால் நடைபெற இருக்கும் மாநகர சபைத் தேர்தலில் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் வெற்றியானது ஒரு பரந்துபட்ட தமிழர் ஐக்கியத்தின் தேவையை இவர்களுக்கு உறுதிபட உரைப்பதாய் இருக்க வேண்டும்.

விடுதலைப்புலிகள் முற்றுமுழுதாக அழிக்கப்பட்டுவிட்டார்கள் என்ற அடிப்படை யில் சர்வதேச சமூகத்திடமிருந்து கப்பல்கள், வானூர்திகள் போன்றவற்றிற்கான அதி களவான காப்புறுதி குறைக்கப்பட வேண்டுமெனவும் இலங்கை அரசுக்கு எதிரான தடை கள் அகற்றப்பட வேண்டும் எனவும் சிறிலங்கா அரசாங்கம் சர்வதேச சமூகத்தை வற் புறுத்தி வருகின்றது. எனவே விடுதலைப்புலிகள் அழிக்கப்பட்ட இச்சூழ்நிலையில் உயர் பாதுகாப்பு வலயங்கள் அகற்றப்பட்டு மக்கள் தமது சொந்த நிலங்களில் வாழவும், விவசாயம் செய்யவும் அனுமதிக்கப்பட வேண்டும். எமது மண்ணை ஆக்கிரமித்து இருக்கும் சிங்கள இராணுவத்தினர் இங்கிருந்து வெளியேற்றப்பட வேண்டும். மாந கரசபைகள் சுதந்திரமாக செயற்படக்கூடிய வகையில் இராணுவ ஆக்கிரமிப்பு, இராணுவ நிர்வாகம் போன்றவை அகற்றப்பட வேண்டும். இத்தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வெற்றியானது தமிழ் மக்களின் மனஉணர்வை துலாம்பரமாக வெளிப்படுத்தும் ஒரு தேர்தல் என்பதைக் கவனத்தில் எடுத்து செயற்படுமாறு தமிழ் மக்களை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வேண்டிக்கொள்கிறது.

# இழந்துபோன உங்கள் உரிமைகளை வென்றெடுக்க ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்புடன் இணையுங்கள்

## கட்சி அலுவலகத் திறப்பு விழாவில் அமைச்சர் மகிந்தானந்த



யாழ்ப்பாணம், ஜூலை 24

நல்ல நிர்வாகத்துடன் கூடிய ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தலைமையிலான ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியுடன் இணைந்து பல வருடங்களாக இழந்திருந்த உங்களது உரிமைகளை உரிமையாக்கிக்கொள்ளுங்கள் என மின்சக்தி அமைச்சர் மகிந்தான்ந்த அளுத்கமகே தெரிவித்தார்.

வடமாகாண தேர்தலுக்காக தேர்தல் மேற்பார்வை செயலகம் ஒன்றினை யாழ்ப்பாணம் இல 70, றக்கா வீதியில் திறந்து வைத்துப் பொதுக்கூட்டத்தில் உரையாற்றுகையிலேயே அமைச்சர் இவ்வாறு கூறினார்.

யாழ்ப்பாண மாநகரசபைத் தேர்தல் தொடர்பாக ஐக்கியமக்கள் சுதந்திர முன்னணி நிறுத்தியுள்ள வேட்பாளர்களின் ஒத்துழைப்புடன் இந்தக் கூட்டம் நடைபெற்றது. மேல்மாகாண சபை முன்னாள் முதலமைச்சர் றெஜினோல்ட் குரேயும் இதில் கலந்து கொண்டார்.

வடபிரதேசத்தில் நடைபெற்ற யுத்தம் காரணமாக வடக்கு மக்கள் தெற்கு மக்களோடு சிலசில சந்தேகங்களை உருவாக்கிக்கொண்டு கழித்த காலங்கள் முடிவடைந்தது என்பதை நினைவுபடுத்திய அமைச்சர், அனைத்தையும் மறந்து நாம் எல்லோரும் நாட்டை அபிவிருத்தி செய்து எங்களுடைய எதிர்காலத் தேவைகளை நிறைவேற்றிக் கொள்வதற்காக ஒன்றுபடுவோம் என்றார்.

தற்போது யாழ்ப்பாண மக்கள் எதிர்நோக்கி உள்ள விலைவாசி உயர்வு, உற்பத்திப் பொருள்களை தென்பகுதிக்குக் கொண்டு செல்வதற்காக போக்குவரத்தில் உள்ள தற்போதைய சிக்கல்களை சீராக்குவதற்கு ஒரு ஒழுங்கினை மேற்கொள்வதற்கு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் ஆலோசனைப்படி விரிவான வேலைத்திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளதாகவும் குறைந்த விலையில் பொருள்களை பெற்றுக்கொடுப் பதற்காக ஒகஸ்ட் முதலாம் திகதி ச.தொ.ச திறக்கப்படவுள்ளதாகவும் அமைச்சர் கூறி னார்.

யாழ்.மாநகரசபை எல்லைக்குள் உள்ள சகல வீதிகளையும் 'காபெற்' செய்வதற்கும் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன எனவும் கூறினார்.

யாழ்ப்பாணத்தை மையமாகக் கொண்ட சகல அரச நிறுவனங்களிலும் உள்ள வெற்றிடங்களை நிரப்ப நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்றும் அமைச்சர் கூறினார்.

யாழ்.மக்களின் மீன்பிடித் தொழில், விவசாய நடவடிக்கைகளில் ஏற்படும் பிரச்சினைகளுக்கும், சுகாதாரம் மற்றும் கல்வித் துறைகளில் உள்ள பிரச்சினைகளும் விரைவில் தீர்க்கப்படும் என்றார் அமைச்சர்.

# அரசு தமிழர்களுக்கு உரிய தீர்வை வழங்காது விட்டால் மக்களை ஒன்று திரட்டி ஜனநாயக ரீதியில் போராடுவோம்

## நல்லூர் கூட்டத்தில் மாவை சேனாதிராஜா உரை



யாழ்ப்பாணம், ஜூலை24

அரசு உரிய தீர்வை வழங்காது விட்டால் மீண்டும் மக்களை ஒன்று திரட்டி ஜனநாயக ரீதியில் போராட்டத்தை முன்னெடுப்போம். இவ்வாறு தெரிவித்தார் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசா.

மாநகர சபைத் தேர்தல் தொடர்பான தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் முதலாவது பிரசாரக்கூட்டம் நேற்று முன்தினம் புதன்கிழமை பிற்பகல் நல்லூர் முத்திரைச் சந்திக்கு அண்மையில் நடைபெற்றது. இதில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

தமிழ்தேசியக் கூட்டமைப்பின் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான சுரேஷ் பிரேமச்சந்திரன், பத்மினி சிதம்பரநாதன் ஆகியோரும் கூட்டமைப்பின் முதன்மை வேட்பாளர். மு.றெமீடியஸ் உட்பட ஏனைய வேட்பாளர்களும் இந்தக் கூட்டத்தில் கலந்துகொண்டனர்.

இக்கூட்டத்தில் மாவை சேனாதிராஜா எம்.பி. தொடர்ந்து உரையாற்றுகையில் தெரிவித்தவை வருமாறு.

நாங்கள் தமிழ்த் தேசிய இனம் என்ற வகையில் எங்களை நாங்களே ஆள வேண்டும். இந்த உரிமை எங்களிடமே இருக்கின்றது. இந்த நிலைப்பாடுகளின் காரணமாகவே 2004ஆம் ஆண்டு தமிழ்மக்கள் எங்களை நாடாளுமன்ற உறுப்பினர்களாக ஆக்கினர். தமிழ்மக்களைப் போரில் வென்றுவிட்டோம் என்று கூறுகின்ற அரசாங்கம், ஜனநாயக ரீதியாகவும் அவர்களைத் தோற்கடித்து விட்டோம் என்பதைக் கூறுவதற்காகவே தற்போதைய தேர்தலை நடத்துகின்றது. தமிழ் மக்கள் இந்த விடயத்தில் தெளிவாக இருக்க வேண்டும். வன்னியில் யுத்தம் இடம்பெற்றபோது அங்கே 70 ஆயிரம் மக்கள் தான் இருக்கிறார்கள் என்று கூறிய அரசாங்கம் இன்று நலன்புரிநிலையங்களில் 3இலட்சம் பேர் இருக்கிறார்கள் என்று கூறுகிறார்கள். இது அவர்களுக்கு வெட்கமாக இருக்கிறது. கம்பிவேலிக்குள் அடைத்து வைக்கப்பட்டிருக்கின்ற மக்களை விடுவித்து உடனடியாக மீளக் குடியமர்த்துமாறு ஐ.நாவும் இந்தியாவும் கூறுகின்றன. ஆனால், இந்த அரசாங்கம் இதுவரை அதனைச் செய்யவில்லை. நலன்புரி நிலையத்தில் அடைத்து வைக்கப்பட்டிருக்கின்ற 3 இலட்சத்து 15ஆயிரம் மக்களும்தினம்தினம் செத்துக்கொண்டிருக்கின்றனர். ஆனால், தமிழர்களைக் கொன்று குவித்தமைக்கான அரசு வெற்றிவிழாக் கொண்டாடியுள்ளது. இந்தநிலையிலேயே அரசாங்கம் யாழ்.மாநகர சபைமற்றும் வவுனியா நகரசபைகளுக்கான தேர்தலை நடத்தவுள்ளது. இந்த தேர்தலில் போட்டியிடுகின்ற தனது சொந்தக்கட்சியில் போட்டியிட முடியாத நிலைக்குத் தள்ளப்பட்டிருக்கின்றார். தமிழ்த் தேசியத் தேசியக் கூட்டமைப்பின் 22 நாடாளுமன்ற உறுப்பினர்களும் எங்கே போனார்கள் என்று கேட்கிறார்கள். ஆனால் எங்களுடைய நாடாளுமன்ற உறுப்பினர்களான சிவனேசன், ரவிராஜ் மற்றும்ஜோசப் பரராஜசிங்கம் போன்றோருக்கு என்ன நடைபெற்றது என்பதை அனைவரும் அறிவார்கள். தமிழ் மக்களுடைய பிரச்சினையைத் தீர்ப்பதற்காக 18ஆண்டுகளாக இணைந்திருந்த வடக்கு- கிழக்கை அரசாங்கம் உயர்நீதிமன்றத்தின்அனுசரணையுடன் பிரித்த போதும் வன்னியில் மக்கள்கொன்றுகுவிக்கப்பட்ட போதும் இந்த எவரும் எதுவுமே பேச வில்லை.தமிழ்மக்கள் தங்கள் இலட்சியங்களுக்காகவும், உரிமைகளுக்காகவும் மிகப்பெரும் தியாகம் செய்தவர்கள் கடந்த30வருட காலமாக நடந்த போராட்டத்துக்கு ஆதரவு கொடுத்தவர்கள். இவை அனைத்துமே வீணாகிப் போய் விடக்கூடாது. இறைமையைமீட்டு சுதந்திரத்தை நிலைநாட்ட வேண்டும் - என்றார்.

இக்கூட்டத்தில் பத்மினி சிதம்பரநாதன் எம்.பி. உரையாற்றுகையில் -

தமிழர்கள் என்று சொல்வதை விடுத்து இலங்கை மக்கள் என்று கூறுங்கள்என்று அரசு கூறுகின்றது. இது இனவாதத்தின் வெளிப்பாடாகும், தமிழர்கள் என்றபண்பாட்டு வேரை வெட்டிச் சரித்து விட்டு அபிவிருத்தியை எதிர்பார்க்க முடியாது. எங்களுக்கு அதிகாரம் இல்லாவிட்டால் இடங்களை அபிவிருத்தி செய்யமுடியாது. எவரோ தருவதை வாங்கிக்கொண்டுதான் இருக்க வேண்டும்.

திருகோணமலை போன்ற தமிழ்ப்பிரதேசங்களில் வாழ் கின்ற மக்கள் தமது நெற்றிகளிலுள்ள பொட்டுகளை அழித்து விட்டுத்தான் உலாவுகிறார்கள். ஏனெனில் பண்பாட்டை வெளிப்படுத்த அவர்கள் அச்சப்படுகிறார்கள். இதனை மாற்றியமைக்க வேண்டும்.

தமிழ்மக்களுடைய பண்பாட்டு அடையாளங்களைப்பேணக் கூடிய ஒரேயொரு கட்சி தமிழ்த் தேசியக்கூட்டமைப்பு ஆகும். ஆகையால் இந்தப் பண்பாட்டைப் பாதுகாப்பதன் மூலம் அபிவிருத்தியை முன்னெடுக்க தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு வாக்களிக்கவேண்டுமென்று தெரிவித்தார். இக்கூட்டத்தில் மு.றெமீடியஸும் உரையாற்றினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம் சக்தி

# யாழ்ப்பாணம் வண்ணை ஸ்ரீ வாலாம்பிகா சமேத ஸ்ரீ வைத்தீஸ்வரன் கோயில்

# திவ்யதேவி மஹோற்சவ தேர்த்திருவிழாச் சிறப்பு மலர் - 24.07.2009

## கோலாகலமாகத் தேரேறி வரும் வாலாம்பிகையே வருக!

அகிலாண்ட கோடி பிரமாண்ட நாயகியான ஆதி பராசக்தி யான அன்னை வண்ணையில் வாலாம்பிகையாக - ஸ்ரீ வைத்தீஸ்வர சுவாமியின் அருட்சக்தியாக - வீற்றிருந்து வழிபடும் அடியார்களின் இன்னல் தீர்க்கும் தாயாக விளங்குகின்றாள். அந்த அன்பு அன்னைக்கு இன்று தேர்த்திருவிழா. கோலாகலமாகத் தேரேறி வருகின்ற வாலாம்பிகைத்தாய் கோடி சூரிய பிரகாசத்துடன் ஜெகஜோதியாக காட்சிதந்து அலங்கார பூஜிதையாக அருள் சுரக்கும் பொன்னான நன்னாள் இது.

உடலுக்கு வரும் நோய் தீர்ப்பவர் வைத்தியர்; எமது பிறவிப் பிணி தீர்ப்பவர் எல்லாம் வல்ல இறைவன் வைத்தீஸ்வரர். அந்த வைத்தீஸ்வரருக்குச் சக்தியான அம்பிகை தையல்நாயகி என்னும் பெயரில் சிவசக்தியாக அருள்பாலிக்கின்றாள்.

வரலாற்றுப் பிரசித்தி பெற்ற இந்த ஆலயம் காங்கேசன்துறை வீதியிலே யாழ்ப்பாணத்தின் மத்தியில் நடுநாயகமாக அமையப்பெற்று வானளாவ உயர்ந்த இராஜகோபுரத்துடன் கம்பீரமாகக் காட்சியளிக்கின்றது.

இத்தலத்தில் வருடந்தோறும் பங்குனியில் சிவன் மஹோற்சவமும் ஆடியில் அம்பாள் மஹோற்சவமும் நடைபெறும். பெரும் எண்ணிக்கையான பக்தர்கள் தமது நேர்த்திக்கடன்களை பூர்த்தி செய்யும் நோக்கில் அங்கப் பிரதட்சணம் செய்தும், அடி அளித்தும் வலம் வந்து வழிபாடாற்றுவார்கள். மூன்று சுற்றுப் பிரகாரங்களை உடைய இந்த ஆலயத்தின் தெற்குப் புறத்திலே தீர்த்தக் கேணி இருக்கின்றது.

பாவநாச தீர்த்த சித்தாமிர்த புஷ்கரணியான இத்தீர்தம் நோய் தீர்க்கும் அருமருந்தாகும். வைத்தியர்களுக்கெல்லாம் மகா வைத்தியராக விளங்கும் பராக் கருணைத் தடங்கடலான பரமசிவன் இந்த ஆலயத்தில் ஸ்ரீ வைத்தீஸ்வராக எழுந்தருளி அடியவர்களின் உள்ளங்கவர் கள்வனாக அருட்பெருஞ்சோதியாகப் பிரகாசிக்கின்றார்.

இன்றைய தேர்த்திருவிழாவைக் காணவும் தேர்வடம் பிடித்து இழுக்கவும் அன்னையின் அருட் பிரவாகத்தில் மூழ்கித் திளைக்கவும் அடியார் கூட்டம் அலைமோதும் காட்சி உள்ளத்தைத் தொடும் ஆனந்த பரவசம் தரும் அற்புதக்காட்சியாகும். இக்காட்சியைக் கண்டு அம்பிகையைத் தரிசித்து இஷ்டசித்திகளைப் பெற்று நல்வாழ்வு வாழப் பூர்வஜென்ம புண்ணியஞ் செய்திருக்க வேண்டும். எனவே அம்பிகையைச் சரண் புகுந்து அதிகவரம் பெற்றுய்ய அவள ருளையே நாடி நிற்போமாக.

சிவநெறிக்கலாநிதி இராசையா ஸ்ரீதரன்.



## ஆலய பிரதம குருவின் ஆசியுரை



சைவமும் தமிழும் தழைத் தோங்கும் யாழ்ப்பாண திருநகரின் வண்ணையம் பதியினிலே எழுந்தருளாட்சி புரிகின்ற ஸ்ரீமத் வாலாம்பிகா சமேத வைத்தீஸ்வரப் பெருமான் ஆலயத்தின் அன்னை வாலாம்பிகா திவ்ய மஹோற்சவத்தில் இரதோற்சவம் இன்று நடைபெறுகின்றது.

பிறவிப் பிணி தீர்க்கும் வைத்தீஸ்வரப் பெருமானின் அருட்சக்தியாக விளங்கும் அன்னை வாலாம்பிகாதேவி கோடி சூரிய பிரகாசத்துடன் ஜெகஜோதியாக அழகுத் தேரினிலே அருட் பவனிவரும் அலங்கார்ரக் காட்சி மிகவும் அற்புதமானது.

அகிலாண்டேஸ்வரியான தேவியானவள் அகிலமெங்கும் உள்ள அடியவர்களின் துன்ப துயரங்களை அழித்தொழித்து அவர்கள் சகல செல்வயோகமிக்க பெருவாழ்வு வாழ வேண்டுமென்று நல்லாசி வழங்கி எல்லோரும் இன்புற்றிருக்க எல்லாம் வல்ல ஸ்ரீமத் வாலாம்பிகா சமேத வைத்தீஸ்வரப்பெருமானை பிரார்த்தித்து அமைகின்றேன்

'இன்பமே சூழ்க எல்லோரும் வாழ்க'

ஈசான சிவாசாரியார்
சிவப்பிரம்மஸ்ரீ
சொ. இ. விக்னேஸ்வரக் குருக்கள்
ஆலய பிரதம குருவும்
மஹோற்சவ குருவும்.


## தேர்த்திருவிழாச் சிறப்புற வாழ்த்துவோர்:

கௌரி பான்சி கவுஸ்
கே.கே.எஸ்.றோட்,
யாழ்ப்பாணம்.

சிவாஸ் நகையகம்
08, கன்னாதிட்டி,
யாழ்ப்பாணம்.

ரட்ணாஸ்
வைன்டிங் அன் மோட்டோஸ்
530, கே.கே.எஸ்.றோட்,
யாழ்ப்பாணம்.

சண்முகம்
சைவ உணவகம்
சிவன் கோயிலடி,
யாழ்ப்பாணம்.

உமா ஸ்ரோஸ்
சிவன் கோயிலடி,
கே.கே.எஸ்.றோட்,
யாழ்ப்பாணம்.

றமணன் கட்டடப் பொருள் விற்பனை நிலையம்
525, 528, கே.கே.எஸ்.வீதி,
யாழ்ப்பாணம்.

வஜிதா
மோட்டார் சைக்கிள் திருத்தகமும் சேவிஸ் சென்ரும்
பெயின்ரிங் அன் பிளாஸ்ரிக்
இல.512, கே.கே.எஸ்.வீதி,
மனோகரார் சந்தி, யாழ்ப்பாணம்.

சந்திரன் ஸ்ரோர்ஸ்
பல்பொருள் வாணிபம்
கன்னாதிட்டிச் சந்தி,
யாழ்ப்பாணம்.

ஸ்ரீ லங்கா புத்தகசாலை
கே.கே.எஸ்.றோட்,
யாழ்ப்பாணம்.

மருதா
பொலிமர்சீல் - றபர்சீல்
FREE ING
452,கே.கே.எஸ்.றோட், யாழ்ப்பாணம்.

கிருஸ்ணா நகை மாளிகை
கிளை: கிருஸ்ணா அடகு கடை
09,கன்னாதிட்டி, யாழ்ப்பாணம்.
கே.கே.எஸ்.றோட், யாழ்ப்பாணம்.

TRACTOR SPARES
IMPORTERS AND DEALEAS
IN TRACTOR SPARE PARTS
07,KANATHIDDY ROAD
JAFFNA.

யாழ்ப்பாணம் பல நோக்கு கூட்டுறவுச் சங்கம்
ரோக்கியோ சுப்பர் சிமெந்து
விற்பனைக்கு உண்டு
சில்லறை விலை ரூபா 1200/=
மொத்தமாக கொள்வனவு செய்பவர்களுக்கு விசேட கழிவு வழங்கப்படும்.

ஜெகன் களஞ்சியம்
பல்பொருள் வாணிபம்
K.K.S. றோட், யாழ்ப்பாணம்.


## பெயர் மாற்றம்

கைதடி தெற்கு, கைதடியை வசிப்பிடமாகக் கொண்ட Phaheerathan ஆகிய நான் எனது பெயரை Paheradan என மாற்றிக் கொண்டுள்ளேன் எனவும் இனிமேல் சகல ஆவணங்களிலும் Paheradan என கையொப்பமிடுவேன் எனவும் இத்தால் இலங்கை ஜனநாயக சோசலிஷ குடியரசிற்கும் மக்களுக்கும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

J.Paheradan.

(87222)

## காலபோக விதை உருளைக்கிழங்கு

விதை உருளைக்கிழங்கு தேவையான விவசாயிகள் தமது பதிவுகளை யா/மாவட்ட தேசவள விவசாயிகள் சம்மேளத்தின் விவசாயிகள்கூடம், பலாலி வீதி, திருநெல்வேலியில் அமைந்துள்ள கட்டடத்தில் மேற்கொள்ளலாம்.

விண்ணப்பங்கள் 27/07/2009ஆம் திகதி தொடக்கம் 05/08/2009ஆம் திகதி வரை ஏற்றுக்கொள்ளப்படும்.

உருளைக்கிழங்கு பயிரை மேற்கொள்ளும் விவசாயிகள் தங்கள் பதிவுகளை ஒரு பெட்டிக்கு 5000 ரூபா வீதம் கட்டி மேற்கொள்ளும்படி கேட்டுக் கொள்கின்றோம்.

தேசவள விவசாயிகள் சம்மேளனம்.

நா.சிவதிருச்செந்துநாதர்
செயலாளர்.

(86967)

## வேலாயுதம் ம.வியின் நிறுவுனர் தின நிகழ்வு

வடமராட்சி,ஜூலை24

பருத்தித்துறை வேலாயுதம் மகா வித்தியாலய நிறுவுனர்தினம் நாளை சனிக்கிழமை பிற்பகல் 5 மணிக்கு கொழும்பு தமிழ்ச்சங்க 'சங்கரப்பிள்ளை மண்டபத்தில் வித்தியாலய பழைய மாணவர் சங்க கொழும்புக்கிளையின் வாழ்நாள் தலைவர் சே.ஏகாம்பரநாதன் தலைமையில் நடைபெறவுள்ளது.

நிகழ்வில் இளைப்பாறிய அதிபர் வே.ஈசுரபாதம் நிறுவுனரின் உருவப்படத்திற்கு மாலை அணிவிக்க கொழும்புக்கிளை பழைய மாணவர் சங்க உப தலைவர் வீ.சேதுநாயகம் வரவேற்புரையை நிகழ்த்துவார்.

'வடமராட்சியின் கலை இலக்கியப் பண்பாடு' என்ற தலைப்பில் பேராசிரியர் கலாநிதி ஆ.சண்முகதாஸ் நிறுவுனர் தின நினைவுப் பேருரையை நிகழ்த்துவார்.

(203-236)

## தேவை

யாழ்.நகர் மத்தியில் அமைந்துள்ள
(சன்றைஸ் மெடிகிளினிக்)
மற்றும் பிரதான வீதியில் அமைந்துள்ள
(ரிலிவ்ஸ் நேசிங் ஹோம்)
என்பவற்றுக்கு பின்வரும் வேலையாட்கள் தேவை.

- வரவேற்பாளர் (ஓரளவு ஆங்கில அறிவு மற்றும் கணனி அறிவு அவசியம்
- தாதிய உதவியாளர்
- தாதியர் (பயிற்றப்பட்டவர்கள் விரும்பத்தக்கது)
- மருத்துவ மாது (MIDWIFE)

விண்ணப்பிக்க விரும்புபவர்கள் கீழ் குறிப்பிட்ட விலாசத்துக்கு வரும் ஞாயிறு 26ஆம் திகதி மு.ப. 10 மணிக்கு நேரில் வரவும்.

[illegible]


# போலிகள் எச்சரிக்கை

ஆகாசவாணி செய்திகள் வாசிப்பவர் வரதராஜன்

யாழ்-நகரில்:
1.பொன்னான மேனியும்
2.பொலிவான
கூந்தலையும் தந்து
3. சகலரோக நிவாரணியாகத் திகழும்
சித்தாரா பொன்னாங்காணித் தைலத்தில்
போலிகள் நடமாடுவது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

போலிகளின் நடமாட்டத்தை தடுக்க இன்றிலிருந்து தைல பாட்டிலின் மேல் மூடி கண்ணைக் கவரும் வர்ணமூடியாக அச்சிடப்பட்டு சித்தாரா டிஸ்பென்ஸரி வைத்திய முத்திரை பொறிக்கப்பட்டு விற்பனை செய்யப்படுகின்றது. போலிகளை களைவதற்கு வேலியாக அமைவது வர்ணத்தில் வைத்திய முத்திரை பொறிக்கப்பட்ட மூடிகளே.பிளேன் மூடித்தைலம் இனி உங்களுக்கு வேண்டாம். ஆகவே சித்தாரா பொன்னாங்காணித் தைலம் வாங்கும்போது வர்ணமூடியுடன் சித்தாரா டிஸ்பென்ஸரி வைத்திய முத்திரை குறியீடு உள்ளதா என பொதி செய்யப்பட்ட பெட்டியைத் திறந்து சரிபார்த்து வாங்குங்கள்.

குறிப்பு: போலிகளின் நடமாட்டம் வடமராட்சிப் பகுதியில் அதிகமாக உள்ளதால் வடமராட்சி மக்கள் இதைக் கருத்தில் கொண்டு கூடிய கவனம் எடுக்கவும்.

Manufactured By:
SITHARA PRODUCTS
Puttalam Road, Chilaw.
(Reg.No.:6382)AR/PR/No.:228

யாழ்.மாவட்ட ஏகவிநியோகஸ்தர்:
சிவா நறுமணப் பூங்கா
இல.288, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே.: 021 222 2567

(குறிப்பு: சத்திரச் சந்திக்கு அண்மையில்)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பருத்தித்துறை றோ.க.த.க பாடசாலை
# ஆண்களுக்கான கபடியில் மாகாணச் சம்பியன்!

வலி.வடக்கு, ஜூலை 24
வடமாகாண கல்வித் திணைக்களத்தினால் வடமாகாணப் பாடசாலை அணிகளுக்கு இடையே நடைபெற்ற ஆண்களுக்கான கபடிப் போட்டியில்பருத்தித்துறை றோமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் பாடசாலை வடமாகாண சம்பியனாகியது.

மன்னார் பொதுவிளையாட்டு மைதானத்தில் இடம்பெற்ற இறுதிப்போட்டியில் யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த இளவாலை மெய்கண்டான் மகாவித்தியாலயமும் பருத்தித்துறை றோமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் பாடசாலையும் மோதிக்கொண்டன.

ஏற்கனவே யாழ்.மாவட்டத்தில் மோதி முதல் இரண்டு இடங்களையும் பெற்றுக் கொண்டு இந்த இரு அணிகளும் மீண்டும் மாகாண மட்டத்தில் மோதிக்கொண்டமையால் போட்டி மிகவும் விறுவிறுப்பாக அமைந்தது.

போட்டி ஆரம்பமாகி முடிவடையும் வரை இரு அணிகளில் எந்த அணி வெற்றி பெறும் என்று தெரியாத அளவுக்கு இரு அணி வீரர்களும் விட்டுக்கொடுக்காது விளையாடினார்கள்.

போட்டி முடிவடைய 30 வினாடிகள் இருக்கும் நிலையில் மெய்கண்டான் மகாவித்தியாலயம் ஒரு புள்ளி முன்னணியில் நின்ற வேளையில் கலட்டி றோ.க. த.க. பாடசாலை வீரன் அருள்கொடி திடீரென 2 புள்ளிகளும்பெற்று தனது பாடசாலையின் வெற்றியை உறுதிப்படுத்தினார்.

முதல் பாதி ஆட்டம் நிறுத்தப்படும்போது கலட்டி றோமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் பாடசாலை 29:22 புள்ளிகள் என்ற நிலையில் காணப்பட்டது.

இறுதி நிமிடத்தில் கலட்டி றோமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் பாடசாலை பெற்ற 2 புள்ளிகளுடன் 43:42 புள்ளிகள் என்ற அடிப்படையில் மெய்கண்டான் மகாவித்தியாலயத்தை வெற்றிபெற்று மாகாணச் சம்பியனாகியது.

3ஆம் இடத்தை மன்னார் சித்தி விநாயகர் இந்துக்கல்லூரி பெற்றுக்கொண்டமை குறிப்பிடத்தக்கது.

(04-86)

# வடமாகாணப் பெண்களுக்கான கபடிப் போட்டியில் வவுனியா கல்மடு மகாவித்தியாலயம் சம்பியனாகியது

வலி.வடக்கு, ஜூலை 24
வடமாகாண கல்வித் திணைக்களத்தினால் வடமாகாண பாடசாலை அணிகளுக்கு இடையே நடத்தப்பட்ட பெண்களுக்கான கபடிப் போட்டியில் வவுனியா கல்மடு மகாவித்தியாலயம் சம்பியனாகியது.

மன்னார் பொதுவிளையாட்டு மைதானத்தில் இடம்பெற்ற இறுதிப் போட்டியில் வவுனியா கணேஸ்வரா மகாவித்தியாலயமும் வவுனியா கல்மடு மகாவித்தியாலயமும் மோதிக்கொண்டன.

போட்டி நிறைவில் வவுனியா கல்மடு மகாவித்தியாலயம் 45:37 புள்ளிகள் என்ற அடிப்படையில் கணேஸ்வரா மகாவித்தியாலத்தை வெற்றிபெற்று சம்பியனாகியது.

3ஆம் இடத்தை மன்னார் அல்மினா மகாவித்தியாலயம் பெற்றுக்கொண்டது.

இப்போட்டியில் யாழ்.மாவட்ட பெண்கள் அணி கலந்துகொள்ளவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

இது சம்பந்தமாக ஆசிரியர் ஒருவர் கருத்துக் கூறுகையில் புதிதாக ஆரம்பிக்கப் பட்ட யாழ்.மாவட்ட எல்லே அணி சம்பியனாகியது போன்று யாழ்.மாவட்டத்தில் இருந்து கபடி அணியும் சென்றிருந்தால் சம்பியனாகி இருக்க முடியும் என்று தெரிவித்துள்ளனர்.

(04-86)

# மாற்று வலுவுடைய மாணவர்களுக்கு இடையேயான விளையாட்டுப் போட்டிகளின் முடிவுகளில் சில

வலி.வடக்கு, ஜூலை 24
வலிகாமம் கல்வி வலயத்தினால் மாற்று வலுவுள்ளவர்களுக்காக நடத்தப்பட்ட விளையாட்டுப்போட்டிகளில் 10 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கான போட்டிகளில் வெற்றி பெற்றவர்களின் விவரங்கள் வருமாறு:

**75 மீற்றர் ஓட்டம் (ஆண்)**
நா.கிருஷாந், க.ஜதீபன், பொ.நிரோஜன் (வாழ்வகம்)
பெண்: நா.துஷ்யந்தி, செ.கல்யாணி, க.ஜனனி (வாழ்வகம்).

**100 மீற்றர் ஓட்டம் (ஆண்)**
பூ.டிதனகரன் (சிவபூமி), அ.சுஜீபன் (ஆர்க்), இ.கிரேன் பிளெக்னோ (சிவபூமி).
வி.பிரதீபன், நா.கிருஷாந், சி. விஜயகுமார் (வாழ்வகம்).
பெண்: பு.நிலக்சினி, ச.மிதுலா, லோ. தேனுகா (ஆர்க்), நா.துஸ்யந்தி, செ.கல்யாணி, ஞா.திவ்வியா (வாழ்வகம்).

**200 மீற்றர் ஓட்டம் (ஆண்):**
சி.தனுசன், சி.துஸ்யந்தன், எஸ்.வசந்தன் (சிவபூமி).
பெண்: சே.அபித்தா, க.துளசிகா, யோ. மேரிஜொயானா (சிவபூமி)

**பந்தெறிதல் (ஆண்):**
சி.தனுசன், அ.சுஜீபன், பே.போல்டனீசியா (சிவபூமி).
பெண்:பு.நிலர்சினி, சி.இந்துஜா, ர.மதுஷா (ஆர்க்).

**யானை பொருத்துதல்:**
எஸ்.வசந்தன், சி.கமில்டன், கா.செல்வலிங்கம் (சிவபூமி).

**பூமாலை கோர்த்தல் (ஆண்)**
ஜெ.மனோஜன், கா.செல்வலிங்கம், தே.அனோஜன் (சிவபூமி).
பெண்: ப.கோபிகா (ஆர்க்), யோ.மேரிஜொயானா (சிவபூமி), பு.நிலக்சினி (ஆர்க்).

**கயிறு அடித்தல் (ஆண்):**
க.சாயிராம், சி.துஸ்யந்தன், கு.குமரகுருபரன் (சிவபூமி).

**பழம் பொறுக்குதல் (ஆண்)**
சி.பிந்துஜன் (ஆர்க்),பூ.டிதனகரன் (சிவபூமி), சி.சிவாஸ்கர் (ஆர்க்).
பெண்: சே.அபித்தா (சிவபூமி), ப. கோபிகா, பு.நிலக்சினி (ஆர்க்).

**நின்று நீளம்பாய்தல் (ஆண்)**
பொ.தீபன், மொ.நிரோஜன், சி.விஜயகுமார் (வாழ்வகம்).
பெண்: நா.துஸ்யந்தி, செ.கல்யாணி, சி.அனந்தினி (வாழ்வகம்).
ஆண்: பே.போல்டனிசியஸ், சி.சாயீசன், எஸ்.வசந்தன் (சிவபூமி).
பெண்: க.துளசிகா, சே.அபித்தா (சிவபூமி).

**குண்டெறிதல் (ஆண்)**
கே.பிரதீபன் (வாழ்வகம்), கோ.அமுதகுமார் (நவீல்ட்), பொ.தீபன் (வாழ்வகம்).
பெண்:ரி.வாசினி(வாழ்வகம்), நீ.லக்சனி (நவீல்ட்), சி.ரேகா (வாழ்வகம்).

**தட்டெறிதல் (ஆண்):**
நா.கிருஷாந் (வாழ்வகம்), சாள்ஸ்குயின்ரன் (நவீல்ட்), க.பிரகன் (வாழ்வகம்).
பெண்: நீ.லக்சனி (நவீல்ட்), ஞா.டில்வியா, மா.இராஜலக்சுமி (வாழ்வகம்).

**ஈட்டியெறிதல் (ஆண்)**
கே.பிரதீபன், எஸ்.தர்சன், கு.ஜெகதீசன் (வாழ்வகம்).
பெண்: தெ.வாகினி, கி.ரேகா, ஞா.டிவ்வியா (வாழ்வகம்).
ஆண்: சி.துஸ்யந்தன், சி.தனுஷன், எஸ். வசந்தன் (சிவபூமி).

**75 மீற்றர் ஓட்டம்: (ஆண்)**
சி.பிந்துஜன் (ஆர்க்), அ.மயூரன் (சிவபூமி), அ.அசான் (ஆர்க்).
பெண்:
ப.கோபிகா, சி.இந்துஜா (ஆர்க்), ச.கயரிகா (சிவபூமி).

(86)

## ஹாட்லிக் கல்லூரியை 3 விக்கெட்டுக்களால்
# வெற்றிகொண்டது யூனியன் கல்லூரி

வலி.வடக்கு, ஜூலை 24
இலங்கைப் பாடசாலைகள் கிரிக்கெட் சங்கத்தின் ஏற்பாட்டில் யாழ்ப்பாணப் பாடசாலைகள் கிரிக்கெட் சங்கத்தினால் யாழ்ப்பாணம் பாடசாலைகளின் 15 வயதுப் பிரிவினர்களுக்கு இடையே நடத்தப்பட்டுவரும் 50 ஓவர்களுக்கு மட்டுப்படுத்திய கிரிக்கெட் போட்டி ஆட்டமொன்றில் தெல்லிப்பழை யூனியன் கல்லூரி 3 விக்கெட்டுக்களினால் வெற்றி பெற்றுள்ளது.

தெல்லிப்பழை யூனியன் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்ற போட்டி ஆட்டம் ஒன்றில் யூனியன் கல்லூரியும், பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரியும் மோதிக் கொண்டன.

முதலில் துடுப்பெடுத்தாடிய ஹாட்லிக் கல்லூரி 40.3 ஓவர்களில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 169 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டது. பிரசாந் 41 ஓட்டங்களையும், மயூரன் 31 ஓட்டங்களையும் பிரதீப் 19 ஓட்டங்களையும் பெற்றுக் கொண்டனர். உதிரிகளாக 44 ஓட்டங்களும் பெறப்பட்டன.

யூனியன் கல்லூரியைச் சேர்ந்த டிசாந்தன் 7 ஓவர்கள் பந்து வீசி ஒரு ஓட்டமற்ற ஓவருடன் 26 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுக்களையும், நிரோஜன் 7 ஓவர்கள் பந்து வீசி 47 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுக்களையும் கீர்த்தனன் 5 ஓவர்கள் பந்து வீசி ஒரு ஓட்டமற்ற ஓவர்களுடன் 21 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுக்களையும், அன்ராஜ், சிந்தாகரன் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினார்கள்.

170 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய யூனியன் கல்லூரி 44 ஓவர்களில் 7 விக்கெட்டுக்களை இழந்து 173 ஓட்டங்களைப் பெற்று வெற்றி இலக்கை அடைந்தது.

சஞ்சீலன் 28 ஓட்டங்களையும், அகீசன் ஆட்டமிழக்காது 26 ஓட்டங்களையும், நிரோஜன் ஆட்டமிழக்காது 18 ஓட்டங்களையும், அன்ராஜ் 14 ஓட்டங்களையும், கீர்த்தனன் 13 ஓட்டங்களையும், பெற்றுக் கொண்டனர்.

உதிரிகளாக 61 ஓட்டங்களை ஹாட்லிக் கல்லூரி அணி கொடுத்ததால் யூனியன் கல்லூரியின் வெற்றி இலகுவானதானது.

ஹாட்லிக் கல்லூரி சார்பில் பந்து வீசிய கபிலேந்திரன் 10 ஓவர்கள் பந்து வீசி 28 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுக்களையும், பிரசாத் 5 ஓவர்கள் பந்துவீசி 37 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுக்களையும், நிரோஜன் பிரதீப் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினார்கள்.

(4-86)

## குடாநாட்டு விளையாட்டு அரங்குகளில்

# திலக்சன் அபார பந்து வீச்சு: மகாஜனாவுக்கு இலகு வெற்றி!

வலி.வடக்கு, ஜூலை 24
இலங்கை பாடசாலைகள் கிரிக்கெட் சங்கத்தின் ஏற்பாட்டில் யாழ்ப்பாணம் பாடசாலைகள் கிரிக்கெட் சங்கம் யாழ்ப்பாணம் பாடசாலைகளின் 15 வயதுப் பிரிவினர்களுக்கு இடையே நடத்திவரும் 50 ஓவர்களுக்கு மட்டுப்படுத்திய கிரிக்கெட் போட்டி ஆட்டமொன்றில் தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி 161 ஓட்டங்களினால் வெற்றி பெற்றுள்ளது.

தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற போட்டி ஆட்டத்தில் நெல்லியடி மத்திய மகாவித்தியாலயமும், தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரியும் மோதிக்கொண்டன.

முதலில் துடுப்பெடுத்தாடிய மகாஜனக் கல்லூரி 50 ஓவர்கள் நிறைவில் 8 விக்கெட்டுக்களை இழந்து 300 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டது.

ஜனந்தன் 57 ஓட்டங்களையும், பிரசாத் 38 ஓட்டங்களையும், மோசிகீரன் 37 ஓட்டங்களையும், சிந்துஜன் 36 ஓட்டங்களையும், ஜனார்த்தனன் 27 ஓட்டங்களையும், தனஞ்செயன் ஆட்டமிழக்காது 20 ஓட்டங்களையும் பெற்றுக்கொண்டதுடன் உதிரிகளாக 45 ஓட்டங்களும் பெறப்பட்டன.

நெல்லியடி மத்திய மகாவித்தியாலயத்தைச் சேர்ந்த மிதுஜன் 7 ஓவர்கள் பந்து வீசி 2 விக்கெட்டுக்களையும், என். சிந்துஜன் 7 ஓவர்கள் பந்து வீசி 45 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுக்களையும், வி. சிந்துஜன்8 ஓவர்கள் பந்து வீசி ஒரு ஓட்டமற்ற ஓவருடன் 45 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுக்களையும் லக்சன், துவாரகன் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினார்கள்.

301 ஓட்டங்கள் என்ற இமாலய வெற்றி இலக்கை நோக்கி துடுப்பெடுத்தாடிய நெல்லியடி மத்திய மகாவித்தியாலயம் திலக்சனின் துல்லியமான பந்து வீச்சுக்கு முகம் கொடுக்க முடியாது 37.5 ஓவர்களில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 131 ஓட்டங்களை மாத்திரமே பெற்றுக்கொண்டது.

அங்கதன் 33 ஓட்டங்களையும், என். சிந்துஜன் 23 ஓட்டங்களையும், துவாரகன் 54 ஓட்டங்களையும் பெற்றுக்கொண்டதுடன் உதிரிகளாக 27 ஓட்டங்களும் பெறப்பட்டன.

மகாஜனக் கல்லூரியைச் சேர்ந்த திலக்சன் 4.5 ஓவர்களில் ஒரு ஓட்டமற்ற ஓவருடன் 13 ஓட்டங்களுக்கு 5 விக்கெட்டுக்களையும், மோசிகீரன், ஜனார்த்தனன், கஜந்தன், டிலோசன், தனஞ்செயன் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினார்கள்.

(04-86)



பலாலி ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையின் வருடாந்த விளையாட்டுப் போட்டிக்கான பரிசளிப்பு நிகழ்வு கடந்தவாரம் கலாசாலை மண்டபத்தில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் கலந்து கொண்டோரில் ஒருபகுதியினரையும் நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட யாழ்.பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் தலைவர் ப.கிரிதரன் ஆசிரிய மாணவி ஒருவருக்கு பரிசில் வழங்கு[illegible] ஆர்.தர்மகுலேந்திரன் நிற்பதையும் படங்களில் காணலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கொக்குவில் ஸ்ரீ வீரமா பிடாரி அம்பாள்
# தேர்த் திருவிழாச் சிறப்பு



## தல வரலாறு

திருக்கோயில்களால் சிறப்புப் பெற்றது நமது ஈழவளநாடு. இந்த நாட்டைச் சிவாலயங்கள், விஷ்ணு ஆலயங்கள், சக்தி ஆலயங்கள் என்பன பெரிதும் அழகுபடுத்துகின்றன என்றால் அது மிகையாகாது. அந்த வகையில் சக்தி ஆலயங்களில் மிகவும் சிறப்பு வாய்ந்த புராதன ஆலயமாக யாழ். நகரை அண்மித்த ஆனைக்கோட்டை, கொக்குவில் பகுதி எல்லையில் வீரமாபிடாரி அம்பாள் ஆலயம் அமைந்துள்ளது.

பொதுவாகக் கிராமத்தின் எல்லைத்தெய்வமாக விளங்கும் அம்பிகைக்குப் பிடாரி என்றும் ஒரு பெயர் உண்டு. இப் பெயர் கேட்பதற்கு ஒரு மாதிரியாக இருந்தாலும் உண்மையில் இயற்பெயர் பீடைஹாரி என்பதாகும் அதாவது

பீடை- தீவினை அல்லது துன்பங்கள்

ஹாரி- விரட்டுபவள்

அதாவது பீடைகளை - துன்பங்கள், தீவினைகளை நெருங்காமல் விரட்டுபவள் என்ற பெயரே- பீடைஹாரி என்று மருவிவிட்டது என்பது தான் உண்மை.

இந்த ஆலயமூர்த்தி வழிபாடு மிகவும் தொன்மை வாய்ந்தாகக் காணப்படுகின்றது. கி.பி1475 இல் சிங்கை பரராசசேகரன் நல்லூரைத் தலைநகராகக் கொண்டு அரசாட்சி செய்தபோது பல ஆலயங்களைப் புனரமைத்தான் என்று அறியமுடிகின்றது. ஆட்சி மாற்றத்தினால் அந்நியர்களான பறங்கியர் அம் மக்களின் மனதைப் புண்படச் செய்யும் வகையில் யாழ்ப்பாணத்தில் பெரிதும் சிறிதுமாக 500ஆலயங்களை இடிப்பித்தார்கள் என்றும் அதில் ஓர் ஆலய அம்மன் விக்கிரகத்தைச் சிவன்கோயில் குளத்திலே இட்டுச்சென்றனர் என்றும் அறிய முடிகின்றது. இங்கிருந்து வழிபடும் அடியவர் ஒருவரின் கனவில் அம்மன் தோன்றி, தான் இருக்கும் இடத்தை உணர்த்தி அந்த அடியவரும் அம்பிகை உணர்த்திய இடத்தைச் சென்று பார்க்கையில் அம்பிகையின் உருவம் கிடைக்க அவர் அகமிக மகிழ்ந்து அதனை ஒரு மாட்டு வண்டியில் ஏற்றிக்கொண்டு வந்து தற்போதுள்ள இடத்தில் வைத்து வழிபட்டார் என்றும் கூறுவர். இதை விட சங்கிலிய அரசன் போர் புரிய முன்னர் இந்த அம்பிகையை வழிபட்டே போருக்குச் செல்வது வழக்கம் என்றும் கர்ணபரம்பரைக் கதைகளால் அறிய முடிகின்றது. காலப் போக்கில் இந்த ஆலயத்தில் பலியிடும் வழக்கம் ஏற்பட்டது. 1975ஆம் ஆண்டில் இந்த ஊர்ப்பெரியவர்களின் முயற்சியால் பலியிடும் வழக்கம் நிறுத்தப்பட்டு கொட்டிலுடன் கூடிய ஆலயமாக இருந்த ஆலயம் ஆகம விதிக்கமைய கருவறையுடன் கூடிய ஆலயமாக மாற்றப்பட்டது. காலப்போக்கில் அன்பர்கள், அடியவர்கள் அனைவரின் ஒத்துழைப்பு விடா முயற்சி என்பவற்றின் காரணமாக உன்னத வளர்ச்சி அடைந்து பெரிய ஆலயமாகத் தேரோடும் ஆலயமாக மாறி தற்போது அழகிய பஞ்சதள இராஜகோபுரத்துடன் காட்சியளிக்கின்றது என்று உணருகையில், இந்த வளர்ச்சிக்கு வித்திட்டவர்களை மனம் நிறைந்து பாராட்டாமல் இருக்க இயலாது. இந்த ஆலயத்திற்கு இந்தக் கிராமத்தைச் சார்ந்தவர்கள் மட்டுமல்ல, அயல் கிராமங்களிலும் இருந்தும் ஏன் பல்வேறு இடங்களிலிருந்தும் கூட அன்னையைத் தேடி, நாடி, ஓடி வருபவர்கள் ஏராளம் ஏராளம். இன்னும் இந்த ஆலயத்தின் நிறைவுக்கு - அன்னதான மண்டபம் ஒன்று அமைக்கப்பட்டு நிறைவு செய்யப்படவேண்டும். அதுவும் அம்பிகையின் அருட்கடாட்சத்தினால் விரைவிலேயே நிறைவு பெறும் என்ற நம்பிக்கையுடன் அகில உலகிற்கும் நாயகியான அவளின் பாதம் பணிந்து நிறைவு செய்கின்றோம்.

## தேர் பவனி வரும் அம்பிகையே

உலகெங்கும் வாழும் அனைத்து அடியார்களுக்கு தேரேறி வரும் அம்பிகை அருள் காட்சி கிடைக்கவேண்டுகின்றோம். அல்லல் உற்று, துன்பப்பட்டு வாடும் மக்களின் குறைகளை நீக்கி இன்ப வாழ்வு கிடைக்கப் பெற்று, தீயவினைகள் யாவும் நீங்கி அம்பாளின் திருவருளை பெற்று ஆனந்தப் பெருவாழ்வு வாழ அம்பிகையை வேண்டுகின்றோம்.

தேர்த் திருவிழா உபயகாரர்.

## அம்பிகையின் அருள்மழை அகில உலகிற்கும் கிடைக்கட்டும்



நம் நாட்டில் தேவி வழிபாடு மிகச் சிறந்து காணப்படுகிறது. தெய்வத்தைத் தனியாக நினைத்து பக்தி செய்வது சக்தி வழிபாடாகும். இவளே சகல ஆற்றல்களுக்கும் இருப்பிடமானவள். அமைதியான வாழ்வையும், அளவில்லா ஆனந்தத்தையும் அருளும் அன்னை இத்தன்மை வாய்ந்த அம்பிகைக்கு உருவபேதங்கள் பல. அவற்றை அமைத்துக்கொண்டு வேறுவேறு நிலையில் வைத்து வழிபடுவோர் பலர்.

இத்தகைய ஒருநிலையில் பீடைஹாரி என்ற நாமம் தாங்கித் தன்னை மெய்யன்போடு வழிபடும் அடியவர்களின் துன்பங்களைத் துயரங்களை விரட்டுபவள்தான் பீடாரி அம்பிகை. இத்தன்மை வாய்ந்த அருள்மிகுந்த அன்னைக்கு இன்று தேர்த்திருவிழா.

ஒரு கோயிலில் தேர்த்திருவிழா என்றாலே அக்கோயிலில் பெரியவிழா நடக்கிறது என்று உணரலாம். மக்கள் அனைவரும் ஒன்று கூடுவதையும் தேரின் வடம்பிடித்து நமது பிறவிப் பிணியை அகற்றக்கூடிய உன்னதநிலைக்கு உயர்த்தும் உன்னத விழாவாகும். இதனால்தான் தேரின் வடம்பிடித்தால் வானத்தில் இடம்பிடிக்கலாம் என்றும் வடம்பிடித்தால் வாதைகள் நீங்கும் என்றும் முன்னோர் இயம்பினர்.

பூமியையே ஆண்டவன் இரதமாகக் கொண்டிருக்கிறான். நான்கு வேதங்களுமே இரதத்தில் கட்டப்பட்ட நான்கு குதிரைகள். பிரமனே இரதத்திற்குச் சாரதி. இந்த இரதத்திற்கு சூரிய, சந்திரரே சக்கரங்கள். ஆணவம், கன்மம் மாயை என்பவற்றை அழிக்கவே தேரூர்ந்து இறைவன் செல்கின்றான் என்பதே இரதோற்சவத்தின் உட்கருத்து என்று பல நூல்கள் கூறுகின்றன.

சமய உட்கருத்து என்னவாக இருப்பினும் இதன்மூலம் சமூகநலன்கள் பல உள்ளது என்பதை மறுக்கமுடியாது. தேரை இழுக்கும்போது இறைவன் சந்நிதியில் யாவரும் சமம் என்ற உணர்வு ஏற்படுகிறது. இதைவிட இது ஒரு கூட்டு முயற்சியாகும். அதாவது பலரும் சேர்ந்து வடத்தை இழுக்கும்போதே தேர் நகருகின்றது. இதன் மூலம் கூட்டு முயற்சியின் முக்கியத்துவத்தை உணரக்கூடியதாக உள்ளது. இதைத் தவிர வடம்பிடித்து இழுக்கும் ஒவ்வொருவரும் தற்பெருமையோ, தன்நினைப்போ இன்றி இறைபணி செய்யக்கூடிய மனோநிலை ஏற்படுகின்றது. இவ்வாறு பல நன்மைகளை இரதோற்ஸவத்தின் மூலம் பெறமுடியும். நாடெங்கும் அமைதியும் நன்மையும் சமாதானமும் நிலவவும் அந்த அம்பிகையைத் தொழுதால் கிடைக்கும். இதனையே பாரதியாரும்

நம்பினோர் கெடுவதில்லை இது
நான்குமறைத் தீர்ப்பு
அம்பிகையைச் சரண்புகுந்தால் அதிக
வரம்பெறலாம்

என்றும் உறுதியாகக் கூறினார். எனவே இத்தன்மைவாய்ந்த அம்பிகையைத் தேரோடும் இந்த நன்நாளில் வணங்கி தர்மசிந்தனையின்படி எண்ணிய எண்ணம் யாவும் ஈடேற வேண்டும் என்று அம்பிகையின் மலர்ப்பாதம் பணிந்து அவள் தனது அருள்மழையை அகில உலகிற்கும் பொழிய வேண்டுமென்றும் பிரார்த்தித்து நிறைவுசெய்கின்றோம்.

இறை திருத்தொண்டில், சிவஸ்ரீ சோம.சிவகுமாரக்குருக்கள், ஆலயப் பிரதமகுரு

## சமூகநலத்துறை அமைச்சரின் ஆசியுரை



வண். வடமேற்கு ஆனைக்கோட்டை (கொக்குவில்) திருவருள் மிகு வீரமாபிடாரி அம்பாள் ஆலயத்தின் தேர்த்திருவிழா சிறப்புற நடை பெறுவதையிட்டு நாம் அகம் மகிழ்கின்றோம். தேரேறி வந்து அருள் மழை பொழியும் அன்னையின் அருளால் அனைவரும் இன்புற்று எல்லா நலமும் வளமும் பெற்று, வாழ்வாங்கு வாழ்வார்களாக. வடக்கின் வசந்தம் மலரும் இந்நாள்களில் அன்னையிடம் அருள் வேண்டி நிற்க தம் அடியானின் அபிலாசைகளையும் வேண்டுதல்களையும் அன்னை பிடாரி அம்பாள் நிறைவாக அருள் பாலிக்க வேண்டும் என விரும்பி நிற்கின்றோம்.

கே.என்.டக்ளஸ் தேவானந்தா, செயலாளர் நாயகம், ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி,
சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சர்.


அம்பிகை களஞ்சியம்
பிடாரி அம்மன் கோயிலடி,
கொக்குவில் மேற்கு.

கணேசா களஞ்சியம்
(சந்துரு நேமலை)
59, முருகமூர்த்தி வீதி, யாழ்ப்பாணம்.

ஆரணி நகைத்தொழிலகம்
பிடாரி கோவிலடி,
கொக்குவில் மேற்கு.

செல்வி நகையகம்
1/3, கஸ்தூரியர் வீதி,
யாழ்ப்பாணம்.

சந்திரா ஸ்ரோர்ஸ்
மானிப்பாய் வீதி,
ஆனைக்கோட்டை.

ஏசியன் அக்கடமி
கேணியடி, கொக்குவில் மேற்கு,
கிளை: கொக்குவில் சந்தி.

எரிக் கணேஷ் மூக்குக் கண்ணாடி அகம்
ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
கிளை: கே.கே.எஸ் வீதி, கொக்குவில்.
கே.கே.எஸ் வீதி, சுன்னாகம்.

லண்டன் வாழ் அம்பிகை அடியவர்கள்

வெஸ்ற் வண் கொமினிக்கேசன்
மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம்.

பரஞ்சோதி ஸ்ரோர்ஸ் (தீபன் கடை)
ஆனைக்கோட்டை வீதி,
கொக்குவில்.

பிடாரி அம்பாள் சனசமூக நிலையமும் இந்து இளைஞர் மன்றமும்

கனடாவாழ் அம்பிகை அடியவர்கள்

வெஸ்ரா நெல்லிகிறஸ்
ஆனைக்கோட்டை.

யாழ்ரா ஹோட்டல்
830, கே.கே.எஸ் வீதி,
தட்டாதெருச் சந்தி, யாழ்ப்பாணம்.

இலங்கராசா ஸ்ரோர்ஸ்
67, மேற்கு மார்க்கட்,
பெரிய கடை, யாழ்ப்பாணம்.

பிரான்ஸ் வாழ் அம்பிகை அடியவர்கள்

பூபதி பாண்
மானிப்பாய் வீதி,
ஆனைக்கோட்டை.

கீத்தா றேடர்ஸ்
கட்டடப் பொருள், பெயின்ட் வகைகள்
விற்பனையாளர்.
மானிப்பாய் வீதி, ஆறுகால்மடம்.

நிலாம்பரி உணவகம்
526 கே.கே.எஸ். வீதி,
தட்டாதெருச் சந்தி.

உதயா ஜூவலர்ஸ்
கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

பிடாரி களஞ்சியம்
கொக்குவில் மேற்கு,
கொக்குவில்.

யாழ்கல்லூரி
ஆனைக்கோட்டை.

மகாநதி ஜூவல்லறி
72A, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

நியூ பிரசாந்தி ஜூவெல்லறி
கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ...ன் தேவஸ்தான மலர் -24.07.2009



## நல்லை ஆதீன முதல்வரின் அருளாசிச் செய்தி



எல்லாம் வல்ல ஆதிபராசக்தியாக விளங்குகின்ற அம்பிகை பிடாரி அம்பாள் இன்று தேர் மீது ஆரோகணித்து திருவருள் பாலிக்கின்றாள். நம்பிவரும் அடியவரின் கொடிய வினைதீர்க்கும் அன்னையாக ஆனைக்கோட்டைப்பதியிலே எழுந்தருளி வீற்றிருந்து அருள் பாலிக்கும் அம்பாள் இன்று அநியாயங்களையும் அக்கிரமங்களையும் வேரோடு தகர்த்து அழித்திட தேரில் புறப்படுகின்றாள்.

"அம்பிகையைச் சரண்புகுந்தால் அதிக வரம் பெறலாமே! நம்பினார் கெடுவதில்லை நான்கு மறைத் தீர்ப்பு" என்பதற்கிணங்க இந்த அம்பாளை வழிபடும் அடியவர்கள் அனைவரும் நல்லவண்ணம் மங்களகரமாக வாழ அம்பாள் அருள்புரிய வேண்டுமென்று உளமாரப் பிரார்த்தித்து அருளாசி வழங்குகின்றோம்.

"என்றும் வேண்டும் இன்ப அன்பு"

நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள், திருஞானசம்பந்தர் ஆதீனம், நல்லூர்.

## தேரேறிய தேசநாயகி



யாழ்ப்பாணத்தின் வடபால் அம்பிகையின் அவதாரத்தலங்கள் நிறைந்த புண்ணியப்பதியே கொக்குவில் மேற்கு ஆகும். ஆடிமாதத்தில் அம்பாளைத் தரிசிப்பதற்குரிய காலமாகும். அதாவது உத்தராயண காலத்தில் சூரிய வெப்பம் அதிகமாக இருப்பதால் தீமைகள் அழிந்து போய்விடும். ஆனால், தட்சணாயன காலத்து வெப்பம் குறையத் தீமைகள் அதிகரிக்க அவற்றைப் போக்கும் வல்லமை நாயகியாக பராசக்தி அவதாரநாயகியாக விளங்குகின்றாள். ஆடிப்பூரமும் அதனைத் தொடர்ந்து அம்மன் வழிபாடுகள் நிறைவாக வளம் பெற்று வருவதைக் காணலாம்.



இதன் வளர்ச்சிப் போக்கானது கொக்குவில் மேற்கு பிடாரி அம்மன் ஆலயத்தில் ஆடிப்பூரத் தீர்த்தமாகக் கொண்டு மகோற்சவம் நடைபெறுகின்றது. இதனால் ஊரும், உலகும், உயிரும் வாழ, படைத்தல், காத்தல், அழித்தல், அருளல், மறைத்தல் என்னும் பஞ்சகிருத்தியம் நிகழ்கின்றன. இதனால் ஆன்மாவிடம் காணப்படும் ஆணவம், கன்மம், மாயை என்னும் மலம் யாவும் நீங்கிட அருளல் அழிக்கும் வகையில் அமையும் மகோற்சவத்தில் தேர்த்திருவிழா புனிதமான ஒன்று ஆகும். அனைத்து அடியார் வாழ்வுக்கும் அஞ்ஞான இருள் அகற்றி மெஞ்ஞான வாழ்வு பெற்றுக் கொடுக்கும் வகையில் தேரேறி வந்து அருள் புரியும் பிடாரி அம்பிகையே இவ்வுலக ஜீவன்கள் உன் பிள்ளைகளாய் விளங்கிக் கொள்கின்றனர். அவர்களை அன்னையாக இருந்து ஆறுதல் அளிப்பாய் தாயே. மகிடாசுரனை சங்கரித்து மகிடாசுரமர்தனியாக சிங்கவாகனத்தில் சிம்மநாயகியாக அடியார் உள்ளம் என்னும் தேர்ப்பீடம் ஏறி திருவீதிப் பவனி வருங்காலத்து வந்ததுயர், வரும் துயர் யாவும் போக்கி "மண்ணில் நல்லவண்ணம்" நலமாக வாழ வாழ்வு தந்தருள உன் அபயகரம் அருட்கரமாய் உலகத்தின் உமையவளே அருள்புரிய நாமெல்லோரும் தேர்த்திருவிழாவில் போற்றி வணங்குகிறோம்.

"தேரேறித் திருவீதிப் போர்செய்த
தேசத்துத் திருநாயகியே அடியார்வினை
போக்கிடவே கொக்குவில் பிடாரிநாயகியாய்
தேரேறித் தேசமெல்லாம் வாழ்வு தந்திடம்மா!

செஞ்சொல்வேந்தன், சைவப்புலவர், சைவசித்தாந்த பண்டிதர்,
க.நித்தியதசீதரன், இந்துதர்மாசிரியர் சைவப்புலவர் சங்க உபபரீட்சை செயலாளர்.



## இந்து இளைஞர் மன்றத்தாரின் ஆசிச் செய்தி

வேண்டுவோர் வேண்டும் வரங்களை கொடுத்திடும் பிடாரி தாயே, "ஆடித் தேர் ஏறி" அடியவரின் குறைகளை எல்லாம் நீக்கி, உலகெமெல்லாம் வாழும் அடியவர்கள் இன்புற்று சகல சௌபாக்கியமும் பெற்று வாழ அம்பிகையைப் பிரார்த்திக்கின்றோம்.

இந்து இளைஞர் மன்றம், பிடாரி அம்பாள் ஆலயம்.

## தேரேறி வந்து உலகம் உய்ய வழிகாட்டம்மா!



ஈழமணித்திருநாட்டில் பிடாரி அம்பாள் ஆலயங்கள் மிகச் சிலவே இருக்கின்றன. அவற்றுள் மிகப்பெரிய பிடாரி அம்பாள் ஆலயமாகவும், வரலாற்றுச் சிறப்பையும் தொன்று தொட்டு மரபுப் பெருமையையும் கொண்டது வண்.வட மேற்கில் அமைந்து இருக்கும் சிறி வீரமா பிடாரி அம்பாள் ஆலயம் ஆகும். சக்தியின் வெவ்வேறு வடிவங்களில் பிடாரி அம்பாள் வடிவமும் ஒன்று.

உலகம், உயிர் இறைவன் ஆகியவற்றினுள்ளே ஊடுருவியுள்ள ஆற்றலே பராசக்தியாகும். அந்த சக்திதேவியே எல்லாம் வல்லவள். எங்கும் எதிலும் நிறைந்தவள். முத்தொழிலுக்கும் மூலதேவதையாக அவள் விளங்குகின்றாள். அத்தேவியின் வடிவமாக அமைந்துள்ள பிடாரி அம்பாள் இவ்வூர் மக்களின் நெஞ்சத்தில் மட்டுமல்ல, கடல் கடந்து வாழும் பல பக்தர்களின் நெஞ்சத்திலும் நிறைந்திருக்கின்றாள். அவள் இன்று சித்திரத் தேரினிலே சிங்காரமாக வருகிறாள். துன்பங்கள், சுமை சுமையாக எம்மீது ஏற, தாங்க முடியாது தவித்து நின்ற வேளைகளில் எல்லாம் எம்மைக்காத்து நின்றதாயே! கலங்கி நிற்கும் எங்களுக்கு வழிகாட்டத் தேரேறி வருவாய். அமைதியும் சாந்தியும் கிட்ட அருள் புரிவாய்! வடம் பிடித்து இழுக்கின்றோம் வளமான வாழ்வும் ஆன்மீக நெறியும் தழைத்தோங்க அருள் புரியம்மா!


அ. குமாரவேல், தலைவர், ஆலய பரிபாலனசபை.

## தேரேறிவரும் பிடாரி அம்பிகையே!

அம்பிகையே ஈஸ்வரியே ஆதிபராசக்தியே
அருள்புரிவாய் அகிலாண்ட பரமேஸ்வரியே
நம்பியுனை சரண் அடைந்தோம் அன்னையே
நமக்கருள் செய் பிடாரி அம்பிகையே
தும்பி முகனின் தாயே தோத்தரித்தோம் அம்மா
தேரேறி வந்தே திருவருள் புரிவாய் நீயே
வெம்பியழுதே நிற்கின்றோம் வேதனை தீர்த்திடுவாய்
வேதநாயகியே தாயே சரணம்! சரணம்!!

தேரேறி வரும் தேவியே சரணம் அம்மா
தோத்தரித்தோம் உன்னையே காத்தருள் புரிவாய
போரோய்ந்து பூமியில் நாம் நிம்மதியாய் வாழ
திருவருள் புரிவாய் தாயே பிடாரி அம்பிகையே
வேரோடு வினை களைந்து வேதனைகள் தீர்த்தே
வில்லங்கம் போக்கிடுவாய் சர்வேஸ்வரியே
பாரோர் புகழ்ந்தேத்தும் பரமேஸ்வரியே அம்மா
பத்ம பதம் பணிந்தோம் தேவி சரணம் சரணம்.

- நவாலியூர் ஸ்தபதி தி.சந்திரன்.




தேரேறிவந்து எம் உறவுகளின் துயர் தீர்ப்பாய் தாயே!

**தேர்த் திருவிழாச் சிறப்புற வாழ்த்துவோர்**

**பாக்கியா இசைப் பயிலகம்**
(சங்கீதம், மிருதங்கம், ஓகன்)
மணியர்பதி, கொக்குவில்.

**பிரன்ஸ் சிகை அலங்கரிப்பு நிலையம் (பாபு)**
மானிப்பாய் வீதி, ஆனைக்கோட்டை.

**சாருஜன் கொமினிகேசன்**
பணப்பரிமாற்றசேவை, இன்ரர்நெட், தொலைபேசி அழைப்பு வழங்குநர்
கொக்குவில் சந்தி.

**தயாழின் வீடியோ சென்ரர் & பான்சி ஹவுஸ்**
பிடாரி அம்மன் கோயிலடி, கொக்குவில் மேற்கு.

**பரணி கிறீம் கவுஸ்**
கே.கே.எஸ்.வீதி, கொக்குவில் சந்தி.

**ஷண் கபே**
969, கே.கே.எஸ். வீதி, அரசடிப்பிள்ளையார் கோயிலடி, யாழ்ப்பாணம்.

**முருகானந்தம் ஸ்ரோர்ஸ்**
ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

**றோமியோ சிகை அலங்கரிப்பு நிலையம்**
மானிப்பாய் வீதி; ஆனைக்கோட்டை.

**பாலகணேசன் களஞ்சியம்**
225, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

**துவாரகேஸ்வரன் பூமாலை**
பொன்னையா லேன், கொக்குவில்.

**சிறி மீனாட்சி தங்கமாளிகை**
187, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

**சிறி அம்பாள் வெல்டிங் வேக்ஸ்**
கே.கே.எஸ். வீதி, நாச்சிமார் கோயிலடி.

**சானுகா நகைமாடம்**
200G, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

**செந்தூரன் எலக்ரிக்கல்**
கே.கே.எஸ். வீதி, கொக்குவில்.

**கமலேஸ்வரி ஸ்ரோர்ஸ் & ஜெயலக்ஷன் பான்சிஹவுஸ்**
கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்.

**ரூபன் களஞ்சியம்**
கேணியடி, கொக்குவில்.

**கொழும்பு எசன்ஸ் ஹவுஸ்**
பெரிய கடை, யாழ்ப்பாணம்.

**திஷானன் வாகன சேவை**
கொக்குவில் மேற்கு, கொக்குவில்.
தொ.பே: 0776611764, 0214591218

**பூரணி நகைமாடம்**
1/4, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

**ஞான களஞ்சியம்**
ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.

**சுந்தர்சன்**
பிரதான வீதி, மானிப்பாய்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 31ஆம் நாள் நினைவஞ்சலி



மலர்வு 27 • 11 • 1927

உதிர்வு 24 • 06 • 2009

## வேலுப்பிள்ளை கந்தையா

குடும்பத் தலைவரே! எம் குலவிளக்கே!
உங்களுடன் கூட வந்த சொந்தமும்
நீங்கள் உருவாக்கிய பந்தமும்
தேடிய சொத்தும் உறவும்
வாசல்படி பார்த்து வாடியமலராய்
நிற்கின்றார்கள் கண்ணீர் மல்க.

(83373)

எமது குடும்பத்தலைவரின் மரணச் செய்தி கேட்டு நேரில் வந்து உதவி புரிந்தவர்களுக்கும், அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும் இறுதிக்கிரியைகளில் பங்கு பற்றிய யாவருக்கும் நன்றியைத் தெரிவிக்கின்றோம்.

இன்று (24.07.2009) வெள்ளிக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் வீட்டுக் கிருத்திய நிகழ்விலும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் பங்குபற்றி தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக் கின்றோம்.

ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

"கமலபதி", மாகியப்பிட்டி, சண்டிலிப்பாய். என்றும் நினைவுடன்: குடும்பத்தினர்.

# 2ஆம் ஆண்டு நீங்காத நினைவலைகள்

திருமதி
## ஜெகதீஸ்வரி மகேஸ்வரன்
(யேந்தா)



மலர்வு 09.01.1966 உதிர்வு 17.07.2007

திதி: திருதியை (24.07.2009)

நேற்று வரை
எம்மோடு இருந்தாய்
எங்களில் ஒருத்தியாய்
அன்போடு வாழ்ந்தாய்
காலமெல்லாம் எமைக்
காத்திருப்பாய் என்றிருக்க
கண்ணீரைத் தந்துவிட்டு
விண்ணோடு நீ போனாய்
ஆண்டுகள் இரண்டாய்
அழுது துடிக்கின்றோம்
மீண்டும் நீ வருவாயென்ற
நினைப்பில் வாழ்கின்றோம்.

பிரிவால் துயருறும்:
அன்புக் கணவர்,
பாசமிகு பிள்ளைகள், அப்பா, அம்மா,
சகோதரர்கள், உறவினர்கள்.

"யேந்தா இல்லம்", கைதடி வடக்கு, கைதடி.

(சி/559809)

# அந்தியேட்டி அழைப்பும் நன்றி நவிலலும்

## M.வசந்தன் வ.நிவேதியன்



பிறப்பு 17 • 07 • 1972
இறப்பு 24 • 04 • 2009



பிறப்பு 07 • 01 • 2005
இறப்பு 27 • 04 • 2009

* முல்லைத்தீவைப் பிறப்பிடமாகக் கொண்ட முருகேசு- சின்னமணி தம்பதியரின் செல்வப் புதல்வனும், பேரனும்.
* உரும்பிராயைச் சேர்ந்த துரைராசா- குணேஸ்வரி தம்பதியரின் அன்பு மருமகனும், பேரனும்.

கடந்த 24.04.2009, 27.04.2009 ஆகிய தினங்களில் சிவபதமடைந்த (தம்பி, பெறாமகன், கணவர், மகன்) M.வசந்தன், வ.நிவேதியன் ஆகியோரது மரணச் செய்தி அறிந்து நேரில் வந்தும், தொலைபேசிமூலம் தொடர்பு கொண்டும் எமது துன்பத்தில் பங்கு கொண்டு எமக்கு ஆறுதல் கூறிய அன்புள்ளங்களுக்கு எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம். அத்துடன்இன்று (24.07.2009) வெள்ளிக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் இவர்களின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர்களை அன்புடன் அழைக்கின்றோம்.

73, சாத்திரியார் லேன்,
அரியாலை,
யாழ்ப்பாணம்.

(87238)

தகவல்:
செல்வம்- (அண்ணன்),
மனைவி- தமிழ்ச்செல்வி
(தர்சினி).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





'பழமரச் செய்கையில் புதிய தொழில்நுட்பம்' என்னும் தொனிப்பொருளிலான வயல்விழா நிகழ்வு அண்மையில் கரவெட்டி, செட்டிதோட்டத்தில் இடம்பெற்றது.
திருநெல்வேலி விவசாய ஆராய்ச்சி நிலையப் பொறுப்பதிகாரி செ.விஜயரத்தினம் உரையாற்றுவதையும் நெல்லியடி ம.வி. அதிபர் செ.சேதுராஜா, கரவெட்டி விவசாயப் போதனாசிரியர் வை.ஞானபாஸ்கரன், பிரதி விவசாயப் பணிப்பாளர் சி.சிவகுமார், கரவெட்டிப் பிரதேச செயலக உதவித் திட்டப் பணிப்பாளர் சி.ஸ்ரீபாஸ்கரன், புலோலி கமநல சேவைகள் திணைக்கள பெரும்பாக உத்தியோகத்தர் ச.உருத்திரேஸ்வரன், விவசாய விரிவாக்கல் திணைக்கள உதவி விவசாயப் பணிப்பாளர் சி.ஸ்ரீபாலசுந்தரம், சிறந்த முறையில் பழப்பயிர்ச்செய்கையில் ஈடுபட்ட விவசாயி தி.அருணாசலம் ஆகியோர் அமர்ந்திருப்பதை முதலாவது படத்தில் காணலாம்.
தேசியில் புதிய தொழில்நுட்பம் தொடர்பாக விவசாயப் போதனாசிரியர் எஸ்.சிவனேசன் விளக்கமளிக்கிறார் இரண்டாவது படத்தில். (253)

# வாழ்வாதாரத் திட்டங்களின் வெற்றி பயனாளிகள் கைகளிலே தங்கியுள்ளது

## யாழ்.பிரதேச செயலக உதவித் திட்டப்பணிப்பாளர் கருத்து

யாழ்ப்பாணம்,ஜூலை24

வாழ்வாதாரத் திட்டங்களின் வெற்றி பயனாளிகளின் கைகளிலேயே தங்கியுள்ளது. யாழ்.மாவட்ட மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்காக அரச மற்றும் அரசசார்பற்ற நிறுவனங்களால் பல்வேறு உதவித் திட்டங்கள் வழங்கப்படுகின்ற போதும் இத்திட்டங்கள் மக்கள் பங்களிப்புடன் முன்னெடுக்கப்படும்போதே அவை முழுமையாக வெற்றிபெறும்.

இவ்வாறு தெரிவித்தார் யாழ்.பிரதேச செயலக உதவித் திட்டப் பணிப்பாளர் எஸ்.சிவச்சந்திரன்.

''சொண்ட்'' அரசசார்பற்ற நிறுவன வாழ்வாதார உதவித் திட்டம் வழங்கும் நிகழ்வு நிறுவன அலுவலகத்தில் அண்மையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினர்களாக சாவகச்சேரிப் பிரதேச செயலக உதவிப் பிரதேச செயலர் திருமதி அ.சாந்தசீலன், யாழ்.பிரதேச செயலக உதவித் திட்டப் பணிப்பாளர் எஸ்.சிவச்சந்திரன் ஆகியோர் கலந்துகொண்டு பயனாளிகளுக்கு உதவித் திட்டங்களை வழங்கி வைத்தனர்.

இந்நிகழ்வில் அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்:

மக்களின் பங்களிப்புடன் முன்னெடுக்கப்படும் எந்தவொரு செயற்றிட்டமும் தோல்வியடைவதில்லை. எனவே எந்தச் செயற்றிடத்தை முன்னெடுப்பதாக இருந்தாலும் மக்களின் பங்களிப்பினை அவற்றுள் ஈடுபடுத்த முயற்சிப்பதன் ஊடாகத் திட்டத்தின் முழுப் பயனையும் குறிப்பிட்ட மக்கள் அனுபவிப்பதற்கு வாய்ப் பேற்படுத்தப்படுகின்றது - என்றார். (201)

# நெடுந்தீவுக்கு நீர் விநியோகம்; ஒரு மில்லியன் ரூபா ஒதுக்கீடு

நெடுந்தீவு,ஜூலை24

நெடுந்தீவு குழாய்நீர் விநியோகத் திட்டத்திற்கென ஒரு மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

வடக்கின் வசந்தம் செயலணியின் மூலம் இந்த நிதி ஒதுக்கீடு செய்யப்படுவதாக மேற்படி செயலணியின் தலைவர் நாடாளுமன்ற உறுப்பினர் பசில் ராஜபக்ஷ அறிவித்துள்ளார்.

உள்ளூராட்சித் திணைக்களத்தின் ஊடாக மேற்படி நிதி செலவு செய்யப்படும் எனத் தெரிவிக்கப்படுகிறது. (203-111)

# யோகாசனப் பயிற்சி

யாழ்ப்பாணம்,ஜூலை24

யாழ்.சிவானந்த மகரிஷி யோக நிலையத்தின் ஏற்பாட்டில் யோகாசன வகுப்புகள் கடந்த 19ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை ஆரம்பமாகியுள்ளன.

இந்தப் பயிற்சியில் கலந்துகொள்வோர் இன்று வெள்ளிக்கிழமை வேதாந்த மடம், குமாரசாமி வீதி, கந்தர்மடம் என்னும் முகவரிக்கு வருகைதருமாறு கேட்கப்பட்டுள்ளது. (204)

# அலுமினியம் பொருத்தும் பயிற்சிநெறிகள்

நல்லூர்,ஜூலை24

கிராம அபிவிருத்தித் திணைக்களம் வடக்கின் வசந்தம் திட்டத்தின்கீழ் அலுமினியம் தொடர்பான பயிற்சிநெறிகளை வழங்கவுள்ளது.

நல்லூர், கல்வியங்காடு, சங்கிலியன் சனசமூக நிலைய மண்டபத்தில் எதிர்வரும் முதலாம் திகதி சனிக்கிழமை பயிற்சி நெறிகள் ஆரம்பமாகவுள்ளது.

தெரிவுசெய்யப்பட்ட 25 பேருக்கு 6 மாத காலப் பயிற்சிகள் வழங்கப்படவுள்ளதாக யாழ்.மாவட்டக் கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி ஜெயராசா தெரிவித்தார். (203-111)

# தரம் 5 மாணவருக்கு முன்னோடிப் பரீட்சை

நல்லூர்,ஜூலை24

யாழ்.வலயப் பாடசாலைகளில் தரம் 5 மாணவர்களுக்கான மாகாண மட்டப் புலமைப் பரிசில் முன்னோடிப் பரீட்சை நாளை சனிக்கிழமை காலை 9 மணிக்கு நடைபெறும்.

பாடசாலை அதிபர்கள் உரிய கோட்டக் கல்வி அலுவலகங்களில் வினாப் பொதிகளைப் பெற்றுக்கொள்ளுமாறு யாழ்.வலய கல்விப் பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம் அறிவித்துள்ளார். (203-111)

# அரியாலையில் கல்வி அபிவிருத்தி நிதியம்

யாழ்ப்பாணம்,ஜூலை24

அரியாலை ஸ்ரீ கலைமகள் சனசமூக நிலையத்தின் எல்லைக்குட்பட்ட மாணவர்களின் கல்வி வசதி கருதி கல்வி அபிவிருத்தி நிதியம் ஒன்று ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.

மேற்படி சனசமூக நிலையத்தின் 63ஆவது ஆண்டு நிறைவு விழாவுக்கு பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட யாழ்.பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் தலைவர் ப.கிரிதரன் ஒரு தொகைப் பணத்தை வழங்கி இந்த நிதியத்தை ஆரம்பித்துவைத்தார்.

இந்தப் பகுதியில் வறுமைக்கோட்டின் கீழ் உள்ள மாணவர்களின் கல்வி அபிவிருத்திக்கு இந்த நிதியம் மூலம் பல்வேறு உதவித்திட்டங்கள் மேற்கொள்ளப்படும் என்று தெரிவிக்கப்பட்டது. (203-224)

# கொல்லங்கிராய் - நுணாவில் பாதையை புனரமைப்புச் செய்து தருமாறு கோரிக்கை

## பிரதேச செயலரிடம் மகஜர் கையளிப்பு

யாழ்ப்பாணம்,ஜூலை24

அண்மையில் போக்குவரத்துக்குத் திறந்துவிடப்பட்ட கொல்லங்கிராய் - நுணாவில் பாதையில் உள்ள பற்றைகளை வெட்டித் துப்புரவு செய்யுமாறு தென்மராட்சித் தெற்குப் பிரதேச மக்கள் சாவகச்சேரி பிரதேச சபைச் செயலாளரை மகஜர் மூலம் கோரியுள்ளனர்.

கடந்த மூன்று வருடங்களாக இப்பாதை போக்குவரத்துக்கு மூடப்பட்டிருந்ததால் பாதையின் இருமருங்கிலும் பற்றைகள் வளர்ந்து போக்குவரத்துச் செய்யமுடியாமல் உள்ளதாகவும் மகஜரில் குறிப்பிட்டுள்ளனர்.

இந்த மகஜரின் பிரதிகள் தென்மராட்சிப் பிரதேச செயலர், யாழ்.அரச அதிபர் ஆகியோருக்கும் அனுப்பப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (203-207)

# 5ஆயிரம் பைக்கற் சிமெந்து கப்பல் மூலம் எடுத்துவரப்பட்டது

யாழ்ப்பாணம்,ஜூலை24

யாழ்.மாவட்ட விவசாய உற்பத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம் கொழும்பில் இருந்து ஐயாயிரம் பைக்கற் சிமெந்துகளைக் கப்பல் மூலம் எடுத்துவந்திருப்பதாகச் சமாசத் தலைவர் ப.கிரிதரன் தெரிவித்தார்.

கப்பல் மூலம் கொண்டுவரப்பட்ட இந்தச் சிமெந்துகளை நுகர்வோருக்கு விநியோகிக்கப்பதற்குச் சமாசம் நடவடிக்கையை மேற்கொண்டுள்ளது.

சிமெந்து தேவைப்படுவோர் சமாசத்துடன் தொடர்புகொள்ளுமாறும் கேட்கப்பட்டுள்ளது.

இதனைவிட ஏ9 பாதையூடாக மேற்படி சமாசத்திற்கு பாரவூர்திகளில் அத்தியாவசியப் பொருள்களும் தொடர்ந்து எடுத்துவரப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (203-224)




# உடுபுடைவை விற்பனையாளர் குடாநாட்டில் அதிகரிப்பு

வலி.வடக்கு,ஜூலை24

இந்தியாவில் இருந்து வந்து வீடு வீடாகச் சென்று உடுபுடைவைகள் விற்பனை செய்பவர்களின் எண்ணிக்கை குடாநாட்டில் அதிகரித்துக் காணப்படுகின்றது.

கால்நடையாகவும், சைக்கிள்களிலும் குடாநாட்டின் அனைத்துப் பகுதிகளுக்கும் சென்று ஆண்கள், பெண்களுக்குரிய அனைத்து வகையான உடுபுடைவைகளையும் விற்பனை செய்து வருகின்றார்கள்.

இவர்கள் அரச திணைக்களங்கள், அலுவலகங்களுக்கும் மதியபோசன இடைவேளையில் சென்று அங்குள்ளவர்களுக்கும் கடன் அடிப்படையில் உடுபுடைவைகளை விற்பனை செய்துவருகின்றனர். (203-86)




யாழ்ப்பாணம்,ஜூலை24

அளவெட்டி தெற்கு, எவளிவயல் முத்துமாரியம்பாள் ஆலய வருடாந்தப் பெருந்திருவிழா நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்குக் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

எதிர்வரும் 4ஆம் திகதி செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணிக்குத் தேர்த்திருவிழாவும் மறுநாள் புதன்கிழமை முற்பகல் 10 மணிக்குத் தீர்த்தத் திருவிழாவும் நடைபெறும். (204)

* * *

வடமராட்சி,ஜூலை24

மந்திகை கண்ணகை அம்மன் ஆலய வருடாந்த அலங்காரத் திருவிழாவின் தீர்த்தத் திருவிழா நாளை சனிக்கிழமை நடைபெறும். (204-236)

* * *

யாழ்ப்பாணம்,ஜூலை24

சாவகச்சேரி வாரிவனநாத சிவன் ஆலய அமிர்தபாஷினி அம்பாள் ஆடிப்பூர திருவிழா கடந்த 16ஆம் திகதி ஆரம்பமாகி நடைபெற்று வருகிறது.

ஆடிப்பூர தினமான நாளை சனிக்கிழமை விசேட பூசையுடன் திருவிழா நிறைவு பெறும். (204-207)

* * *

வடமராட்சி,ஜூலை24

துன்னாலை மிந்திரன் அம்மன் ஆலய வருடாந்த அலங்காரத் திருவிழாவின் தேர்த்திருவிழா இன்று வெள்ளிக்கிழமையும் தீர்த்தத் திருவிழா நாளை சனிக்கிழமையும் நடைபெறும். (204-236)

* * *

யாழ்ப்பாணம்,ஜூலை24

ஸ்ரீ இராஜராஜேஸ்வரி அம்பாள் ஆலய ஆடிப்பூரத் திருவிழா நாளை சனிக்கிழமை காலை அம்பாளுக்கு விசேட அபிஷேகத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

அன்றைய தினம் காலை 9 மணி தொடக்கம் பிற்பகல் 3மணிவரை பக்தர்கள் வழிபடப் படையினர் அனுமதியளித்துள்ளனர்.

இதனால் அடியார்கள் அனைவரையும் தெல்லிப்பழை தடைமுகாமுக்கு காலை 9 மணிக்கு முன்பு வருகை தருமாறு கேட்கப்பட்டுள்ளது. (204)

* * *

யாழ்ப்பாணம்,ஜூலை24

நயினாதீவு நாகபூஷணி அம்மன் ஆலய ஆடிப்பூரத் திருவிழா நாளை சனிக்கிழமை காலை 108 சங்காபிஷேகம், 1008 சங்காபிஷேகம் என்பவற்றுடன் ஆரம்பமாகவுள்ளது. தொடர்ந்து விசேட தீபாராதனைகள், பூசைகள் என்பன இடம்பெற்று அம்பாள் வீதியுலா வருவார்.

# கவிஞர் முருகையனின் நினைவு நிகழ்வு

யாழ்ப்பாணம்,ஜூலை24

'சாகித்ய ரத்னா , கலாநிதி கவிஞர் இ.முருகையனின் நினைவு நிகழ்வு நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை பி.ப. 2.30 மணிக்கு நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரியில் நடைபெறும். இந்நிகழ்வில் நீர்வை மணி - சிவஸ்ரீ கு.தியாகராஜக் குருக்கள் தலைமை வகிப்பார். வலி.கிழக்குப் பிரதேச சபைச் செயலாளர் த.நடராஜா வரவேற்புரை வழங்குவார்.

இந்த நிகழ்வில் சிறப்புரைகளை யாழ்.பல்கலைக்கழகத் தமிழ்த்துறைத் தலைவர் பேராசிரியர் எஸ்.சிவலிங்கராஜா, கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ், இந்துசமய ஆசிரியர் பிரம்மஸ்ரீ சி.சிவசரவணபவன் (சிற்பி), த.ந.பஞ்சாட்சரம், சங்கானை கோட்டக்கல்வி அலுவலர் துரை எங்கரசு ஆகியோர் வழங்குவர்.

சிறப்பு நிகழ்வாக 'கவிதைக்குள் உயிரொன்றி வாழ்' என்னும் தலைப்பில் கவியரங்கு இடம்பெறும். (203-55)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அமுதசுரபி அன்னதான சபையின்

## ஆடிப்பூர அன்னதானம் பற்றிய அறிவித்தல்

அம்பிகை அடியார்களே!

நாளை (25.07.2009) சனிக்கிழமை நடைபெற இருக்கும் ஆடிப்பூர விழாவை முன்னிட்டு நயினை நாகபூஷணி அம்மனைத் தரிசிக்கவரும் அடியார்களுக்கு வழமைபோல் அன்னதானம் வழங்க சிறந்த முறையில் ஏற்பாடு செய்யப் பட்டுள்ளது என்பதை மகிழ்வுடன் அறியத் தருகின்றோம். அடியார்களின் பிரயாண வசதி கருதி அன்று மு.ப.11 மணிக்கு அன்னதானம் ஆரம்பிக்க முடிவு செய்துள்ளோம். எனவே அம்பிகையைத் தரிசிக்கவரும் அடியார்கள் அம்பிகையைத் தரிசித்தபின் அன்னதான சபைக்குச் சமுகமளித்து அன்னதானத்தில் பங்குபற்றுமாறு பணிவன்புடன் வேண்டுகின்றோம்.

நிர்வாகம்,
நயினை ஸ்ரீ நாகபூஷணி
அமுதசுரபி அன்னதான சபை.

### மாவடி வைரவர் ஆலயத்தில் திருடர்கள் கைவரிசை

சங்கானை, ஜூலை 24

சங்கானை மாவடி ஞானவைரவர் ஆலயத்துள் உட்புகுந்த திருடர்கள் அங்கிருந்து பெறுமதி வாய்ந்த பொருள்களைத் திருடிச் சென்றுள்ளனர்.

மூலஸ்தான வைரவர் சிலையை புரட்டி அதன் கீழ் இருந்த பெறுமதியான பொருள்களைத் திருடியுள்ளனர். அத்துடன் களஞ்சிய அறையில் இருந்த ஒலி பெருக்கி சாதனங்களும் திருடப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

ஒரு லட்சத்துக்கு மேற்பட்ட பெறுமதியான பொருள்கள் கொள்ளையிடப் பட்டுள்ளதாகவும் இது தொடர்பாக மானிப்பாய் பொலிஸ் நிலையத்தில் முறையிடப்பட்டுள்ளதாகவும் கூறப்பட்டது. (203-29)

### கட்டடத் திறப்பு விழா

யாழ்ப்பாணம், ஜூலை 24

இலங்கை ஜனநாயக சோசலிய குடியரசின் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ச வின் வழிகாட்டலில் வடக்கின் வசந்தம் வேலைத்திட்டத்தின் கீழ் சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் பங்களிப்புடன் யாழ். மாவட்டக் காரியாலயம் மற்றும் தொழிற் பயிற்சி நிலையம் என்பன திறந்து வைக்கப்படவுள்ளன.

இந்த நிகழ்வுகள் எதிர்வரும் திங்கட்கிழமை முற்பகல் 11 மணிக்கு இல.375, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் தொழில் மற்றும் தொழில்நுட்ப பயிற்சி அமைச்சர் பியசேன கமகே இந்தக் கட்டடங்களைத் திறந்து வைப்பார். (204)

## வீடு விற்பனைக்கு

நாவலர் வீதிக்கும் நிராவியடிக்கும் இடையில் 1½ பரப்புக் காணியுடன் வீடு விற்பனைக்குண்டு.
தொடர்பு: 42, கடையிற் சுவாமி வீதி,
யாழ்ப்பாணம். (கடையிற் சுவாமி கோயிலுக்கு எதிரில்).

## ஓராண்டு நினைவஞ்சலி

அன்னை மடியில்: 21 • 08 • 1930



ஆண்டவன் அடியில்: 04 • 08 • 2008

**திருமதி வேதநாயகி கனகசபாபதி**
திதி. பூர்வபக்க திருதியை (24. 07. 2009)

அன்போடும் பண்போடும் வளர்த்தெடுத்தீர்
பாரினிலே பலர் வியக்க ஏற்றி வைத்தீர்
எம் நல் வாழ்வுக்கு வழிகாட்டி வித்திட்டீர்
என்றென்றும் உம் நினைவு எம் நெஞ்சில் நிறைந்திருக்கும்
உங்கள் ஆத்ம சாந்திக்காக இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

நல்லினி சிவராம்
"சிவவாசா"
கற்பகப்பிள்ளையார் வீதி" உரும்பிராய் வடக்கு. குடும்பத்தினர்.

## முதலாம் ஆண்டு நினைவலைகள்

மலர்வு: 20 • 05 • 1945



உதிர்வு: 03 • 08 • 2008


**திருமதி தங்கராசா நிர்மலாதேவி**
திதி: திருதியை (24.07.2009)

ஓராண்டு முடிந்தாலும்- உங்கள்
பேர்த்தி உம் கதைதான் தினமும்.
உங்கள் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

வல்வை றோட்,
தொண்டைமானாறு.
இ.தங்கராசா
குடும்பத்தினர்.

## 6ஆம் மாத நினைவஞ்சலி

தோற்றம்: 19 ★ 01 ★ 1940



மறைவு: 24 ★ 01 ★ 2009

அமரர்
**பொன்னர் தர்மலிங்கம்**
(ராசாண்ணை)
காட்டடைப்பு வீதி, காங்கேசன்துறை.

ஓராறு மாதங்கள் உருண்டோடி விட்டனவே ஐயா
ஆறாத மனத்தோடு அபலை என் விழிகளில் என்றும் ஓயாது பெருகும் கண்ணீர் ஆறு
வேரறுந்த மரங்களின் காய்ந்த பூக்களாய் கருகி விட்டோம் ஐயா!
எங்களோடு இரண்டறக் கலந்து வாழ்ந்த தங்களின்
இனிய வண்ணவண்ண எண்ணங்கள் தான் மறைந்திடுமோ?
தயையும் தருமமும் நிறைந்த தங்களின் எழில் முகம்தான் மறைந்திடுமோ ஐயா!
தங்களின் இனிய முகத்தையும் இன்சொல்லையும் காணாது கேட்காது கலங்கி
இன்னமும் உம் நினைவை ஏந்தியே எல்லோரும் தவம் கிடக்கிறோம் ஐயா!

முதலி கோயில் வீதி,
தாவடி கிழக்கு,
கொக்குவில்.

மனைவி - பராசக்தி
மற்றும் பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

## தவறிவிட்டது

சிறுவிளான், இளவாலை என்னும் முகவரியுடைய சோதிநாதன் கலைவாணி என்பவரது தே.அ.அ.(855024829V) சுன்னாகத்தில் தவறி விட்டது. கண்டெடுத்தவர்கள் 0772718292 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.

## ஓராண்டு நினைவஞ்சலி



**திருமதி யாழினி கந்தவேள்**
தோற்றம்: 10.03.1983 மறைவு: 24.07.2008

இளவயதினில் உன்னை இழந்ததினால்
உன் இழப்பு வேதனை மட்டுமல்ல- அது
இன்று எம் இதயங்களில் ஏக்கமும்-
ஏமாற்றமுமாகவே......

உங்கள் பிரிவால் துயருறும்:
கணவர் கந்தவேள்,
பிள்ளைகள்: அபிதயன், அட்சயன்.
அம்மம்மா, பப்பா,
சகோதரன்-பிரணவன்,
சித்தி, சித்தப்பா

(இ/559529)

[illegible]
விடத்தற்பளை, மிருசுவில். 31, சமாதி வேன், திருகோணமலை.

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி

மண்ணில்: 04.03.1962



விண்ணில்: 24.06.2009

அமரர் **கதிரவேலு உமாபாலன்**
(சாயி அன்பன்-ஆன்மீகவாதி)

எத்தனை நாள்கள் சென்றாலும்
உமது நினைவுகள் என்றென்றும்
அழியாது. ஆத்மா சாந்தியடைய
அனைத்துத் தெய்வங்களையும்
பகவான் "சாயி பாபா" வையும்
பிரார்த்திக்கின்றோம்.

இன்று (24.07.2009) வெள்ளிக்கிழமை மு.பகல் 10 மணியளவில் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகளும், மதியபோசனமும் மூத்த சகோதரி இல்லத்தில் (கந்தரோடையில்) நடைபெறும் என்பதனை அறியத் தருகின்றோம்.

நாகபூஷணி அம்மன் ஆலயம்,
கந்தசாமி ஆசிரியர் வீதி, கந்தரோடை, சுன்னாகம்.

என்றும் நினைவுடன்:
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை கடற்படையினர் பிடித்துச்சென்ற தமிழக மீனவர் மன்னார் சிறையில் சித்திரவதை

## மண்டபத்தில் அவர்கள் பேட்டி

இராமேஸ்வரம், ஜுலை 24

இலங்கையில் விடுதலை செய்யப்பட்ட இராமேஸ்வரம் மீனவர்கள் 21 பேர் நேற்றுமுன்தினம் மண்டபம் அழைத்து வரப்பட்டனர். அவர்கள் சிறையில் உணவு, தூக்கமின்றி தவித்தனர் எனக் கூறினர்.

இராமேஸ்வரத்தில் இருந்து கடந்த 4ஆம் திகதி 600இற்கும் மேற்பட்ட விசைப்படகுகளில் மீன்பிடித்து கொண்டிருந்த 21 மீனவர்களை படகுகளுடன் இலங்கைக் கடற்படையினர் பிடித்துச்சென்றனர்.

பின்னர் அவர்கள் மன்னார் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டு அனுராதபுரம் சிறையில் அடைக்கப்பட்டனர். இதைத் தொடர்ந்து 21 மீனவர்களையும், 5 படகுகளையும் விடுவிக்கக் கோரி இராமேஸ்வரத்தில் மீனவர்கள் காலவரையற்ற வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டனர்.

இதையடுத்து மத்திய - மாநில அரசுகள் நடவடிக்கை எடுத்ததன் பேரில் கடந்த 8ஆம் திகதி 5 படகுகளையும், 21 மீனவர்களையும் இலங்கை அரசு விடுதலை செய்தது. ஆனால் தொடர்ந்து கடல் கொந்தளிப்பு இருந்ததால் அவர்களை இராமேஸ்வரத்துக்கு அழைத்து வருவதில் சிக்கல் ஏற்பட்டது.

இந்த நிலையில் நேற்றுமுன்தினம் காலை 10 மணிக்கு 5 படகுகளுடன் 21 மீனவர்களையும் இலங்கைக் கடற்படையினர் சர்வதேச கடல் எல்லைக்கு அழைத்து வந்தனர். அங்கு தயாராக நின்ற இந்தியக் கடலோரக் காவல்படையிடம் அவர்களை ஒப்படைத்தனர். பின்னர் இந்தியக் கடற்படையினர், 21 மீனவர்களையும் மண்டபத்துக்கு அழைத்து வந்தனர்.

அவர்களிடம் கடலோர காவல்படையினர் மற்றும் மத்திய புலனாய்வுத் துறையினர் விசாரணை நடத்தினர். அதன் பின்னர் 21 மீனவர்களும் இராமேஸ்வரம் மீன்துறை உதவி இயக்குநர் இளம்வழுதி, மீன்துறை ஆய்வாளர்கள் சின்னகுப்பன், அஸ்மத்துல்லாகான் ஆகியோரிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

விடுதலையாகி வந்த மீனவர்கள் மலைச்சாமி, சேகர், சுப்பிரமணியன் ஆகியோர் செய்தியாளர்களிடம் கண்ணீர் மல்க கூறியவை வருமாறு -

கடந்த 4 ஆம் திகதி இந்தியக் கடல் எல்லையில் மீன்பிடித்து கொண்டிருந்தபோது 2 ரோந்துப் படகுகளில் வந்த இலங்கை கடற்படையினர் வானத்தை நோக்கி துப்பாக்கியால் சுட்டபடி எங்கள் படகைச் சுற்றிவளைத்தனர். பின்னர் படகில் ஏறி குழாய்களால் தாக்கி எங்களை தரக்குறைவாக பேசினர். அதன்பின் எங்களை பிடித்துச் சென்று தலைமன்னார் நீதிமன்றில் ஒப்படைத்து சிறையில் அடைத்தனர்.

அங்கு ஒரு அறையில் 300இற்கும் மேற்பட்ட சிங்களக் கைதிகளுடன் எங்களையும் சேர்த்து அடைத்தனர். நாங்கள் தமிழர்கள் என்று தெரிந்ததும் சிறையில் இருந்த சிங்களக் கைதிகள் எங்களைத் தூங்கவிடாமல் சித்திரவதை செய்தனர். அங்கு முறையாக உணவு வழங்கப்படவில்லை. நாங்கள் சிறையில் உணவின்றி, தூக்கமின்றி நரக வேதனை அனுபவித்தோம்.

கடந்த 15ஆம் திகதி அனுராதபுரம் சிறையில் இருந்து விடுதலை என்று கூறி மன்னார் கடற்கரைக்கு எங்களை அழைத்து வந்தனர். ஆனால் அன்று கடல் கொந்தளிப்புக் காரணமாக அனுப்புவதில் சிக்கல் ஏற்பட்டது.

இதனால் அங்குள்ள ஆலயத்தில் எங்களை தங்கவைத்தனர். நேற்றுமுன்தினம்தான் எங்களால் வரமுடிந்தது. அவர்கள் எங்களை ஒப்படைக்கும்போது எல்லைதாண்டி மீன்பிடிக்க வரக்கூடாது என்று எச்சரித்தனர் - என்றனர்.



இலங்கைக் கடற்படையால் விடுவிக்கப்பட்ட இராமேஸ்வரம் மீனவர்கள் 21 பேரை இந்தியக் கடலோர காவல்படையினர் மண்டபம் பகுதிக்கு அழைத்து வந்தபோது...

# இதுவரையில் 3 லட்சம் தமிழ் அகதிகள் இலங்கையிலிருந்து தமிழகம் வருகை!

புதுடில்லி, ஜூலை 24

இலங்கையில் நடைபெற்ற போரால் அங்கிருந்து இதுவரை 3 லட்சத்து 2 ஆயிரத்து 543 தமிழ் அகதிகள் தமிழ்நாட்டுக்கு வந்துள்ளனர் - என்று உள்துறை இணை அமைச்சர் அஜய் மக்கான் நேற்றுமுன்தினம் புதன்கிழமை தெரிவித்தார்.

மாநிலங்களவையில் உறுப்பினர் ஸ்ரீகோபால் வியாஸ் எழுப்பிய கேள்விக்கு பதிலளித்துப் பேசியபோதே அவர் இதைத் தெரிவித்தார்.

மேலும் அவர் கூறியவை வருமாறு -

இலங்கையில் இருந்து 24.07.1983 முதல் 02.07.2009 வரை நான்கு கட்டங்களாக மொத்தம் 3 லட்சத்து 2 ஆயிரத்து 543 தமிழ் அகதிகள் தமிழ்நாட்டிற்கு வந்துள்ளனர். அவர்களுடைய வருகை இன்னும் தொடர்ந்து கொண்டிருக்கிறது.

இதுவரை சுமார் ஒரு லட்சம் தமிழ் அகதிகள் அவர்களுடைய சம்மதத்துடன் இலங்கைக்கு இரண்டு கட்டங்களாக மீண்டும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர் - என்றார்.

# செங்கல்பட்டு சிறப்பு முகாமில் ஈழ அகதிகள் உண்ணாவிரதம்

செங்கல்பட்டு, ஜூலை 24

செங்கல்பட்டில் உள்ள சிறப்பு முகாமில் இலங்கை அகதிகள் 60 பேர் புதன்கிழமையிலிருந்து காலவரையற்ற உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

இம்முகாமில் மொத்தம் 85 பேர் பல்வேறு வழக்குகளில் கியூப் பிரிவு பொலிஸாரால் கைது செய்யப்பட்டு அடைக்கப்பட்டுள்ளனர்.

இம்முகாமில் உள்ள செல்வக்குமார், ஜெயதாசன், சத்யசீலன் ஆகிய 3 பேர் கடந்த 6 நாள்களாக உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். இந்த மூன்று பேருடன் இணைந்து உண்ணாவிரதப் போராட்டத்தை தீவிரப்படுத்தும் நோக்கில் மேலும் முகாமில் உள்ள 60 பேர் நேற்றுமுன்தினம் புதன்கிழமையில் இருந்து காலவரையற்ற உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

இவர்கள் தங்களை திறந்த வெளி முகாமில் சுதந்திரமாக வைக்கவும், தங்கள் மீதுள்ள வழக்குகள் குறித்த குற்றப்பத்திரிக்கையைத் தாக்கல் செய்யக் கோரியும், வழக்குகளைத் துரிதப்படுத்தி விரைவில் தங்கள் மீதுள்ள வழக்குகளை விசாரித்து வழக்கிலிருந்து விடுத்து தங்கள் குடும்பத்துடனும், உறவினர்களுடனும் சேர்த்து வைக்கக் கோரியும் காலவரையற்ற உண்ணாவிரதம் மேற்கொண்டுள்ளனர்.

பொலிஸ் டி.எஸ்.பி. பாலசுப்ரமணியம், நகர பொலிஸ் இன்ஸ்பெக்டர் ஆல்பர்ட் வில்சன், கியூப் பிரிவு டி.எஸ்.பி. விஸ்நாதன் உள்ளிட்ட பொலிஸாரும் வட்டாட்சியர் வெங்கடேசன் மற்றும் வருவாய்த்துறை அலுவலர்கள் பேச்சில் ஈடுபட்டுள்ளனர்.

அப்போது அவர்கள், தமிழக அமைச்சர் யாராவது வந்து உறுதியளித்தால்தான் உண்ணாவிரதத்தை கைவிடுவோம் என்றனர். இதனால் உண்ணாவிரதம் தொடர்கிறது.

# முழு சூரியகிரகண நேரத்தின்போது குமரிக் கடல் உள்வாங்கல் - சீற்றம்

கன்னியாகுமரி, ஜுலை 24

கன்னியாகுமரியில் சூரிய கிரகணத்தின் போது ஒரு புறம் கடல் உள்வாங்கியது. அதே நேரம் மறுபுறம் கடுமையான கடல் சீற்றம் இருந்தது.

சூரிய கிரகணத்தை பார்க்க நேற்றுமுன்தினம் அதிகாலை 5 மணியில் இருந்தே கன்னியாகுமரி கடற்கரையில் சுற்றுலாப் பயணிகள் கூட்டம் அதிகமாக இருந்தது. அப்போது கன்னியாகுமரி முக்கடலும் சங்கமிக்கும் சங்கிலித்துறை கடற்கரையில் சுமார் 50 மீற்றர் தூரத்திற்குக் கடல் திடீரென உள்வாங்கியது.

இதனால் கடலுக்கு அடியில் உள்ள பாசி படிந்த பாறைகளும், மணல் திட்டுகளும் வெளியே தெரிந்தன. மேலும் கடலுக்குள் இருந்த அபாயப் பாறையும் முழுவதுமாக வெளியே தெரிந்தது.

பின்னர் சூரிய கிரகணம் முடிந்ததும் கடல் நீர்மட்டம் கொஞ்சம், கொஞ்சமாக உயரத் தொடங்கியது. உடனே அபாயப் பாறைக்குச் சென்ற சுற்றுலாப் பயணிகளும் அவசர அவசரமாகக் கரைக்கு திரும்பினர்.

இந்து மகாசமுத்திரத்தில் கடல் உள்வாங்கியிருந்த அதே நேரத்தில், கன்னியாகுமரியின் மறுபுறம் உள்ள வங்கக் கடல் பகுதியிலும், அரபிக்கடல் பகுதியிலும் கடல் சீற்றம் அதிகமாக காணப்பட்டது. சுமார் 20 அடி உயரம் வரை அலைகள் எழும்பின. எப்போதும் நீல நிறத்தில் காணப்படும் கடல், நேற்றுமுன்தினம் கலங்கி செம்மண் நிறத்தில் காட்சி அளித்தது.

# என்னைத் தூக்கில் போடலாம்!

## தீவிரவாதி கஸாப் தெரிவிப்பு



மும்பை, ஜூலை 24

மும்பைத் தாக்குதல் சம்பவத்தில் நான் புரிந்த குற்றத்தை ஒப்புக்கொண்டமை தண்டனையிலிருந்து தப்பிக்க அல்ல - என்று பாகிஸ்தான் தீவிரவாதி முகம்மது அஜ்மல் கஸாப் கூறினார்.

வேண்டுமென்றால் தன்னைத் தூக்கில் போட்டாலும் அதை ஏற்கத் தயார் என்றும் சிறப்பு நீதிமன்றத்தில் அவர் தெரிவித்தார்.

சிறப்பு நீதிபதி எம்.எல்.தஹிலியானி முன்னிலையில் நேற்றுமுன்தினம் புதன்கிழமை

மேலும் கஸாப் கூறியவை வருமாறு -

தண்டனையிலிருந்து தப்பிக்கும் நோக்கத்தில் எனது குற்றத்தை ஒப்புக் கொண்டேன் எனக் கருத வேண்டாம். இந்தச் சந்தேகம் சிலருக்கு ஏற்பட்டுள்ளது. அப்படி இருந்தால் என்னை தூக்கிலிடுங்கள் - என்றார்.

குற்றத்தை ஒப்புக்கொண்டதால் ஏற்படக்கூடிய விளைவு பற்றி கஸாபுக்குத் தெரியுமா என்பதை உறுதி செய்யும்படி முன்னதாக, சிறப்பு நீதிமன்றத்திடம் அரசு தரப்பு கோரிக்கை விடுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# இந்திய - பாக். கூட்டறிக்கை, அமெ. அணு ஒப்பந்தம்: அதிருப்தியில் சோனியா; அதிர்ச்சியில் மன்மோகன்!

புதுடில்லி, ஜூலை 24



இந்தியா - பாகிஸ்தான் கூட்டறிக்கை பற்றியும், அமெரிக்காவுடன் செய்துகொண்ட இராணுவக் கொள்முதல் ஒப்பந்தத்தில் புதிதாக விதிக்கப்பட்டுள்ள கட்டாய நிபந்தனைகள் தொடர்பாகவும், எதிர்க்கட்சிகள் எழுப்பியுள்ள நியாயமான ஆட்சேபங்கள் காரணமாக பிரதமர் மன்மோகன் சிங் மீது காங்கிரஸ் தலைவி சோனியா காந்தி அதிருப்தியாக இருக்கிறார். இதை அறிந்து பிரதமர் மன்மோகன் சிங் அதிர்ச்சியில் ஆழ்ந்திருக்கிறார்.

மிகப்பெரிய அரசியல் மாற்றத்துக்கு இது வழிவகுத்தாலும் வியப்பதற்கு ஏதும் இல்லை என்று அரசியல் வட்டாரங்கள் கருதுகின்றன.

எகிப்தில் மன்மோகன் சிங்கும், பாகிஸ்தான் பிரதமர் யூசுப் கிலானியும் கடந்த16ஆம் திகதி சந்தித்துப் பேசினர். பின்னர் கூட்டறிக்கை வெளியிடப்பட்டது. அதில் -

'எல்லாவற்றையும் உள்ளடக்கிய ஒருங்கிணைந்த பேச்சுக்கான நடவடிக்கைகளைத் தொடங்க, பயங்கரவாதத்துக்கு எதிராக எடுக்கப்படும் நடவடிக்கைகளை நிபந்தனைபோல தொடர்புபடுத்தக் கூடாது' என்று ஒரு வாசகம் இடம் பெற்றிருந்தது. இப்போது இதுதான் பெரிய புயலைக் கிளப்பியிருக்கிறது.

இதுகுறித்து பாரதிய ஜனதாக் கட்சி உள்ளிட்ட எதிர்க்கட்சிகள் நாடாளுமன்றத்தில் புதன்கிழமை அரசிடம் விளக்கம் கேட்டன. எதிர்க்கட்சிகளின் ஆட்சேபத்தில் உள்ள நியாயத்தை உணர்ந்திருந்ததால் காங்கிரஸ் கட்சியின் மூத்த தலைவர்கள் யாரும் பிரதமரை ஆதரித்து நாடாளுமன்றத்தின் உள்ளேயோ, வெளியேயோ பேசவில்லை. இதுவும் சோனியா காந்திக்கு மிகுந்த மன வருத்தத்தை அளித்துள்ளது.

இந்தக் காரணங்களால் பிரதமர் மன்மோகன் சிங் மீது சோனியா காந்தி அதிருப்தியாக இருக்கிறார். அதே சமயம் அவரைத் தனிமையில் விட்டு விடக்கூடாது என்பதிலும் அக்கறையாக இருக்கிறார்.

இந்நிலையில் நேற்றுமுன்தினம் காலை டில்லியில் உயர்நிலைக் கூட்டம் ஒன்றை சோனியா கூட்டினார். நிதியமைச்சர் பிரணாப் முகர்ஜி, சோனியாவின் அரசியல் செயலர் அகமது படேல் உள்ளிட்ட மூத்த தலைவர்கள் கலந்து கொண்டனர். இவ்விரு விவகாரங்களால் என்ன அரசியல் விளைவுகள் ஏற்படும் என்று அப்போது விவாதிக்கப்பட்டது.

இந்த இரு பிரச்சினைகளுக்கும் பதில் அளிக்கும் விதத்தில் அறிக்கை தயாரிக்கும் பொறுப்பை பிரணாப் முகர்ஜி ஏற்றிருக்கிறார். அதை நாடாளுமன்றத்தில் அறிவித்து பிரதமரையும் அரசையும் தருமசங்கடத்திலிருந்து அவர் மீட்பார் என்று தெரிகிறது.

# இடதுசாரிக் கட்சிகள் தனித்துப் போட்டி? பிளவுபடுகின்றது அ.தி.மு.க. கூட்டணி!

சென்னை, ஜூலை 24

தமிழகத்தில் நடைபெறவுள்ள 5 சட்டப் பேரவை தொகுதிகளுக்கான இடைத்தேர்தலில் போட்டியிட கம்யூனிஸ்ட் கட்சிகள் முடிவு செய்துள்ளன எனத் தெரிகிறது. இதனால் அ.தி.மு.க. கூட்டணி உடையும் சூழல் ஏற்பட்டுள்ளது.

இடைத்தேர்தலில் வாக்குப்பதிவு நியாயமாக நடப்பதற்கான சூழல் இல்லை என்று கூறி, தேர்தலைப் புறக்கணிப்பதாக கடந்த திங்கட்கிழமை அ.தி.மு.க. அறிவித்தது. அம்முடிவை ம.தி.மு.க., பா.ம.க. ஆகிய கூட்டணிக் கட்சிகள் ஆதரித்துள்ளன.

இந்நிலையில் அ.தி.மு.க. கூட்டணியில் இடம்பெற்றுள்ள மற்ற இரு கம்யூனிஸ்ட் கட்சிகளின் முடிவு குறித்து அறிய பரவலான எதிர்பார்ப்பு ஏற்பட்டுள்ளது.

இந்தச் சூழலில் இடதுசாரிக் கட்சிகளின் மாநிலச் செயற்குழுக் கூட்டங்களும் சென்னையில் நேற்று புதன்கிழமை தனித்தனியாக நடைபெற்றன. கூட்டத்துக்குப் பின் இரு கட்சிகளின் முக்கிய தலைவர்களும் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி அலுவலகத்தில் சந்தித்துப் பேசினர்.

தி.மு.க., அ.தி.மு.க. ஆகிய இரு கூட்டணிகளையும் விட்டு, வரும் இடைத்தேர்தலில் இரு கம்யூனிஸ்ட் கட்சிகளும் தனித்துப் போட்டியிடலாம் என்ற முடிவுக்கு வந்துள்ளன எனத் தெரிகிறது.

இந்தச் சூழலில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில நிர்வாகக் குழுக் கூட்டம் இன்று வெள்ளிக்கிழமை திருச்சியில் நடைபெறுகிறது. மார்க்சிஸ்ட் கட்சியின் மாநிலக் குழுவும் அன்றே திருச்சியில் கூடுகிறது.

தனித்தனியாக நடைபெறும் அக்கூட்டங்களில் சென்னையில் புதன்கிழமை நடைபெற்ற இரு கட்சிகளின் மாநில செயற்குழு கூட்ட முடிவுக்கு ஒப்புதல் பெறப்படும். அதன் பின் அன்று மாலை, இடைத்தேர்தலில் தனித்துப் போட்டியிடும் முடிவை இரு கம்யூனிஸ்ட் கட்சிகளின் தலைவர்களும் கூட்டாக அறிவிப்பார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது.

தமிழகத்தில் [illegible] அரசியல் சூழ்நிலை[illegible] உடையும் நிலை ஏற்பட்டுள்ளது எனத் தெரிகிறது.

# அவுஸ்திரேலிய பிரதமர் இந்தியாவுக்கு வருகை

அவுஸ்திரேலிய பிரதமர் கெவின் மைக்கேல், துணைப் பிரதமர் ஜூலியா கில்லர்ட் ஆகியோர் இந்த ஆண்டு இறுதிக்குள் இந்தியா வருகின்றனர்.

நேற்று டில்லியில் மத்திய மனிதவள மேம்பாட்டுத்துறை அமைச்சர் கபில் சிபலைச் சந்தித்துப் பேசிய அவுஸ்திரேலிய குடியேற்றத்துறை அமைச்சர் கிறிஸ் இவான்ஸ் மேற்கண்ட தகவலை செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

வெளிநாட்டு மாணவர்களுக்கு பாதுகாப்பு அளிப்பதில் நாங்கள் தீவிரம் காட்டி வருகிறோம் என்றும் அவர் கூறினார்

பொருளாதாரம், கல்வி, அறிவியல் மற்றும் தொழில்நுட்பம் ஆகிய துறைகளில் இருநாடுகளுக்கும் இடையே புதிய ஒத்துழைப்பு குறித்து ஆஸி. பிரதமர், துணைப் பிரதமர் ஆகியோரின் இந்திய வருகையின்போது ஆலோசிக்கப்படும் என்று இந்தியாவுக்கான அவுஸ்திரேலிய தூதர் ஜான் மெக்கார்த்தி தெரிவித்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யாழ்ப்பாணம் மாநகர சபை மற்றும் வவுனியா நகர சபைத் தேர்தல் - 2009.08.08

### உடற்தகுதியீனம் காரணமாக விசேஷ வாகனத்தினைப் பயன்படுத்துவதற்கான விண்ணப்பம்

2002 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் (திருத்தச்) சட்டத்தினால் முதன்மைச் சட்டவாக்கத்திற்குச் சேர்த்துக்கொள்ளப்பட்ட 82(எ) 4(ஈ) ஆம் பிரிவின் பிரகாரம் ஏதேனும் உடற்தகுதியீனம் காரணமாக எவரேனுமொருவர் நடந்தோ அன்றி இலங்கை மத்திய போக்குவரத்துச் சபையினால் அல்லது பிரதேச போக்குவரத்துச் சபையினால் அல்லது இலங்கை அரசாங்க புகையிரதத் திணைக்களத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட ஏதேனும் பொதுப் போக்குவரத்துச் சேவையிலோ வாக்கெடுப்பு நிலையத்திற்குப் போய்வர முடியாதவராக இருந்தால், தான் வாக்கெடுப்பு நிலையத்திற்கு போய்வரும் நோக்கத்திற்காக தனது தேர்தல் பிரதேசத்தின் தெரிவத்தாட்சி அலுவலருக்கு தானாகவோ அல்லது அவ்வாறு முடியாதிருப்பின் தனக்குப் பதிலாக வேறொருவர், வேட்பாளர் அல்லாத வேறு எவரேனும் ஆளினால் விண்ணப்பிக்கலாம்.

02. இவ்வசதியினைப் பெற்றுக்கொள்வதற்கான விண்ணப்பத்தினை வாக்கெடுப்பு நடைபெறும் தினத்திற்கு ஏழு நாள்களுக்கு முன்னதாக - அதாவது 2009 ஜூலை மாதம் 31 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னதாக உரிய தெரிவத்தாட்சி அலுவலருக்கு கிடைக்குமாறு சமர்ப்பித்தல் சட்டமுறையான தேவையொன்றாகும் என்பதோடு தெரிவத்தாட்சி அலுவலர் திருப்தியடைந்தால் இந்நோக்கத்துக்கென அந்நபருக்கு விசேஷ போக்குவரத்து வசதியினைப் பெற்றுக்கொள்வதற்கான உத்தரவுப்பத்திரத்தை வழங்கலாம்.

03. விண்ணப்பத்தினை சமர்ப்பிக்கும் நபர் நடந்து அல்லது பொது வாகனங்களில் போக முடியாதவாறு உடற்தகுதியீனம் உற்றிருப்பின் தன்மையை விபரித்து (மேல்நாட்டு அல்லது சுதேச வைத்தியர்) பதிவு செய்யப்பட்ட வைத்தியர் ஒருவரிடமிருந்து பெறப்பட்ட வைத்திய அத்தாட்சிப்பத்திரமொன்றின் மூலம் தமது விண்ணப்பத்தை உறுதிப்படுத்துவாரெனில் அதற்கான முடிவை மேற்கொள்வதற்கு தெரிவத்தாட்சி அலுவலர்களுக்கு இலகுவாகவிருக்கும். தன்னைப் பரிசோதித்து அறிக்கையொன்றைச் சமர்ப்பிக்குமாறு ஒருவர் அரசாங்க வைத்தியரிடம் / பதிவு செய்த அல்லது உதவி வைத்திய தொழில் புரியும் ஒருவரிடம் அல்லது ஆயுர்வேத வைத்தியரிடம் விண்ணப்பிக்குமிடத்து அவர் அவ்வைத்திய அறிக்கையினை கட்டணமெதுவுமின்றிப் பெற்றுக்கொள்ளலாம். தனியார் (மேல்நாட்டு அல்லது சுதேச) வைத்தியர்களிடமிருந்து பெறப்படும் அறிக்கைகளில் அவ்வைத்தியரின் பெயரையும் பதிவு செய்யப்பட்டுள்ள இலக்கத்தையும் குறிப்பிட வேண்டும்.

04. 2ஆம் பந்தியில் குறிக்கப்பட்ட திகதியன்றோ அல்லது அதற்கு முன்போ கிடைக்குமாறு இதற்கென இத்துடனுள்ள மாதிரிப் படிவத்திற்கிணங்க தயாரிக்கப்பட்ட விண்ணப்பப்பத்திரங்களை தேர்தல் பிரதேசத்தின் (உள்ளூர் அதிகார சபை) தெரிவத்தாட்சி அலுவலருக்குச் (மாவட்டச் செயலாளர் அல்லது உதவித் தேர்தல்கள் ஆணையாளருக்குச்) சமர்ப்பித்தல் வேண்டும்.

தேர்தற் செயலகம்,
சரண மாவத்தை,
ராஜகிரிய.
2009.07.24

தயானந்த திசாநாயக்க,
தேர்தல்கள் ஆணையாளர்.

### யாழ்ப்பாணம் மாநகர சபை மற்றும் வவுனியா நகர சபைத் தேர்தல் - 2009.08.08

உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டம்
(அத்தியாயம் 262)

**82(எ) 4(ஈ) ஆம் பிரிவின் கீழ் வாகனமொன்றைப் பயன்படுத்துவதற்கென உடற்தகுதியீனமுற்றுள்ள ஒருவரினால் சமர்ப்பிக்கப்படும் விண்ணப்பம்.**

.................................................... சபையின் தெரிவத்தாட்சி அலுவலருக்கு.
(உள்ளூர் அதிகார சபையின் பெயர்)

1) உடற்தகுதியீனம் உள்ளவரின் விபரம் :- ....................................................
....................................................................................................

(அ) முழுப் பெயர் :- ....................................................

(ஆ) அஞ்சல் முகவரி:- ....................................................
....................................................................................................
....................................................................................................

(இ) தேருநர் இடாப்பிலுள்ளவாறு உள்ளூர் அதிகார சபை, வாக்கெடுப்பு மாவட்டம், தொடர் இலக்கம் (தெரியுமாயின்) :- ....................................................
....................................................................................................

2) உடற்தகுதியீனம் பற்றிய சுருக்கமான விவரம்:- ....................................................

3) உடற்தகுதியீனம் உற்றவருக்காக வேறு எவராலும் விண்ணப்பப்படிவம் அனுப்பப்படுமாயின் அவரது பெயரும் முகவரியும்:- ....................................................
....................................................................................................
....................................................................................................

4) இவ் விண்ணப்பத்தை உறுதிப்படுத்துவதற்காக அரசாங்க வைத்தியர் ஒருவரின்/ பதிவு செய்யப்பட்ட அல்லது உதவி வைத்தியத் தொழில் புரியும் ஒருவரின்/ ஆயுர்வேத வைத்தியர் ஒருவரின்/ தனியார் வைத்தியரொருவரின் அறிக்கை ஒன்றை இத்துடன் அனுப்புகின்றேன்.

வைத்தியரின் பெயர் :- ....................................................

பதிவிலக்கம் :- ....................................................

5) மேலே குறிப்பிடப்பட்டுள்ள 2 ஆம் பந்தியில் விவரிக்கப்பட்டுள்ளவாறு உடற்தகுதியீனம் காரணமாக எனக்கு/ உடற்தகுதியீனம் உற்றுள்ள மேலே காணப்படுபவருக்கு நடந்து அல்லது இலங்கை மத்திய போக்குவரத்துச் சபை அல்லது இலங்கை அரசாங்க புகையிரதத் திணைக்களத்தினால் அல்லது ஏதேனும் பொதுப் போக்குவரத்து சேவை எதனிலும் ஏற்பாடு செய்யப்பட்ட போக்குவரத்து வசதி மூலம் ஒரு வாக்கெடுப்புக்குப் போக முடியாதென இத்தால் வெளிப்படுத்துகிறேன்.

6) மேற்கூறப்பட்ட வாக்கெடுப்பின்போது வாக்கினைப் பிரயோகிக்கும் பொருட்டு வாக்கெடுப்பு நிலையத்திற்கு போய் வருவதற்குகென நான் / உடற்தகுதியீனம் உற்ற மேலே பெயர் குறிக்கப்பட்டுள்ளவர் ஏதுமொரு வாகனத்தை பயன்படுத்துவதற்கு எழுத்து மூலமான உத்தரவினை வழங்குமாறு இத்தால் கேட்டுக்கொள்கிறேன்.

....................................................
**உடற்தகுதியீனமானவரின் / அவருக்காக விண்ணப்பிக்கும் வேறொருவரின் ஒப்பம் அல்லது பெருவிரல் அடையாளம்.**

திகதி:- ....................................................

## கண்ணகை அம்மன் ஆலய தேர்த்திருவிழா இன்று

யாழ்ப்பாணம், ஜூலை 24

அச்செழு; கொக்கிருந்தபதி கண்ணகை அம்மன் ஆலய தேர்த்திருவிழா இன்று வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு நடைபெறவுள்ளது.

காலை 6 மணிக்கு விசேட பூசையுடன் ஆரம்பமாகி தொடர்ந்து வசந்த மண்டபப் பூசை இடம் பெறும்.

9 மணியளவில் அம்பாள் புதிதாக வடிவமைக்கப்பட்ட சித்திரத்தேரில் எழுந்தருளி பக்தர்களுக்கு அருள் பாலிப்பார்.

(203-72)

## முன்பள்ளி ஆசிரியர்கள் கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், ஜூலை 24

தென்மராட்சி பிரதேச முன்பள்ளி ஆசிரியர்களுக்கான கலந்துரையாடல் எதிர்வரும் 27, 28 ஆகிய திகதிகளில் நடைபெறும்.

கொடிகாமம் பிரதேச முன்பள்ளி ஆசிரியர்களுக்கான கலந்துரையாடல் 27 ஆம் திகதி பகல் ஒரு மணியளவில் மீசாலை வீரசிங்கம் மகா வித்தியாலயத்திலும் சாவகச்சேரி பிரதேச முன்பள்ளி ஆசிரியர்களுக்கான கலந்துரையாடல் 28 ஆம் திகதி பகல் ஒரு மணிக்கு மட்டுவில் தெற்கு தேனொளிமுன்பள்ளியிலும் நடைபெறுமென வலயக் கல்விப் பணிப்பாளர் கு.பிரேமகாந்தன் அறிவித்துள்ளார்.

## கருத்தரங்கு

யாழ்ப்பாணம், ஜூலை 24

தென்மராட்சி பிரதேச அறநெறிப் பாடசாலைகளின் ஆசிரியர்களுக்கான கருத்தரங்கு நாளை சாவகச்சேரி டிறிபேக் கல்லூரியில் நடைபெறும்.

இந்து சமய கலாசார திணைக்களத்தினால் நடத்தப்படவுள்ள இக் கருத்தரங்கில் பிரதேசத்தைச் சேர்ந்த சகல அறநெறிப் பாடசாலை ஆசிரியர்களும், பொறுப்பாசிரியர்களும் இந்து சமய ஆர்வலர்களும் கலந்துகொள்ளுமாறு பிரதேச இந்து சமய அபிவிருத்தி அலுவலர் அறிவித்துள்ளார்.

## கௌரவிப்பு விழா

யாழ்ப்பாணம், ஜூலை 24

வலி.தென்மேற்கு பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட நவாலி வடக்கு - பெத்தனாச்சி நாச்சிமார் அம்மன் தேவஸ்தான மின்சார திறப்பு விழாவும் - கௌரவிப்பு விழாவும் எதிர்வரும்26 ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை பி.ப. 1.30 மணிக்கு இடம் பெறும்.

தேவஸ்தான உபதலைவர் சி.ஆனந்தர் தலைமையில் நிகழ்வு இடம்பெறும்.

## தொண்டர் ஆசிரியர்களுக்கான ஒன்று கூடல்

யாழ்ப்பாணம், ஜூலை 24

யாழ்.மாவட்ட தொண்டர் ஆசிரியர்களுக்கான ஒன்றுகூடல் நாளை சனிக்கிழமை காலை 8.30 மணிக்கு யாழ்.ஆரியகுளம் சந்தியில் அமைந்துள்ள புதிய உயர் கல்லூரி மண்டபத்தில் நடைபெறும் என யாழ். மாவட்ட தொண்டர் ஆசிரியர் சங்கம் அறிவித்துள்ளது. (204)

## 9 ஆம் ஆண்டு நினைவலைகள்



அமரர்
**அம்பலவாணர் குலசேகரம் J.P.**
(இளைப்பாறிய நூலகர்,
சாவகச்சேரி டிறிபேர்க் கல்லூரி,
இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர்)

தோற்றம்: 26.08.1937
மறைவு: 24.07.2000

**என்றும் உங்கள் நினைவுடன்......**

கைதடி, நுணாவில்,
சாவகச்சேரி.

ஆத்மா சாந்திக்காகப் பிரார்த்திக்கும்:
**மனைவி, பிள்ளைகள்.**

## ஓராண்டு நினைவஞ்சலி

பிறப்பு: 12.07.1945



இறப்பு: 24.07.2008

**விக்னராஜா சீவரட்ணம்**
திதி: 12.08.2009

**தேன் சொட்டும் உம்பேச்சு எமை விட்டு போய்**
**ஓராண்டு ஆனதுவோ!**
**கதறுகின்றோம் நாம் இங்கே**
**பதறுகின்றோம் நீர் எங்கே!**
**அன்பான அரவணைப்பும்**
**அழகான உம் முகமும்-நாம்**
**அகிலத்தில் உள்ளவரை அழியாது எம் நெஞ்சில்**
**அன்பாக நீர் அழைக்கும் பேச்சுக்கள்**
**ஒலிவொன்றும் காதோரம் ஒலிக்குதையா!**

"விமலகம்",
கெருடாவில் தெற்கு,
தொண்டைமானாறு.

*தகவல்:*
**குடும்பத்தினர்**
**(சிவபுத்திரன்-மைத்துனர்).**

(சி/559811)

## 31ஆம் நாள் நினைவஞ்சலி

தோற்றம்
01 ★ 09 ★ 1951



மறைவு
24 ★ 06 ★ 2009

**திருமதி துரைசிங்கம் கமலேஸ்வரி**

பண்பின் பிறப்பிடமாய் பிறந்து பாசத்தின் உறைவிடமாய்
வாழ்ந்து எங்களுக்கு நல்வழிகாட்டி வளர்த்த எங்கள்
அன்புத் தாயே!
இறுதிவரை எம்மோடு இணைந்திருப்பீர்கள் என்றிருந்தோம்
இடைநடுவில் எமைத் தவிக்கவிட்டு எங்கம்மா சென்றீர்கள்!
எங்குதான் எமைவிட்டு நீங்கள் பிரிந்து சென்றாலும்
உங்கள் நினைவுகள் என்றும் எமைவிட்டு மறையாதம்மா!
என்றும் நீங்கள் எமது உள்ளங்களில் வாழ்ந்துகொண்டே
தான் இருப்பீர்கள்.

உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

66/10, 5 ஆம் ஒழுங்கை,
பிறவுண் வீதி, யாழ்ப்பாணம். (86979)

என்றும் நினைவுடன்:
**பிள்ளைகள்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செய்திச் சாரம்... செய்திச் சாரம்...

## பயனாளிகளுக்கு வேண்டுகோள்

தென்மராட்சி,ஜூலை24

மிருசுவில் படித்த மகளிர் குடியேற்றத்தில் வசிக்கும் நாகன் பரமேஸ்வரி, பாலச்சந்திரன் பாக்கியம் ஆகியோரை ஏற்கனவே வழங்கப்பட்ட காணி பெர்மிட்டுடன் எதிர்வரும் திங்கட்கிழமைக்கு முன்னர் பிரதேச செயலகத்துக்கு வருகை தருமாறு தென்மராட்சிப் பிரதேச செயலர் செ.ஸ்ரீநிவாசன் அறிவித்துள்ளார். (201-207)

## தவறி விழுந்து காயம்

யாழ்ப்பாணம்,ஜூலை24

வீட்டின் கூரை ஓடுகளில் காணப்பட்ட குப்பைகளை அகற்றும் பணியில் ஈடுபட்ட நபர் தவறி வீழ்ந்ததில் கால் முறிந்தது.

இச்சம்பவம் நுணாவிலில் இடம்பெற்றது.

இதே இடத்தைச் சேர்ந்த ஆர்.இந்திரன் (வயது 51) என்பவர் கால் முறிந்த நிலையில் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலைக்கு அனுப்பிவைக்கப்பட்டார். (201-207)

## அரச உத்தியோகத்தருக்கு கடன் வசதிகள்

நவாலி,ஜூலை24

தேசிய வீடமைப்பு அதிகார சபையில் கடன் கோரி விண்ணப்பம் செய்யும் அரச உத்தியோகத்தர்களுக்கு 2 லட்சம் ரூபா வழங்கப்படுமென்று அறிவிக்கப்பட்டுள்ளது.

சொந்தக் காணியில் புதிய வீடு கட்ட விரும்புபவர்கள் 50 வயதிற்குட்பட்ட இரு அரச உத்தியோகத்தர்களின் பிணையுடன் இக்கடனுக்கு விண்ணப்பம் செய்யலாமென்று தெரிவிக்கப்படுகிறது.

மேலதிக விவரங்களை அறிய விரும்புபவர்கள் பிரதேச செயலகங்களில் கடமை புரியும் தொழில்நுட்ப உத்தியோகத்தர்களுடன் தொடர்புகொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளனர். (203-100)

## அதிர்ஷ்டலாபச் சீட்டுகள் விற்பனை

வண்ணை,ஜூலை24

சுரண்டும் லொத்தர் அதிர்ஷ்டலாபச் சீட்டுகள் மீண்டும் யாழ்.நகரில் விற்பனைக்கு வந்துள்ளன.

அதிர்ஷ்டலாபச் சீட்டுகளின் புதிய முகவர் யாழ்.ஆஸ்பத்திரி வீதியில் பஸ் நிலையத்துக்கு முன்பாக குடில் ஒன்று அமைத்து ஆடி அமாவாசைத் தினத்தில் விற்பனையை ஆரம்பித்துள்ளார்.

மகஜன சம்பத மற்றும் புதிய வடிவங்களில் சுரண்டும் சீட்டுகள் ஒவ்வொன்றும் குறிக்கப்பட்ட பத்து ரூபா விலையில் விற்பனை செய்யப்படுகின்றன. (201-160)

## பேருந்துத் தரிப்பிடம் அமைப்பு

கோப்பாய்,ஜூலை24

கோப்பாய் தேசிய கல்வியியற் கல்லூரிக்கு முன்பாகவும், அச்சுவேலி மருந்துவமனைக்கு முன்பாகவும் பேருந்துத் தரிப்பிடம் அமைக்கப்பட்டு வருகிறது.

தேசிய கல்வியற்கல்லூரி சமூகத்தினரும், அச்சுவேலி மருத்துவமனை அபிவிருத்தி சபையினரும் வலி.கிழக்குப் பிரதேச சபையினரிடம் வேண்டுகோள் விடுத்ததைத் தொடர்ந்தே சபை நிதி மூலம் இவ்வேலைத்திட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளதாக வலி.கிழக்குப் பிரதேச சபையினர் தெரிவித்துள்ளனர். (201-72-224)

## சட்டவிரோதமாக மரம் ஏற்ற முயன்றவருக்கு விளக்கமறியல்

யாழ்ப்பாணம்,ஜூலை24

மிருசுவில், தவசிகுளம் பகுதியில் ஆள்களில்லாத காணியொன்றில் மா மரத்தினைச் சட்டவிரோதமாக வாகனத்தில் ஏற்றிச்செல்ல முயன்றதாகக் கூறப்படும் மூவரை கொடிகாமம் பொலிஸார் மடக்கிப் பிடித்தனர்.

சட்டவிரோதமாக மரம் தறித்தமைக்காக ஒருவரையும் அனுமதிப் பத்திரமின்றி வாகனத்தில் மரம் ஏற்றியமைக்காக இருவரையும் பொலிஸார் சாவகச்சேரி நீதிமன்றில் ஆஜர் செய்தனர்.

இந்த மூவரையும் விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார். (203-207)

## இலகு வேலை உலக உணவுத் திட்டத்தால் புனரமைப்புப் பணிகள்

வலி.கிழக்கு,ஜூலை24

வலி.கிழக்குப் பிரதேச சபைப் பிரிவில் நலிவடைந்தோர் நிவாரண வேலைத் திட்டத்தின்கீழ் இலகு வேலைக்கான உலக உணவுத் திட்டத்தால் ஒவ்வொரு கிராம அலுவலர் பிரிவிலும் வீதிகள், கால்வாய்கள், மயானங்கள் என்பன புனரமைப்புச் செய்யப்பட்டு வருகின்றன.

மேற்படி செயலர் பிரிவில் உள்ள 31 கிராமசேவையாளர் பிரிவிலும் 51 வேலைத் திட்டங்கள் 72 ஆயிரத்து 712 மனித நாள்களில் நிறைவுசெய்யப்படவுள்ளன.

இவ்வேலைத் திட்டங்களை வலி.கிழக்குப் பிரதேச செயலகமும் வலி.கிழக்குப் பிரதேச சபையும் இணைந்து முன்னெடுத்து வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது. (201-72)

## சண்டிலிப்பாய் பிரதேசத்தில் 560 அ.அட்டைகள் விநியோகம்

நவாலி,ஜூலை24

சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்தில் தேசிய அடையாள அட்டை பெறுவதற்கு இவ்வருடம் விண்ணப்பித்தவர்களில் இதுவரை 560 பேரின் அடையாள அட்டைகள் விநியோகம் செய்யப்பட்டுள்ளதாகச் செயலக உத்தியோகத்தர் ஒருவர் தெரிவித்துள்ளார். (203-100)

## விளையாட்டு விழா

யாழ்ப்பாணம்,ஜூலை24

நவாலி குடும்ப முன்பள்ளி மாணவர்களின் வருடாந்த விளையாட்டு விழா இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் ஒரு மணியளவில் நவாலி முரசொலி சனசமூக நிலைய முன்றிலில் நடைபெறவுள்ளது.

இதில் சனசமூக நிலையங்களின் அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி க.சிவசோதி பிரதம விருந்தினராகவும் மானிப்பாய் பனை தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கத்தின் பொதுமுகாமையாளர் க.சற்குணலிங்கம் சிறப்பு விருந்தினராகவும் கலந்துகொள்வர். (9)

## கூட்டுறவுப் பயிற்சி வகுப்பு

நவாலி,ஜூலை24

யாழ்.மாவட்ட அபிவிருத்திக்கு கூட்டுறவுச் சங்கத்தின் பொதுச்சபை உறுப்பினர்களுக்கான இரண்டுநாள் கூட்டுறவுப் பயிற்சி வகுப்பு கடந்த 18, 19ஆம் திகதிகளில் சங்க மண்டபத்தில் நடைபெற்றது.

'லான்ட் ஓ லேக்' நிறுவனத்தின் அனுசரணையில் யாழ்.மாவட்டக் கூட்டுறவு ஆணையாளர் தலைமையில் மேற்படி பயிற்சி வகுப்பு இடம்பெற்றது.

இந்தப் பயிற்சி வகுப்புகளை கூட்டுறவு ஆணையரும் ஓய்வுபெற்ற முன்னைநாள் கூட்டுறவு உதவி ஆணையாளர்களும், கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர்களும் நடத்தியமை குறிப்பிடத்தக்கது.

கூட்டுறவு விதிகள், நடைமுறைச் செயற்பாடுகள் தொடர்பான விளக்கங்கள் அளிக்கப்பட்டுள்ளதாக பயிற்சி வகுப்பில் கலந்துகொண்டோர் தெரிவித்துள்ளனர். (201-45)

## புத்தூர் நூலகம் நவீனமயப்படுத்தல்

கோப்பாய்,ஜூலை24

புத்தூர் பிரதேச சபையின் நூலகம் மாகாண நிதி நன்கொடை மூலம் நவீனமயப்படுத்தப்படவுள்ளது. வலி.கிழக்குப் பிரதேச சபையின் நூலக ஆலோசனைச் சபையின் வேண்டுகோளுக்கு அமைவாகவே இத்திட்டம் மேற்கொள்ளப்படவுள்ளது.

இதனடிப்படையில் நூலகம் உசாத்துணைப்பகுதி, இரவல் வழங்கும் பகுதி, வாசிப்புப்பகுதி என பிரிக்கப்பட்டு விஸ்தரிக்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (201-72)

## மயானங்கள் புனரமைப்பு

நீர்வேலி,ஜூலை24

இலகு வேலைத்திட்டத்தின்கீழ் நீர்வேலி வடக்கு சிவியாக்காடு இந்து, கிறிஸ்தவ மயான சுற்றாடல்களும் மாசுவன் காளயன் புலம் மயான சுற்றாடல்களும் புனரமைக்கப்பட்டுள்ளன.

நீர்வேலி வடக்கு கிராம அலுவலரின் முயற்சியால் [illegible] நிறைவேற்றப் [illegible] இப்பகுதி மக்கள் பாராட்டியுள்ளனர். (201)

## 'ஜசாக்' நிறுவனத்தால் பயனாளிகளுக்கு பல்வேறு வாழ்வாதார உதவிகள் வழங்கப்பட்டுள்ளன

யாழ்ப்பாணம்,ஜூலை24


காக்கைதீவு கிராமத்தில் 'ஜசாக்' நிறுவனத்தினால் அங்குள்ள மக்களுக்கு பல்வேறு வாழ்வாதார உதவித் திட்டங்கள் வழங்கப்பட்டுள்ளன.

காக்கைதீவு ஜே/133 கிராம அலுவலர் பிரிவில் உள்ள மக்களுக்கே இந்த உதவிகள் வழங்கப்பட்டுள்ளன. அங்குள்ள 11 பயனாளிகளுக்கு மாடு, 8 பயனாளிகளுக்கு ஆடு என்பவற்றுடன் 3 பயனாளிகளுக்கு 10 ஆயிரம் ரூபா வீதம் உணவு தயாரித்தலுக்கான பொருள்களும் வழங்கப்பட்டுள்ளன.

இந்த உதவி வழங்கும் நிகழ்வில் சண்டிலிப்பாய் பிரதேச கால்நடை வைத்திய அதிகாரி, 'ஜசாக்' நிறுவன உத்தியோகத்தர்களான கே.மனோஜ், ரி.நிமால், எம்.தினேஸ்குமார் ஆகியோர் கலந்துகொண்டனர்.

இதேவேளை,

கரவெட்டி பிரதேச செயலர் பிரிவில் கரவெட்டி வடக்கில் 3 பயனாளிகளுக்கு மாடும் கரவெட்டி மேற்கில் 10 பயனாளிகளுக்கு ஆடும் வழங்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (9)



அளவெட்டி வடக்கு தவளகிரி முத்துமாரி அம்மன் ஆலய தேர்த்திருவிழாவில் சுவாமி தேரில் வீதியுலாவந்து தேர் இருப்பிடத்தில் நிற்பதை முதலாவது படத்திலும் மறுநாள் இடம்பெற்ற தீர்த்தத் திருவிழாவில் சுவாமி வீதியுலா வருவதை இரண்டாவது படத்திலும் காணலாம். (120)



அகில இலங்கை திருமுறை மன்றம் யாழ்.அத்தியடி ஸ்ரீ வீரகத்தி விநாயகர் ஆலயத்தில் அண்மையில் நடத்திய திருமுறைப் பெருவிழாவில் யாழ்.இந்து மகளிர் ஆரம்பப் பாடசாலை மாணவி செல்வி அருந்ததி சற்குணானந்தசர்மா இவ்வாண்டு திருமுறை இசை வல்லாளராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார். கௌரவிப்பு நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட யாழ்.இந்து மகளிர் ஆரம்பப் பாடசாலை அதிபர் தனரஞ்சினி துரைசிங்கம் மாணவி அருந்ததி சற்குணானந்த சர்மாவுக்கு பொன்னாடை போர்த்து மலர்மாலை அணிவித்துப் பரிசு வழங்குவதைப் படத்தில் காணலாம்.

## எண்ணத்தில் உயர்ந்து நில்லுங்கள்

ஞானக்கதிர்

மனிதன் மனிதனாக வாழ்வு பெற்று ஓங்க மகத்தான ஆற்றல்கள் வேண்டும். அந்த மகத்தான ஆற்றலை அடையப் பெறுவதற்கு மாண்புமிகு எண்ணங்கள் அவன் மனதில் உருவாக வேண்டும். வாழ்வின் இயல்புகளை, அதன் சுவடுகளை வென்றெடுப்பதற்கு வாய்மையுறு எண்ணங்களே அவனுக்குக் கிடைக்கும் ஏணிப்படிகள் ஆகும்.

தான் ஒரு மனிதன் என்ற தன்மான உணர்வை அவன் வளர்த்தெடுக்கவேண்டும். தன்னை முழுமையாக நம்பியாக வேண்டும். அதன் பிறகே ஆண்டவனைத் தேட முடியும். தன்னை அவன் நம்புவதற்கு, தன்னை முதன்மைப்படுத்துவதற்கு அவனிடம் என்ன தான் திறமை குடி கொண்டிருக்கிறது?

ஐந்துக்குப் பின்னால் ஆறாவது அறிவாக அடையாளம் கொண்டு அந்தரங்கமாய் விளங்கும் அற்புதத் தொகுதி ஒன்று மனிதம் என்ற அர்த்தம் பொறித்துப் பதிக்கப்பட்ட முத்திரை போல் அகிலம் தன்னை ஆட்சி செய்யும் பகுத்தறிவு என்னும் சக்தியே அது. இந்தப் பகுத்தறிவின் பயன்பாட்டைப் பாங்குடனே கடைப்பிடித்து பண்புடன் வாழ்பவனே முழுமனிதன் ஆகிறான், பிறவிப் பயனை அடைகின்றான். ஏற்றமிகு சமுதாயத்தில் எழுச்சிதனைப் பெறுகின்றான்; ஆற்றலுறு வையத்தில் ஆசிதனை அடைகின்றான். தயவு, தாட்சண்யம் கொண்ட பணிவு மனப்பான்மை வேண்டும். தீமைகளைக் களைந்து நன்மைகள் புரியவேண்டும். எப்பொழுதும் இன்முகம் காட்டி இன் சொல் பேச வேண்டும். பழகும் விதத்தில் பொலியும் பசுமை உள்ளம் வேண்டும். பொறுமை எனப் போற்றும் புண்ணியப் பேறு கொண்ட உணர்வு வேண்டும். எல்லா உயிர்களையும் நேசிக்க வேண்டும். ஆசை, கோபம் என்பவற்றை அறவே ஒழித்தல் வேண்டும். மனதை ஒருமுகப் படுத்தும் பக்குவநிலை வேண்டும். இதனால் தெளிவான சிந்தனையும் செயற்திறனும் உருவாகும். எதனையும் சாதிக்கும் சாதுரியம் கைகூடும். "உயிர்களிடத்தில் அன்பு வேண்டும், தெய்வம் உண்மையென்று தானறிதல் வேண்டும். வைரமுடைய நெஞ்சு வேண்டும். இது வாழும் முறைமையடி பாப்பா" என்ற மகாகவி பாரதியாரின் பாடலை மனதில் இருத்திச் செயற்படவேண்டும்.

பெரியோரைக் கனம் பண்ணும் பேராற்றல் வேண்டும். பெரும் பணிவுடன் அவர்களைக் கனம் பண்ணுதல் வேண்டும். உண்மையையே பேசவேண்டும். நல்லதையே செய்ய வேண்டும். "உள்ளதைச் சொல்லி நன்மையை" செய்தால் உலகம் உன்னிடம் மயங்கும். நிலை உயரும் போது பணிவு கொண்டால் உயிர்கள் உன்னை வணங்கும்" என்பது தத்துவப் பாடலின் முக்கிய வரிகளாகும்

உங்கள் மீது ஒருவர் வசை பாடினால் அல்லது வை துரைத்தால் என்ன செய்வீர்கள்? முன்பு கூறிய பொறுமை என்ற பேறு நிலைக்க அதற்குக் கொஞ்ச வேலை கொடுங்கள். புன்முறுவல் செய்யுங்கள். பேச்சைத் தவிர்த்துச் சிலையாக இருந்துவிடுங்கள். அதுதான் தெய்வத்தின் சந்நிதியாகும். உங்களை வசை மொழிந்தவரே உங்களை வாயார வாழ்த்தும் நிலை கூட உருவாகலாம். எனவே எண்ணத்தில் உயர்ந்து நில்லுங்கள். ஏற்றம் பெறும் பெருமை சுமந்து நிற்பீர்கள்.

வளலாய். முருகுப்பிள்ளை- செல்லத்தம்பி.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org




சுடர் சிந்தனை :- '' அன்பினால் உலகையே வெல்ல முடியும் ''

ஆசிரியர் பொன்.சக்திவேல் தொகுத்து வழங்கும்

# இலகுவழி ஆங்கிலம்

**BY Pon. Sakthivel AIAB (Lond) ACEA (Lond) Special English Trained Teacher (E.S.U Sri Lanka.)**

**15.07.2009 Continuity.....**

| | |
|---|---|
| 66. She / has / arrived. | அவள் வந்துவிட்டாள். |
| 67. It seems / colder / today. | இன்று மிகக் குளிர்போல் தெரிகிறது. |
| 68. I'm / nearly / ready. | நான் கிட்டத்தட்ட ஆயத்தமாகிவிட்டேன். |
| 69. I / hope / so. | நான் அப்படித்தான் நம்புகிறேன். |
| 70. I / dont / like/ noises. | எனக்கு சத்தம் பிடிக்காது. |
| 71. The basket / is/ full. | கூடை நிரம்பியுள்ளது. |
| 72. I'm/ on / the/ floor. | நான் தரையில் உள்ளேன். |
| 73. They're / reading. | அவர்கள் படிக்கிறார்கள். |
| 74. I / hope / we / win. | நாங்கள் வெல்வோம் என நம்புகிறேன். |
| 75. It / looks like / cheese. | இது பார்க்க சீஸ்போல் உள்ளது. |
| 76. Get / a / seat / for / him. | அவனுக்கு ஒரு ஆசனம் எடு. |
| 77. She / doesn't / look / well. | அவள் நலமாக இருப்பதாகத் தெரியவில்லை. |
| 78. Let / him / cry / on his / own. | அவனை அவன் விருப்பப்படி அழவிடு. |
| 79. There / isn't any / milk / in the fridge. | குளிரூட்டியில் அறவே பால் இல்லை. |
| 80. This / bottle / is / empty. | இந்தப் போத்தல் வெறுமையாக உள்ளது. |
| 81. You're / in / the / street. | நீ வீதியில் உள்ளாய். |
| 82. I don't / work / here. | நான் இங்கு வேலை செய்யவில்லை. |
| 83. It / will / arrive / soon. | அது விரைவில் வந்துவிடும். |
| 84. He / waited / all / night. | அவன் இரவுமுழுவதும் காத்திருந்தான். |
| 85. It's not / a serious / error. | இது பாரதூரமான பிழை அல்ல. |
| 86. He's / at / the gate. | அவன் கதவடியில் உள்ளான். |
| 87. We're / on the / road. | நாங்கள் வீதியில் உள்ளோம். |
| 88. That's / a / possible / plan. | அது ஒரு முடியக்கூடிய திட்டம். |
| 89. Please / give me / a hand. | தயவுசெய்து எனக்கு உதவுங்கள். |
| 90. She's / very / upset. | அவள் மிகவும் குழம்பிப்போய் உள்ளாள். |
| 91. She is / terribly / wounded. | அவள் பயங்கரமாகக் காயமடைந்துள்ளாள். |
| 92. It / is beginning / to get / dark. | இருட்டத்தொடங்கிவிட்டது. |
| 93. This / letter / is important. | இந்தக் கடிதம் முக்கியமானது. |
| 94. She / was / at / her lunch. | அவள் பகல் உணவு அருந்திக் கொண்டிருந்தாள். |
| 95. She / spent / the night / with / us. | அவள் இரவை எங்களுடன் கழித்தாள். |
| 96. Teach / them / again. | அவர்களுக்கு திரும்ப படிப்பி. |
| 97. We / have / got / new / ones. | நாங்கள் புதியனவற்றைப் பெற்றுள்ளோம். |
| 98. I / can't / bear / travelling / by bus. | என்னால் பஸ்ஸில் பிரயாணம் செய்வதைச் சகிக்க முடியாது. |
| 99. We were / shouting / for / you. | நாங்கள் உன்னை உரத்து அழைத்தோம். |
| 100. I / have / no / news / of him. | எனக்கு அவனைப்பற்றிய தகவல் ஒன்றும் கிடைக்கவில்லை. |

## MANNER WORD GROUPS

### பண்புச் சொற்கூட்டங்கள்

One of the most important functions of a language is to describe "how" things are done and "how" things happen. In English this work is done most often by certain words. We can call these words manner words. It is very important to train your ogans of speech in using the frequently one among them. Therefore a collection of word- groups containing the frequently- occurring manner words are given below. Pay particular attention to each of them and to the way each other of them is used. Pick up each word group and utter in aloud several times. Remember this. There is no use in learning the meaning of a word in isolation. So keep uttering the word- groups.

மொழியில் மிக முக்கியமானவற்றில் ஒன்று எப்படி நடைபெற்றது, எப்படி நிகழ்ந்தது என விவரித்தல் ஆகும். ஆங்கிலத்தில் இவ்வகையான சொற்கள் அதிக மாகப் பாவிக்கப்டுகின்றன. இச்சொற்களை பண்புச் சொற்கள் என நாங்கள் அழைப் போம்.

இது மிக முக்கியமானதாகும். உம்முடைய பேச்சுக் குரலோசையை அடிக்கடி வளம்படுத்துதல் முக்கியமானதாகும். ஆகவே ஒருதொகைச் சொற்தொகுதிகளை பண்புச் சொற்களாகக் கீழே தருகின்றோம். ஒவ்வொரு சொற்கூட்டத்தையும் சத்தமாகப் பலமுறை உரத்த குரலில் கூறிப்பழகுங்கள். ஞாபகத்தில் கருத்துக்களை தனிமைப்படுத்திப் படிக்கவேண்டியதில்லை. ஆகவே எல்லா சொற்தொகுதிகளையும் உரத்து வாசிக்கவும்.

01. He boldly went inside.
அவன் தைரியமாக உள்ளே சென்றான்.

02. He was watching them curiously.
அவன் அவர்களை ஆர்வத்துடன் கவனித்தான்.

03. They came specially for this purpose.
அவர்கள் விசேஷமாக இதற்காகவே வந்தார்கள்.

04. He explained it to me quite plainly.
அவன் இதுபற்றி எனக்கு எளிதான முறையில் விளக்கினான்.

05. He told me everything quite sincerely.
அவன் எனக்கு ஒவ்வொன்றையும் மிகப் பண்பாகச் சொன்னான்.

06. I know him slightly.
எனக்கு அவனைக் கொஞ்சம் தெரியும்.

07. He listened intently to the speech.
அவன் பேச்சை ஆவலுடன் கேட்டான்.

08. They rudely ignored all his advice.
அவர்கள் அவனுடைய அறிவுரைகள் எல்லாவற்றையும் முரட்டுத்தனமாகப் புறக்கணித்தார்கள்.

09. You must try for it seriously.
நீ இதற்குப் பிரயத்தனமாக முயற்சிசெய்ய வேண்டும்.

10. He died quickly after that.
அதற்குப் பின் அவன் விரைவாக இறந்தான்.

11. He hugged me tightly.
அவன் என்னை இறுகக் கட்டிப்பிடித்தான்.

12. As soon as he told her, she left the room obediently.
அவன்அவளுக்குச் சொல்லியவுடன்அவள் பணிவாக அறையை விட்டுச் சென்றாள்.

13. The plates sparkled brightly.
அந்தக் கோப்பைகள் பிரகாசமாக ஒளிர்ந்தன.

14. He faced all that cooly and collected.
அவன் எல்லாவற்றிற்கும்மென்மையாகவும் மிருதுவாகவும்முகத்தைக் காண்பித்தான்.

15. He looked at me severely.
அவன் என்னை கடுமையாகப் பார்த்தான்.

16. He stood there calmly, as if nothing had happened.
எதுவும் நடக்காததுபோல் அவன் அங்கு அமைதியாக நின்றான்.

17. He listened to me patiently.
அவன் நான் கூறியவற்றை பொறுமையாகக் கேட்டான்.

18. Prices have gone down sharply.
விலைகள் வெகுவாகக் குறைந்தன.

19. He sent it back promptly on Monday.
அவன் அதனைத் தாமதமின்றித் திங்கட்கிழமை திருப்பி அனுப்பினான்.

20. Remove each of them separately.
அவை ஒவ்வொன்றையும் தனித்தனியாகப் பிரிக்கவும்.

21. He talks very softly.
அவன் மிகவும் மிருதுவாகப் பேசுகிறான்.

22. They'' ll do the painting cheaply for you.
அவர்கள் உனக்கு மிகக் குறைந்தசெலவில் பெயின்ற் அடிப்பார்கள்.

23. He was laughing somewhat foolishly.
அவன் முட்டாள் தனமாகச் சிரித்தான்.

24. He was badly in need of her help.
அவனுக்கு அவளுடைய உதவி மிகத் தேவையாக இருந்தது.

இவற்றின் தொடர்ச்சி எதிர்வரும் புதன்கிழமை
இலகுவழி ஆங்கிலம் - 27இல் வெளிவரும்......

மேலதிக தொடர்புகளுக்கு :-
உதயன் கல்விச்சுடர்,
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி - 071-4273035,021-2223837

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






நாகர் கோயிலில் உள்ள சரித்திரப் பிரசித்தி பெற்ற பூர்வீக நாகதம்பிரான் ஆலயத்தை வடமராட்சி கிழக்கு உதவி அரச அதிபர் மா.ஸ்ரீஸ்கந்தகுமார் தலைமையில் கடந்தவாரம் ஐவர் கொண்ட குழு சென்று பார்வையிட்டது. அப்போது எடுக்கப்பட்ட படங்களை மேலே காணலாம்.

# வெளிமாவட்டங்களில் இருந்து இங்கு உத்தியோகத்தர்கள்; தேர்தல் மோசடிகளுக்கு ஆயத்தமாவதாக அமைகின்றது

## குற்றஞ்சாட்டுகிறார் சுரேஷ் பிரேமச்சந்திரன்

யாழ்ப்பாணம், ஜூலை 24

யாழ்ப்பாணம் மாநகரசபையின் தேர்தல் கடமைகளுக்காக பல்வேறு மாவட்டங்களிலும் இருந்தும் உதவித்தலைமை உத்தியோகத்தர்களாக 80 சிங்கள உத்தியோகத்தர்கள் இங்கு வரவுள்ளனர். ஒரேயொரு மாநகரசபைக்கு நடைபெறும் தேர்தல் மட்டுமல்ல ஒரு சிறிய பகுதியில் நடைபெறும் தேர்தலாகவும் இது உள்ளது. இதற்கு இங்குள்ள உத்தியோகத்தர்கள் போதுமானதாக இருக்கும்போது வெளியிலிருந்து சிங்கள உத்தியோகத்தர்களை கடமைக்கு அமர்த்துவது தேர்தல் மோசடிகளுக்கு ஆயத்தமாகவே அமைகிறது. எக்காரணம் கொண்டும் வெளியிடங்களைச் சேர்ந்தவர்களை நியமிக்க வேண்டிய தேவை இல்லை.

யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஸ் பிரேமச்சந்திரன் நேற்று வியாழக்கிழமை நடத்திய செய்தியாளர்கள் சந்திப்பில் இவ்வாறு தெரிவித்தார்.

யாழ்.பருத்தித்துறை வீதியில் அமைந்துள்ள தமிழ் தேசியக் கூட்டமைப்பு அலுவலகத்தில் நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஸ் பிரேமச்சந்திரன் செய்தியாளர்களைச் சந்தித்தார்.

அங்கு அப்போது அவர் மேலும் கூறியதாவது:

தமிழர் கூட்டமைப்பு, ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி, தமிழர் விடுதலைக் கூட்டணி, ஐக்கிய தேசியக் கட்சி ஆகிய நான்குமே இங்கு போட்டியிடும் முக்கிய கட்சிகள். ஏற்கனவே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இந்தத் தேர்தலில் மோசடிகள் நடக்கும் என்பதை எடுத்துக் கூறிவருகின்றது. டக்ளஸ் தேவானந்தாவை அரசு பெரும் நெருக்குவாரம் கொடுத்தே தங்களது வெற்றிலைச் சின்னத்தில் போட்டியிட வைத்துள்ளது.

ஒவ்வொரு நாளும் அமைச்சர்கள் வந்து வாக்குறுதிகளை வழங்கியவண்ணம் உள்ளனர். தேர்தல் சட்ட விதிகளுக்கு இது முரணானது. சிங்கள உத்தியோகத்தர்களை நியமிப்பதன் மூலம் தங்களுக்கு கீழ் உள்ள உத்தியோகத்தர்களை மிரட்டி தங்களுக்குச் சாதகமாக வாக்கு மோசடிகளைப் பயன்படுத்த அரசு முனைகிறதோ என்ற சந்தேகம் வலுக்கிறது. யாழ்ப்பாணத்தில் சுதந்திரக் கட்சி மேயர் ஒருவரின் நிர்வாகம் ஏற்படப் போவதாக தென்பகுதியில் பிரசாரங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

1981 இல் மாவட்ட அபிவிருத்திச் சபைத் தேர்தலில் ஏற்பட்ட கதி இந்தத் தேர்தலில் நடக்கக் கூடாது. கிழக்கு மாகாணசபைத் தேர்தலும் மோசடியுடனேயே நடத்தப்பட்டது. அதே மாதிரியான நிலைமை யாழ்ப்பாணத்திற்கும் வவுனியாவுக்கும் ஏற்படக் கூடாது.

இங்கு இராணுவம் மற்றும் பொலிஸ் உத்தியோகத்தர்கள் 40 ஆயிரம் வரை உள்ளனர். தேர்தலை முன்னிட்டு மேலதிக பொலிஸ் உத்தியோகத்தர்கள் வரவுள்ளதாக அறிவிக்கப்படுகின்றது. இராணுவத்தை தேர்தல் கடமைகளில் ஈடுபடுத்தக் கூடாது. ஒரு மாநகரசபைத் தேர்தலை நடத்த இங்குள்ள பொலிஸார் போதாதா?

கொழும்பில் இருந்து சிங்கள உத்தியோகத்தர்கள், பொலிஸார் வருவது நிச்சயம் ஒரு மோசடிக்கான ஆயத்தம் என்றே நாம் கருதுகின்றோம்.

இது நிறுத்தப்படவேண்டும். ஜனநாயகத்தில் நம்பிக்கை மிக்க இந்தியா உட்பட சர்வதேசமும் தேர்தல் கண்காணிப்பாளர்களும் இந்தத் தேர்தலை நிறுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும் - என்றார்.

செய்தியாளர்களுடனான இந்தச் சந்திப்பில் யாழ்.மாநகரசபையின் முதன்மை வேட்பாளர் மு.றெமிடியஸ், வேட்பாளர் கே.என்.கனகரத்தினம், யாழ்.தேர்தல் முகவர் எஸ்.குணநாயகம் ஆகியோரும் உடன் இருந்தனர்.

(அ-111)

# அவுஸ்ரேலிய தேசிய இரசாயனவியல் பரீட்சை

## நாளை யாழ்.மத்தியகல்லூரி மற்றும் வேம்படி மகளிர் கல்லூரியில்

யாழ்ப்பாணம், ஜூலை 24

வருடாந்தம் நடைபெற்றுவரும் அவுஸ்திரேலியன் தேசிய இரசாயனவியல் பரீட்சை நாளை சனிக்கிழமை காலை 9 மணிக்கு யாழ்.மத்தியகல்லூரி, யாழ். வேம்படி மகளிர் கல்லூரி ஆகிய பாடசாலைகளில் நடைபெறவுள்ளது. இப் பரீட்சை கனிஸ்ட, சிரேஸ்ட ஆகிய இரண்டு பிரிவு மாணவர்களுக்கும் நடத்தப்படும் என பரீட்சை இணைப்பாளர் ஆசிரியர் அ.லோகநாதன் அறிவித்துள்ளார்.

பரீட்சையில் பங்குபற்றவுள்ள பாடசாலைகளும் அதற்குரிய சுட்டிலக்கங்களும் பரீட்சை நடைபெறும் நிலையங்களும் வருமாறு:

✱ யாழ்.மத்திய கல்லூரி பரீட்சை நிலையம்: யாழ்.மத்தியகல்லூரி (870143), யாழ்ப்பாணக் கல்லூரி வட்டுக்கோட்டை (870144), யாழ்.சென்.ஜோன்ஸ் கல்லூரி (870845), யாழ்.சென்.பற்றிக்ஸ் கல்லூரி (870146), யாழ்.இந்துக் கல்லூரி (870147), கரவெட்டி விக்னேஸ்வராக் கல்லூரி (870183), நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம் (870184), பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி (870185), யாழ்.திருக்குடும்பக் கன்னியர் மடம் (870186).

✱ யாழ்.வேம்படி மகளிர் கல்லூரி பரீட்சை நிலையம்: சுண்டுக்குளி மகளிர் கல்லூரி (870188), கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி (870187), வேம்படி மகளிர் கல்லூரி (870148), சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி (870189), பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் கல்லூரி (870194), சாவகச்சேரி இந்துக் கல்லூரி (870195), கரவெட்டி சென்றல் (870196).

(அ-7)

# அரச ஊழியர்களின் போக்குவரத்துக்கென இன்று முதல் இரு விசேட பஸ்சேவைகள்

யாழ்ப்பாணம், ஜூலை 24

வடமாகாண இலங்கைப் போக்குவரத்துச் சபையின் பருத்தித்துறை, காரைநகர் டிப்போக்களினால் அரச ஊழியர்கள் பயணம் செய்வதற்கென விசேட பஸ் சேவைகள் இன்று வெள்ளிக்கிழமையிலிருந்து ஆரம்பிக்கப்படுவதாக சபையினது பிரதான பிராந்திய முகாமையாளர் தெரிவித்துள்ளார்.

புதிய ஏற்பாட்டின் பிரகாரம் பருத்தித்துறை பேரூந்து நிலையத்திலிருந்து 750 ஆம் இலக்கப்பாதை வழியாக காலை 6.50 மணிக்கு புறப்படும் பஸ் சேவை யாழ்.கச்சேரி ஊடாக யாழ்.பஸ் நிலையத்தைச் சென்றடையும். அவ்வாறே மாலை 4.15 மணிக்கு யாழ்.பஸ் நிலையத்தில் இருந்து புறப்படும் பஸ் கச்சேரி ஊடாகப் பருத்தித்துறை சென்றடையும். அதன் ஊர்காட்டிப் பலகையில் அரச ஊழியர்கள் மட்டும் என்று போடப்பட்டிருக்கும்.

காரைநகர் பேரூந்து நிலையத்திலிருந்து புறப்படும் 782 ஆம் இலக்க பஸ் காலை 6.50 மணிக்கு யாழ்ப்பாணம் நோக்கி புறப்பட்டு யாழ்.பஸ் நிலையம் ஊடாக கச்சேரி வரை அரச ஊழியர்களதும் பொது மக்களதும் நன்மை கருதி நடத்தப்படும். மாலை 4.30 மணிக்கு கச்சேரியிலிருந்து புறப்பட்டு பஸ் நிலையம் ஊடாக காரைநகர் சென்றடையும்.

இதேவேளை தென்மராட்சி அரச ஊழியருக்கான பேரூந்து சேவையொன்று விரைவில் ஆரம்பிக்கப்படும் என்றும் பிரதான பிராந்திய முகாமையாளர் தெரிவித்துள்ளார்.

(அ-07)

# ஜக்ஸனுக்கு கடைசியாக சிகிச்சை அளித்த டாக்டரின் அலுவலகத்தில் அதிரடிச் சோதனை!

லொஸ் ஏஞ்சல்ஸ், ஜூலை 24

மைக்கல் ஜக்ஸனுக்கு கடைசி நேரத்தில் சிகிச்சை அளித்த டாக்டர் கான்ராட் முர்ரேவின் அலுவலகத்தில் பொலிஸாரும், எவ்.பி.ஐ. அதிகாரிகளும் அதிரடி சோதனை நடத்தியுள்ளனர். ஜக்ஸன் மரணத்திற்கான முக்கிய ஆதாரங்கள் கான்ராடின் அலுவலகத்தில் இருக் கக்கூடும் என்று பொலிஸார் நம்புகின்றனர். மைக்கல் ஜக்ஸன் மரணமடைந்தபோது கடைசி நேரத்தில் அவருடன் இருந்தவர் இந்த டாக்டர்தான். இவர் கடைசி நேரத்தில் போட்ட ஊசிகளும், கொடுத்த மருந்துகளும்தான் உயிரைப் பறித்துள்ளன என்ற ஒரு சந்தேகம் உள்ளது.

இதனால்தான் இவரை ஆரம்பத்தில் விசாரித் பொலிஸார் தொடர்ந்து தங்களது சந்தேக வளையத்தில் வைத்துள்ளனர். இந்தச் சந்தேகம் வலுக்கக் காரணம், ஜக்ஸன் குடும்பத்தினர் அவரது மரணம் குறித்து தகவல் அறிந்து வீட்டுக்கு வருவதற்குள் இந்த டாக்டர் அங்கிருந்து வேகமாகப் போய் விட்டார் என்பதே. தற்போது ஜக்ஸன் மரணத்தை கொலை யாகக் கருதி பொலிஸார் விசாரித்து வருகின்றனர்.

காரணம், ஜக்ஸனுக்குக் கொடுக்கப்பட்ட புரோபோபால் என்ற மயக்க மருந்து அதிக அளவில் அவருக்கு செலுத்தப்பட்டுள்ளது. இதனால் இந்த சந்தேகம் வலுத்துள்ளது. டாக்டர் கான்ராட் முர்ரேவின் அலுவலகத்தை போதைப்பொருள் தடுப்பு ஏஜென்ஸியைச் சேர்ந்த 12 இற்கும் மேற்பட்ட அதிகாரிகள், பொலிஸார், எவ்.பி.ஐ. அதிகாரிகள் ஆகியோர் முற்றுகையிட்டுச் சோதனை நடத்தியுள்ளனர்.





யாழ்ப்பாணம் முகாமையாளர் கழகம் யாழ்.பல்கலைக்கழகத்தில் மூலதனச் சந்தை தகவல் நிலையத்தைத் திறந்து வைத்தபோது எடுக்கப்பட்ட படங்கள்.

இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தின் தலைவர் உதயசிறி காரியவாசம் நிலையத்தை நாடா வெட்டி திறந்து வைப்பதை முதலாவது படத்திலும் முகாமைத்துவம் தொடர்பான புத்தகத்தை யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் என்.சண்முகலிங்கன் உதயசிறி காரியவாசத்திடம் இருந்து பெற்றுக் கொள்வதையும் அருகில் பாதுகாப்பு மற்றும் எக்சேஞ்ச் கொமிசன் தலைவர் சன டி சில்வா பல்கலைக்கழக முகாமைத்துவபீடத் தலைவர் பேராசிரியர் என்.நடராஜ சுந்தரம் ஆகியோரையும் இரண்டாவது படத்தில் காணலாம். (படங்கள்: லக்ஸ்மன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மங்கள சமரவீர புலனாய்வுத் திணைக்களத்தில் வாக்கு மூலம்; எந்தச் சவாலையும் எதிர்கொள்ளத் தயாராம்




கொழும்பு, ஜூலை 24

எந்தவொரு சவாலையும் எதிர் கொள்வதற்கு தாம் தயாராகவே உள்ளார் என்று ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி - மக்கள் பிரிவின் தலைவரும் வெளிவிவகாரத்துறை முன்னாள் அமைச்சருமான மங்கள சமரவீர எம்.பி. தெரிவித்துள்ளார். அவர் குற்றப் புலனாய்வுத் திணைக்கள அதிகாரிகளின் அழைப்பின் பேரில் வாக்குமூலம் வழங்குவதற்காக நேற்று வியாழக்கிழமை குற்றப்புலனாய் வுத் திணைக் களத்துக்கு சென்றிருந்தார். அவர் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்துக்குள் செல்வதற்கு முன்பாக ஊடகங்களுக்கு வழங்கிய பேட்டியிலேயே இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அவர் ஊடகங்களுக்கு மேலும்கூறியவை வருமாறு: -

நான் எந்தவொரு சவாலையும் எதிர் கொள்வதற்குத் தயாராகவே உள்ளேன். எவருக்கும் அடிபணிய மாட்டேன். ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ எனது நண்பர். அதற்காக ஜனாதிபதி முப்படையினரின் வெற்றியில் குளிர்காய்ந்துகொண்டு நாட்டில் ஜனநாயகம், உயிர்வாழ்வதற்கான உரிமை, பேச்சுச் சுதந்திரம் ஆகியவற்றைக் குழி தோண்டிப் புதைப்பதற்கு முயற்சிப்பதை என்னால் வாய்பொத்தி மௌனமாகப் பார்த்துக்கொண்டிருக்க முடியாது.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி - மக்கள் பிரிவின் ஊடகச் செயலாளரைப் படுகொலை செய்வதற்கான முயற்சி ஒன்று ஓரிரு நாள்களுக்கு முன் இடம்பெற்றுள்ளது. பத்திரிகையாளர் லஸந்த விக்கிரமதுங்கவைப் படுகொலை செய்தவர்களே மோட்டார் சைக்கிளில் வந்து கட்சியின் தேசிய அமைப்பாளரும் ஊடகச் செயலாளருமான ரிரான் அலஸை அச்சுறுத்தியுள்ளனர். அதைத் தொடர்ந்து ரிரான் அலஸ் குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் அழைக்கப்பட்டு விசாரிக்கப்பட்டுள்ளார். இவை எல்லாம் 'அரசியற் பழிவாங்கல்' நாடகத்தின் அத்தியாயங்களே ஆகும். இவ்வாறான செயற்பாடுகளுக்காக எனது பழைய நண்பர் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ நிச்சயம் வெட்கித் தலைகுனிய வேண்டும். நான் எதற்காகவும் வெட்கப்படவேண்டிய அவசியம் கிடையாது. - என்றார். (அ-சி)



யாழ்ப்பாணம் மாநகர சபைத் தேர்தலுக்கு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் சார்பில் பணிகளை முன்னெடுக்க ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவினால் விசேடமாக அனுப்பப்பட்ட மின் வலு அமைச்சர் மகிந்தானந்த அளுத்கமகே சரித்திர பிரசித்தி பெற்ற மாவிட்டபுரம் கந்தசுவாமி கோயிலுக்குச் சென்று வழிபாடாற்றினார்.

அவ்வேளை ஆலயத்தின் ஆதீன கர்த்தரும் பிரதம குருவுமான து.சண்முகநாதக்குருக்கள் அவரை ஆசீர்வதிக்கும் போது எடுக்கப்பட்ட படம் இது. 515 ஆவது பிரிகேட்டின் சிவில் நிர்வாகப் பொறுப்பாளர் மேஜர் எச்.எம். நவரத்ன பண்டாரவும் காணப்படுகிறார்.

## வேலணையிலும்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மீனவர்களின் மூன்று அடையாள அட்டைகளும் கரையொதுங்கியுள்ளன. அவை நீதிவானிடம் ஒப்படைக்கப்பட் டுள்ளன.

இதேவேளை கடந்த செவ்வாய்க் கிழமை புங்குடுதீவிலும், எழுவைதீவிலும் கரையொதுங்கிய இரண்டு சடலங்களும் தமிழ் நாட்டைச் சேர்ந்தவர்களுடையவை என்று அடையாளம் காணப்பட்டுள்ளன.

புங்குடுதீவில் கரையொதுங்கிய சடலம் செந்தில்குமார் நடராஜா என்பவரது என்றும் எழுவை தீவில் கரையொதுங்கிய சடலம் கணேஷ் முனியராஜ் என்பவருடையது என்றும் அடையாளம் காணப்பட்டுள்ளன. (அ-167-78)

## அமெரிக்க...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவிக்கப்பட்டது.

எரிக் சுவாட்ஸ் இலங்கைக்குப் புதியவரல்லர். ஆழிப்பேரலைப் பாதிப்பிலிருந்து மீளுவதற்கான நடவடிக்கைகளைக் கையாளும் ஐ.நா. பிரிவின் பிரதி விசேட தூதராக 2005 முதல் 2007 வரை அவர் இங்கு பணிபுரிந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.

## இலங்கைக்கு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கடுமையாக மீறியுள்ளது என்ற கரிசனை காரணமாக நாணய நிதியத்தின் உத்தேச கடன் கடும் சர்ச்சைக்குள்ளாகியுள்ளது.

இலங்கையில் 25 வருட கால மோதல் முடிவிற்கு வந்து இரு மாதங்களுக்குப் பின்னரும், மோதல் காரணமாக இடம்பெயர்ந்த 2 இலட்சத்து 80 ஆயிரம் மக்கள் சர்வதேச மனிதாபிமான சட்டங்களை மீறி தடுப்பு முகாம்களில் அடைக்கப்பட்டுள்ளனர்.

சர்வதேச மனிதாபிமான அமைப்புகள், ஊடகங்கள் மற்றும் சர்வதேச கண்காணிப்பாளர்கள் முகாம்களுக்குச் செல்வதற்கு அரசு விதித்துள்ள கடும் கட்டுப்பாடுகள் காரணமாக, அரசின் துஷ்பிரயோகங்களுக்கான வாய்ப்பு அதிகமாகவுள்ளது.

அரசு முகாம்களில் ஆயிரக்கணக்கானவர்களை அடைத்து வைத்துள்ள தருணத்தில், அது கேட்டதை விட 600 மில்லியன் அதிகமாக அங்கீகாரமளிப்பது, மோசமான நடத்தைக்கான வெகுமதியாகவே தென்படுகின்றது என மனித உரிமை கண்காணிப்பகத்தின் ஆசியாவிற்கான இயக்குநர் பிரட் அடம்ஸ் தெரிவித்துள்ளார்.

சர்வதேச நாணய நிதியம் தனது அணுகுமுறையை மாற்றவேண்டும் என அவர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

அரசின் தற்போதைய கொள்கைகள், மனித உரிமை தராதரத்தை மதிப்பதற்குத் தவறியுள்ளன. மோதலுக்கு பிந்திய புனர்நிர்மாணப் பணிகளுக்கு அச்சுறுத்தலாகியுள்ளன. நல்லிணக்கம் மற்றும் ஸ்திரத் தன்மையை பாதித்துள்ளன. இதன் காரணமாக சர்வதேச நாணய நிதியத்தின் கடனுதவிக்கான நோக்கத்தை பாதித்துள்ளன.

அரசு இடம் பெயர்ந்த மக்களை அவர்களுடைய விடுதலை மற்றும் நடமாட்ட சுதந்திரத்தை மீறும் வகையில் முகாம்களில் தடுத்து வைத்துள்ளது. யுத்தத்தின் இறுதி நாள்களில் என்ன நடைபெற்றது என்பதை ஏனையவர்களுடன் பகிர்ந்துகொள்வதை இதன் மூலம் தடை செய்துள்ளது.

முகாம்களில் காணப்படும் மோசமான நிலை குறித்து மனிதாபிமான அமைப்புகள் கருத்துக் கூறுவதை அது தடுத்துள்ளது. விமர்சிப்பவர்களை நாட்டை விட்டு வெளியேற்றியுள்ளது.

விடுதலைப் புலிகளுடன் தொடர்புடையவர்கள் எனச் சந்தேகிக்கப்படும் நபர்கள் ஏனையவர்களுடன் எவ்வித தொடர்பும் அற்ற விதத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். சிலர் முறைகேடாக நடத்தப்பட்டுள்ளனர்.

மோதலின் போது சர்வதேச மனிதாபிமானச் சட்டங்கள் மீறப்பட்டமைக்குப் பொறுப்புக் கூறுவதற்காக மேற்கொள்ளப்பட்ட அனைத்து முயற்சிகளையும் அரசு தடுத்துள்ளது.

முகாம்களுக்கு நாளொன்றிற்கு 4 இலட்சம் அமெரிக்க டொலர் செலவாகின்றது என மதிப்பிடப்பட்டுள்ளது.

வரவு -செலவு பற்றாக்குறைக்குத் தீர்வு காணும் அதேவேளை, முகாம்களுக்கு தேவையான நிதி வளங்களை எவ்வாறு பெறப் போகிறீர்கள் என சர்வதேச நாணய நிதியம் இலங்கை அரசிடம் கேள்வி எழுப்ப வேண்டும்.

இலங்கைக்கான ஒவ்வொரு தொகுதி கடனுதவியையும் மனித உரிமைகளில் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் ஏற்படும் பட்சத்திலேயே வழங்க வேண்டும். - என்று தெரிவித்துள்ளது. (அ-சி)

## மடு உற்சவத்துக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இதுதொடர்பில் பொலிஸ் தலைமையகம் விடுத்துள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு -

யுத்தம் முடிவடைந்ததையடுத்து நடபெறும் முதலாவது மடுத் திருத்தல உற்சவம் இதுவாகும். அதனால் அதனை வெகு விமரிசையாக நடத்த அரசு நடவடிக்கை எடுத்துள்ளது.

இந்நிலையில் மடு உற்சவத்துக்காக வருகை தரும் பக்தர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்த படைத் தரப்பினரால் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

அந்த நடவடிக்கைகளை இனிவரும் வருடங்களின் போதும் தொடர்ந்தும் பின்பற்றவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இந்தத் திருவிழாவுக்காக வருகை தரும் பக்தர்கள் மடு தேவாஸ்தான வளாகத்துக்குள் பிரவேசிக்கும் சந்தியில் வைத்தே இராணுவத்தினரால் பதிவு செய்யப்படுவர். அந்தப் பதிவுகளை கணனி மயப்படுத்தவும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன - என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (சி)

## அகதிகளை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வயதான தன்னை மாத்திரம் விடுவித்து விட்டு குடும்பத்தின் ஏனைய அங்கத்தவர்கள் நால்வரையும் படையினர் சட்ட விரோதமான முறையில் தடுத்து வைத்திருக்கின்றனர் என மனுதாரர் தமது மனுவில் தெரிவித்திருக்கின்றார்.

தொண்டை நோயாளியான ஜேசுதாஸ் நிர்மலராஜ் உரிய மருத்துவ வசதியின்றி அவதிப்படுகிறார். குடும்பத்தவர்கள் தமக்கு விருப்பமான உணவைத் தாம் சமைத்துச் சாப்பிட முடியாத நிலைமை. எந்தவிதக் குற்றச் செயலோடும் தொடர்புபடாத தமது குடும்பத்தவர்களைப் படையினர் இப்படித் தடுத்து வைத்திருப்பதற்கு இலங்கையின் எந்தச் சட்டத்திலும் இடமில்லை. சட்டவிரோதமான இந்தத் தடுப்புக்காவலுக்கு எதிராக உயர்நீதிமன்றம் உரிய நிவாரணம் பெற்றுத் தந்து அவர்களை விடுவிக்க உத்தரவிட வேண்டும். - இப்படி மனுதாரர் தமது மனுவில் மேலும் தெரிவித் துள்ளார்.

இந்த மனுவில் வவுனியா கோயில் குளம் முகாம் பொறுப்பதிகாரி, வைரவப் புளியங்குளம் கிராம சேவை அதிகாரி, கேணல் சரத் பெரேரா பிரதேச படை அதிகாரி, வவுனியா தெற்குப் பிரதேச செயலர், வவுனியா அரச அதிபர், வவுனியா படைகளின் தளபதி, இராணுவத் தளபதி, சட்டமா அதிபர் உட்பட பலர் எதிர் மனுதாரர்களாகக் குறிப்பிடப்பட்டுள்ளனர்.


வாங்கி விட்டீர்களா
தரம் 1, 2, 3, 4, 5 (ஜூன், ஜூலை)
அம்மா
அன்னை
தாய்
அறிவு
தேடல்
தரம் 1 - 5
கணிதம் + நுண்ணறிவு
(வரவு, Easyway) தரம் 6 - 11
Way to win, Try to win
(கணிதம்)
கற்சுமி
நாவலர் வீதி, யாழ்.
தொ.பே. 222 7442

Diploma in Computerized Accounting
#Manual Accounting
#MYOB #Tally
#Quick Book Pro
#Accpack
புதிய பிரிவுகள் ஆரம்பமாகவுள்ளன.
பதிவுகளை 26.07.2009 முன் நேரில் மேற்கொள்ளவும்
324, Palaly Road, Jaffna.
Supported by UNDP/JRRP

தான்சன் கல்வி நிலையம்
101/10, ஸ்ரான்லி வீதி. (மக்கள் வங்கிக்கு அருகில்)
கணக்கியல்/முகாமைத்துவ டிப்ளோமா கற்கைக்கான
விரிவுரைகள் ஆரம்பமாகி நடைபெறுகின்றன
பிரிவு I வரும் சனி, ஞாயிறு 9 மணி
பிரிவு II திங்கள் - வெள்ளி 4 - 6 மணி
நிதிமுகாமைத்துவம் தமிழ், ஆங்கில மூலம்

விற்பனையாகிறது
A/L 2009
ஒகஸ்ட் பரீட்சைகளுக்குரிய எதிர்பார்க்கை வினாக்கள் முன்மாதிரி வினாக்களை உள்ளடக்கிய 8 நூல்கள்
வணிகக்கல்வி
ATN A.T.நந்தன்
(B.Com (Hons), MBA (Reading), CMA (SL))
யாழில் ஏக விநியோகஸ்தர்:
அன்னை புத்தகசாலை
யாழ்ப்பாணம். 222 9881

Diploma in English
★ Spoken with Grammar.
★ Phonetics Practices.
★ Computer Based Practices
★ Practice Exercises.
★ Spoken Practices.
Letter Writing.
Listening..
40% off
பதிவுகளை 26.07.2009 க்கு முன்பு மேற்கொள்ளவும்.
மேலதிக விபரங்களுக்கு நேரில்,
324, பலாலி வீதி, யாழ்ப்பாணம்
MCS Supported By UNDP/JRRP
www.mcsitcampus.org

விரைவு! பாதுகாப்பு! நம்பகத்தன்மை!
திருமுருகன் கொம்நெற்
259, கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம்
T.P 2227835
இல. 46, ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி
குறைந்த கட்டணத்தினாலான உள்நாடு வெளிநாடுகளுக்கான துரித தபால்கள் பொதிகள் சேவைகள்
FedEx Express
வாடிக்கையாளரின் நலன் கருதி
லண்டன், சுவிஸ், பிரான்ஸ் நாடுகளுக்கு 3 கிலோவுக்கு குறையாத 1 kg பொதிகளிற்கு 500/- ரூபா வீதமும்,
கனடாவுக்கான 3 கிலோவுக்கு குறையாத 1 kg பொதிகளிற்கு 500/- ரூபா வரையான விசேட சலுகை.
உள்நாடு, வெளிநாடுகளுக்கு கடிதங்கள், அன்பளிப்பு பொருட்கள், உணவுப்பொருட்கள், உடுபுடவைகள் மற்றும் VDO பிரதிகள், CD க்கள் என்பன ஏற்றுக்கொள்ளப்படும்.
குறிப்பிட்ட முகவரியில் ஒப்படைக்கப்படும்.
TCN Express
2B, Nelson Place,
Colombo 06.
ஞாயிறு விடுமுறை தினங்களிலும் சேவைகளைப் பெற்றுக்கொள்ளலாம்.

என்றும் உங்கள் நண்பன் சிங்கர் அனுசரணையில்
பரீட்சையை எதிர் நோக்கும் மாணவர்களுக்கான கருத்தரங்கு
இடம்: குமாரசாமி மண்டபம், யாழ்.இந்துக் கல்லூரி
காலம்: நாளை (25.07.2009) சனிக்கிழமை மு.ப. 9.30 மணி
கருத்துரை வழங்குபவர்:
ம.சின்னத்தம்பி (சிரேஷ்ட விரிவுரையாளர் கல்வியியற்றுறை, யாழ்.பல்கலைக்கழகம்)
SINGER
யாழ்.மண்ணின் பரம்பரைத் தோழன்
கருத்துரைகள்
★ பரீட்சையை எதிர் நோக்கும் மாணவர்கள் அறிந்திருக்க வேண்டிய விடயங்கள்.
★ பரீட்சை எழுதும் மாணவர்கள் எதிர் கொள்ளும் பிரச்சினைகளும் தீர்வுகளும்.
அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.
T.P.: 021 222 4389, 021 222 5408
யாழ்ப்பாணம், நெல்லியடி, சுன்னாகம், சாவகச்சேரி.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 24.07.2009 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.